# Hospitalization and Hindu Life Style

N.Subaraj

Published by

Centre for External Degrees and Professional Learning

South Eastern University of Sri Lanka

# Hospitalization and Hindu Life Style

## விருந்தோம்பலும் இந்து வாழ்வியல் முறையும்

Faculty of Arts and Culture

South Eastern University of Sri Lanka

University Park, Oluvil, Sri Lanka.

Title: Hospitality and Hindu Life Style

Author: Mr.N.Subaraj

Type of Book: Text Book

First Edition, 2023

ISBN:

© 2023, South Eastern University of Sri Lanka

All rights reserved. No part of this text book may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic or mechanical, photocopying and recording or otherwise without the prior permission of copyright owner and the author.

# முன்னுரை

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்பினைத் தொடர்கின்ற மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கில் ஒவ்வொரு பாட அலகுக்கும் பாடநூல்களை அறிமுகப்படுத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவது சிறப்பிற்குரியது. இத்திட்டத்தினை முன்னெடுத்துவரும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கைகள் நிலையத்தின் முயற்சி போற்றுதற்குரியது.

மாணவர்களின் பாடநூல் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் இந்து நாகரிகத்தினை பிரதான பாடமொன்றாக தெரிவு செய்துள்ள மாணவர்களுக்கு இந்து நாகரிகத்தில் விருந்தோம்பல் தொடர்பான அடிப்படை அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடநூல் இந்து நாகரிகத்தின் முதலாம் வருட முதலாம் பருவ பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

இந்நூல் மாணவர்களது சுயகற்றலை இலகுபடுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதிப் பகுதியிலும் மாதிரி வினாக்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன் அத்தியாயங்களில் உள்ள விடயங்கள் தொடர்பான மேலதிக அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான நூற்பட்டியலும் தரப்பட்டுள்ளது. இப்பாடநூலினை மாணவர்கள் தமது சுய கற்றலுக்காக பயன்படுத்துவதுடன் இந்நூலில் தரப்பட்டுள்ள மாதிரி வினாக்களைக் கொண்டு பயிற்சிகளையும் பெற முடியும்.

இந்நூலாக்க முயற்சிக்கு துணைபுரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றிகள். இப்பாடநூல் தயாரித்தல் செயற்றிட்டத்தை திறம்பட செயற்படுத்திக் கொண்டிருக்கும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கைகள் நிலையத்தின் இயக்குனர் மற்றும் சிரேஸ்ட பதிவாளர், கலை கலாசார பீடத்தின் வெளிவாரிக் கற்கைக்கான பொறுப்பாளர்கள் மற்றும் பீடாதிபதி ஆகியோருக்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும். அத்தோடு நூலாக்கப் பணியில் எனக்கு உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

திரு.ந.சுபராஜ்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிகப்பிரிவு, மொழித்துறை
கலை கலாசார பீடம்
தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| **முன்னுரை** | | **iii** |
| **உள்ளடக்கம்** | | **iv** |
| **பாடவிதானம் பற்றிய குறிப்புகள்** | | **vi** |
| **அத்தியாயம் 01: விருந்தோம்பல் ஓர் அறிமுகம்** | | **1** |
| 1.1 | விருந்தோம்பல் ஓர் அறிமுகம் | 2 |
| 1.2 | விருந்தோம்பல் பற்றிய வரைவிலக்கணம் | 2 |
| 1.3 | விருந்தோம்பலின் பயன்பாடுகள் | 3 |
| 1.4 | சமயமும் விருந்தோம்பலும் | 5 |
| **அத்தியாயம் 02: இந்துக்களின் வாழ்க்கை முறையில் விருந்தோம்பல்** | | **9** |
| 2.1 | இந்துக்களின் வாழ்க்கை முறை – ஓர் அறிமுகம் | 10 |
| 2.2 | பண்டிகைகளில் வெளிப்படும் விருந்தோம்பல் | 13 |
| 2.3 | திருவிழாக்களில் விருந்தோம்பல் | 19 |
| 2.4 | பண்டைத்தமிழ் மக்களின் வாழ்வியலில் விருந்தோம்பல் | 21 |
| **அத்தியாயம் 03: இந்து மூலங்களில் விருந்தோம்பல் சிந்தனைகள்** | | **32** |
| 3.1 | வேதத்தில் விருந்தோம்பல் | 33 |
| 3.2 | உபநிடதத்தில் விருந்தோம்பல் | 36 |
| 3.3 | மகாபாரதத்தில் விருந்தோம்பல் சிந்தனைகள் | 45 |
| 3.4 | இராமாயணத்தில் விருந்தோம்பல் | 47 |
| 3.5 | தொல்காப்பியத்தில் விருந்தோம்பல் | 53 |
| 3.6 | ஆசாரக்கோவையில் விருந்தோம்பல் | 55 |
| 3.7 | நாலடியாரில் விருந்தோம்பல் சிந்தனைகள் | 59 |
| 3.8 | திருக்குறளில் விருந்தோம்பல் | 60 |
| 3.9 | சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல் | 63 |
| 3.10 | மணிமேகலையில் விருந்தோம்பல் | 65 |

**அத்தியாயம் 04: இந்துசமயத்தில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும் 69**

4.1 சமூக நல்லுறவு – ஓர் அறிமுகம் 70

4.2 திருமந்திரத்தில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும் 71

4.3 சமயக்குரவரின் திருப்பாடல்களில் விருந்தோம்பல் 80

4.4 பெரிய புராணத்தில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும் 84

4.5 ஔவையார் பாடல்களில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும் 93

# பாடவிதானம் பற்றிய குறிப்புக்கள்

தலைப்பு : விருந்தோம்பலும் இந்து வாழ்வியல் முறையும்

குறியீடு : HCM 10032

வருடம் : முதலாம் வருடம்

பருவம் : முதலாம் பருவம்

தரப்புள்ளி : 02

**அறிமுகம்**

வெளிவாரிக் கற்கை மாணவர்களுக்கான பண்பாடு, விழுமியம், கலாசார சமூகநெறிசார் கற்கையில் இந்துநாகரிகம் ஓர் முக்கியத் துறையாகும். இவ்வாய்வுத்துறை குறித்த ஆரம்ப அறிவினை வழங்கத்தக்க முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இப்பாட அலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**குறிக்கோள்**

இந்துப் பண்பாட்டில் விருந்தோம்பல் குறித்த தெளிவான புரிதலுக்கான அடிப்படை அறிவினை விருத்தி செய்வதே இப்பாட அலகின் குறிக்கோளாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இப்பாட அலகினை மாணவர்கள் திறம்பட கற்பதன் மூலம் இந்துப் பண்பாட்டில் விருந்தோம்பல் தொடர்பான அடிப்படை சிந்தனைகள் குறித்தும், விருந்தோம்பலின் தோற்றம், வளர்ச்சி பற்றிய தெளிவான அறிமுக அறிவினையும் பெற்றுக் கொள்வர்.

# அத்தியாயம் 01

# விருந்தோம்பல் ஓர் அறிமுகம்

**உள்ளடக்கங்கள்**

1.1 விருந்தோம்பல் ஓர் அறிமுகம்

1.2 விருந்தோம்பல் பற்றிய வரைவிலக்கணம்

1.3 விருந்தோம்பலின் பயன்பாடுகள்

1.4 சமயமும் விருந்தோம்பலும்

**அத்தியாய சுருக்கம்**

பண்டைய கால சமுதாய பழக்கவழக்கங்களிலே விருந்தோம்பல் மிக உயர்ந்த அறமாக திகழ்ந்தது. விரும்பி ஒருவருக்கு ஈயும் முறைகளை இந்து மதம் தெளிவாக எடுத்துரைக்கின்றது. அதுவே விருந்தோம்பல் எனப்படுகின்றது. மனித வாழ்வில் அத்தியாவசிய தேவைகள் உணவு, உடை, உறையுள் என்பனவாகும். அவற்றிலே உணவு முதன்மையானது. இவ்வுலகிலே மிக கொடுமையான விடயமாக பசி காணப்படுகின்றது. அதனை களைவதற்கே விருந்தோம்பல் அறம் தோற்றுவிக்கப்பட்டது. விருந்தோம்பல் என்பதற்கு கழக தமிழ் அகராதி " புதிதாய் வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரிப்பு நடத்துவது" என சுட்டுகின்றது. இரந்து வந்தவருக்கு இல்லை எண்ணாமல் இயன்றதை தருவதே ஈகையெனும் கொடையாகும். மனிதர்களுக்குரிய சிறப்பான பண்பினையே விருந்தோம்பல் எடுத்துக்காட்டுகின்றது. அந்தவகையில், ஈரம் நிறைந்த உள்ளத்தால் பிறர் விழிநீரையும் மனவலியையும் துடைக்கும் இச்செயற்பாட்டை இந்து சமயம் தொன்றுத்தொட்டு பேணி வருகின்றது.

**நோக்கங்கள்**

1. விருந்தோம்பலின் அடிப்படையை அறிந்து கொள்வர்.
2. விருந்தோம்பலின் அவசியத்தை புரிந்து கொள்வர்.
3. விருந்தோம்பலின் பண்புகளை அறிந்து கொள்வர்.
4. விருந்தோம்பலின் பயன்பாடுகளை விளங்கிக்கொள்வர்.

**கற்றல் பேறுகள்:**

1. விருந்தோம்பலின் அர்த்தத்தை அறிந்து விளக்குவார்.
2. விருந்தோம்பலின் அவசியத்தை புரிந்து விளக்குவார்.
3. விருந்தோம்பலின் பண்புகளை அறிந்து அட்டவணைப்படுத்துவார்.
4. விருந்தோம்பலின் பயன்பாடுகளை புரிந்து பட்டியற்படுத்துவார்.

## 1.1 விருந்தோம்பல் ஓர் அறிமுகம்

விருந்தோம்பலுக்கு உலகளாவிய வரையறை இல்லை, அது பல அடுக்குகளைக் கொண்டது. மற்றும் பல்வேறு இறையியல் மற்றும் தத்துவக் கண்ணோட்டங்களைத் வெளிப்படுத்துகின்றது. விருந்தோம்பலை பல்வேறு வழிகளில் வரையறுக்கலாம். முதலாவதாக, இது ஒருவரின் வீட்டின் தனியுரிமையின் அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது. ஒருவரின் வீட்டிற்கு அல்லது ஒருவரின் இருப்புக்குள் மற்றவர்களை வரவேற்பது. இரண்டாவதாக, இறையாண்மையுடன் இணைக்கப்பட்ட ஒரு பிராந்தியத்தின் நிபந்தனையற்ற விருந்தோம்பல் அல்லது எல்லையற்ற விருந்தோம்பலாகும். இது அழைக்கப்படாத விருந்தாகும். இது எதிர்பார்க்கப்படாத ‘ மற்றவர்களை’ தகுதியற்ற வரவேற்பிற்கு அழைக்கிறது.

## 1.2 விருந்தோம்பல் பற்றிய வரைவிலக்கணம்

விருந்தோம்பல் என்பது பயணிகளுக்கு வரவேற்பை வழங்குதல் அல்லது வீட்டை விட்டு வெளியே ஒரு வீட்டை வழங்குதல் என்று பொருள்படும். விருந்தோம்பல் ஆங்கிலத்தில் ‘ ஹொஸ்பிட்டலிட்டி’ (Hospitality) என அழைக்கப்படுகின்றது. ‘ ஹொஸ்பிட்டலிட்டி’ (Hospitality) என்ற வார்த்தை லத்தீன் வார்த்தையான ‘ ஹோஸ்பெஸ்’ (Hospes) என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் பார்வையாளர் அல்லது அந்நியன் என்பதாகும்.

விருந்தோம்பல் நம் பண்பாட்டில் ஓர் அங்கமாக காணப்படுகிறது. விருந்து என்ற சொல்லுக்கு புதுமை என்றும் பொருள் உண்டு. விருந்தினர் என்றால் புதியவர். நம் இருப்பிடத்திற்குப் புதிதாக அல்லது மேலதிகமாக வருபவர் விருந்தினர். விருந்தினர்

மற்றும் அவரது புரவலர் ஆகியோருக்கு இடையிலான உறவு அல்லது பொதுவாக உயிர்களுக்கு ஆதரவளிக்கும் குணத்தை இந்த விருந்தோம்பல் குறித்து நிற்கின்றது.

தத்துவஞானி இம்மானுவேல் கான்ட், விருந்தோம்பலை ஒரு அரசியல் சூழலில் வெவ்வேறு கலாசாரங்களைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைக்கும் அல்லது வரையறுக்கும் அங்கமாக கருதுகின்றார். கான்ட்டைப் பொறுத்தவரை, விருந்தோம்பல் என்பது அனைத்து மனிதர்களுக்கும் "இயற்கை உரிமை" ஆகும். அதாவது விருந்தோம்பல் உரிமை என்பது நம் ஒவ்வொருவருக்குமுரிய இயற்கையான உரிமை என்கிறார்.

இதேபோல், அலாஸ்டெய்ர் மேக்கிண்டயர் விருந்தோம்பலை ஒரு உலகளாவிய நடைமுறையாகவும், சமூகத்தின் சரியான செயல்பாட்டின் மையமாகவும் பார்க்கிறார். விருந்தோம்பல் என்பது ஒரு விருந்தினருக்கும் மற்றுமொரு விருந்தினருக்கும் இடையிலான உறவாகும். செவாலியர் டி ஜாகோர்ட் எனும் அறிஞர் விருந்தோம்பல் பற்றி விவரிக்கும் போது, மனிதநேயத்தின் மூலம் முழு பிரபஞ்சத்தையும் கவனித்துக் கொள்ளும் ஒரு சிறந்த ஆன்மாவின் நற்பண்பே விருந்தோம்பல் என்கிறார். விருந்தோம்பலை மக்கள் தமது வீடுகளில் மற்றவர்களை நடத்தும் விதம், ஹோட்டல்களில் விருந்தினர்களை வரவேற்கும் சேவை என்றும் வரைவிலக்கணப்படுத்தலாம்.

## 1.3 விருந்தோம்பலின் பயன்பாடுகள்

விருந்தோம்பல் இந்துக்களின் மனிதநேயப் பண்புடன் தொடர்புபட்ட ஒரு வழமையாக பண்டைக்காலம் முதல் இருந்து வருகின்றது. ஆனால் ஒரு நிறுவனத்தின் விற்பனையின் அளவை அதிகரிக்க அல்லது குறைக்க விருந்தோம்பல் ஒரு அடிப்படை பாத்திரத்தை வகிக்கிறது. இன்று உலகளாவிய ரீதியில் விருந்தோம்பல் பழமையான வணிகங்களில் ஒன்றாக வளர்ந்து வருகின்றது. விருந்தோம்பல் ஐரோப்பாவில் இருபதாம் நூற்றாண்டில் பெரும் வருவாய் ஈட்டும் துறையாக மாற்றமடைந்தது. 1800 களின் பிற்பகுதியில், ஓய்வு சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பற்றிய கருத்து ஐரோப்பா முழுவதும் பரவியது. சுற்றுலாவில் ரயில் சவாரிகள், அரண்மனை பாணியிலான ஹோட்டல்கள், வெப்ப குளியல் மற்றும் பனிச்சறுக்கு விடுதிகள் போன்றன முக்கியம் பெற்றன. குறிப்பாக சுவிட்சர்லாந்து ஆடம்பர சுற்றுலாவிற்கான சின்னமாக மாறியது. சுற்றுலாப் பயணிகளுக்கான சிறப்பு தங்குமிடங்கள் மற்றும் சேவைகளை உருவாக்கிய முதல்

நாடுகளில் சுவிட்சர்லாந்தும் ஒன்றாகும். இச்சுற்றுலாத் துறையுடன் விருந்தோம்பல் சமாந்தரமான வளர்ச்சியைப் பெற்றது.

இந்த நவீன உலகில் புதிய தலைமுறை பணக்கார விருந்தினர்கள் வசதியான தங்குமிடங்கள், வசதியான சேவைகள், சிறந்த உணவுவகைகள் போன்றவற்றினை அனுபவிப்பதில் அதிக ஆர்வங் கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள். இதனால் தமது ஓய்வு நேரங்களை சுற்றுலாப் பயணங்களிலும் விருந்துக் களியாட்டங்களிலும் செலவிடுகின்றனர். இதனால் விருந்தோம்பல் இன்று வருவாய் தரும் ஒரு துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. இதன் ஒரு படியாக விருந்தோம்பல் மேலாண்மை பள்ளிகள் (Hospitality Management School) தோற்றம் பெற்றன. 1893 இல் லொசானில் ஹோட்டல் மேலாண்மை பள்ளியொன்று முதன் முதலாக நிறுவப்பட்டது. இப்பள்ளி விருந்தோம்பல் கல்வியில் முன்னோடியாக உள்ளது.

விருந்தோம்பல் ஆன்மீக வாழ்க்கைக்கு அடிப்படையாகும். இது நாம் செய்யும் செயல்கள் மற்றும் நாம் கொடுக்கும் பரிசுகளில் மட்டும் வெளிப்படுத்தப்படவில்லை. தாராள மனப்பான்மை விருந்தோம்பல் பண்பாட்டில் வெளிப்படுகின்றது. விருந்தோம்பல் மனிதகுலத்தை வரையறுக்கும் நல்லொழுக்கமாக அமைகின்றது. விருந்தோம்பல், சுற்றுலாவிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்களிக்கும் அல்லது சார்ந்திருக்கும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய ஒரு பரந்த துறையாகும்.

மக்கள் உயிர் வாழ உணவு இன்றியமையாதது. மனிதர்களின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றில் முதலிடம் பிடித்தது உணவே ஆகும். உணவின் அடிப்படைத் தேவையை நன்கு உணர்ந்த நம் முன்னோர்கள் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற உயிர் சத்துக்கள் நிறைந்த உணவுப் பொருட்களை உண்டு வந்தனர். மேலும் தாம் உண்பதோடு மட்டுமல்லாமல் உணவில்லாமல் வறுமையில் வாடிய ஏழை எளியவர்களுக்கும் வீட்டிற்கு வரும் புதியவர்களுக்கும் உணவினை வழங்கி அவர்கள் உண்பதைக் கண்டு மகிழ்ந்தனர்.

விருந்தோம்பல் பண்புடையவர்கள் வறுமையில் வாடினாலும் அவர்கள் வாழ்வில் மேன்மை அடைவார்கள். ஊடல் தணிக்கும் வழிகளில் ஒன்று விருந்தினர் வருகை. தம்மை நாடிவரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உண்டி முதலியவற்றை

அளித்து மிக்க அன்போடும் ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பது வாழ்க்கையில் தலை சிறந்த பண்பாக கருதப்படுகிறது.

## 1.4 சமயமும் விருந்தோம்பலும்

பண்டைய கிரேக்கத்தில், விருந்தோம்பல் ஒரு உரிமையாக இருந்தது. விருந்தாளி தனது விருந்தினர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். பண்டைய கிரேக்க xenia அல்லது theoxenia என அழைக்கப்படும் சடங்கு விருந்தளிப்போருக்கும் விருந்தினருக்குமிடையிலான நட்புறவை வெளிப்படுத்தியது. ஹோமரிக் காவியங்களிலும், குறிப்பாக ஒடிஸியிலும் இந்த சடங்கு உறவுமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. கிரேக்க சமுதாயத்தில், ஒருவர் விருந்தோம்பலைச் செய்வதைப் பொறுத்தே அவரது சமூக அந்தஸ்து தீர்மானிக்கப்பட்டது. பண்டைய கிரேக்கத்தில் வழிபடப்பட்ட ‘ ஹெஸ்டியா’ எனும் தெய்வம் விருந்தோம்பலைக் குறித்தது.

இந்துமதத்தில் விருந்தோம்பல் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்பட்டது. விருந்தினரை தெய்வமாகப் போற்ற வேண்டுமென (அதிதி தேவோ பவ) இந்துமதம் வலியுறுத்தியது. விருந்தினர்களைக் கடவுளாகவும் இம்மதம் கருதியது. விருந்தோம்பல் வழங்குபவருக்கு வெகுமதி அளிக்கும் ஒரு விருந்தாளி கடவுளுக்கு நிகரானவர் என்று வெளிப்படுத்தப்படும் பல கதைகள் இந்துமத மூல நூல்களில் காட்டப்பட்டுள்ளது. இந்துமதத்தில் விருந்தாளிகளுக்கு வீடுகள் உட்பட அனைத்து சமூக சூழ்நிலைகளிலும் கருணை காட்டுவது முக்கிய விழுமியமாகக் காட்டப்படுகின்றது.

யூத மதமும் விருந்தோம்பலுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. ஆதியாகமம் 18:1-8 மற்றும் 19:1-8 ஆகிய பகுதிகளில் விருந்தோம்பல் பற்றிய சிந்தனைகள் காணப்படுகின்றன. விருந்தினர்களை வரவேற்பது முக்கியமானதொரு நடைமுறையாக இதில் விபரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, புரவலன்கள் தங்கள் விருந்தினர்களுக்கு ஊட்டச்சத்து, ஆறுதல் மற்றும் பொழுதுபோக்கை வழங்க வேண்டுமென இதில் கூறப்பட்டுள்ளது. மேலும் விருந்தோம்பலின் முடிவில் விருந்தளிப்பவர்கள் தங்கள் விருந்தினர்களை பாதுகாப்பாக வீட்டை விட்டு வெளியே அழைத்துச் செல்ல வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. யூதமதத்தில் விருந்தோம்பலின் போது அச்சிலா (உணவு), ஷ்டியா (குடி பானம்), லினா (தங்குமிடம்) ஆகிய மூன்று விடயங்கள் முக்கியம் பெற்றுள்ளன.

கிறிஸ்தவத்தில், விருந்தோம்பல் என்பது ஒரு நல்லொழுக்கமாகும். இரந்து வருபவர்கள் மீது அனுதாபத்தைக் காட்டுவதோடு அவர்களை வரவேற்று உணவளிக்க வேண்டுமென கிறிஸ்தவம் கூறுகின்றது. இது கிறிஸ்தவ வேதாகமத்தில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, பார்வையாளர்களின் கால் கழுவுதல் எனும் வழமையைக் கூறலாம்.

பைபிளின் புதிய ஏற்பாட்டில் இயேசுவால் விருந்தோம்பல் பண்பாடு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. ' உண்மையில், விருந்தினரை வரவேற்பவர்கள் என்னை வரவேற்றவர்களாகின்றார்கள்' என இயேசு கூறுகின்றார். சில மேற்கத்திய நாடுகள் பைபிளை அடிப்படையாகக் கொண்டு குடியேறியவர்களுக்கான ஒரு விருந்தோம்பல் கலாசாரத்தை உருவாக்கியுள்ளன.

நம் சகோதர சகோதரிகளை அக்கறையுடனும் விருப்பத்துடனும் வரவேற்பதை அசாதாரணமான சந்தர்ப்பங்களுக்கு மட்டுப்படுத்தப்படாமல், அனைத்து விசுவாசிகளுக்கும் அவர்களின் அன்றாட வாழ்வில் சேவை செய்யும் பழக்கமாக மாற்ற வேண்டும் என புனிதர்களில் ஒருவரான ஜான் பால் கூறுகின்றார். கத்தோலிக்க பாரம்பரியத்தில் தனிநபர்கள் மிகவும் விரும்பத்தக்க விருந்தினர்களாகவும் கருதப்படுகிறார்கள். இவர்களைத் தொடர்ந்து முறையே மரியாதைக்குரிய விருந்தினர்கள், மத குருமார்கள், மிக முக்கியமான நபர்கள் ஆகியோர் விரும்பத்தக்க விருந்தினர்களாக உள்ளனர்.

விருந்தோம்பல் செய்பவர்களுக்கு சொத்துக்கள், குடும்ப உறவுகள், உடலின்பம் ஆகியவற்றில் பற்று காணப்படக்கூடாது.. விருந்தோம்பல் என்பது மனதின் சந்திப்பு, இது சுய, சமூக நிகழ்வுகள், அனுபவங்கள், இயற்கை மற்றும் கடவுளின் மர்மத்தைப் பற்றி விவாதிக்கவும் கேள்வி கேட்பதற்குமான ஒரு களமாகும். எந்தவொரு விருந்தினரும் தங்களின் வருகையினால் விருந்தளிப்பவர்கள் வீணான சிரமங்களுக்குள்ளாகின்றார்கள் என்றோ அவர்களக்கு பணவிரயம் ஏற்படுமென்றோ உணரக்கூடாது என கிறிஸ்தவம் கூறுகின்றது. கிறிஸ்துவிடம் தங்கள் இதயங்களைத் திறந்தவர்களால் மட்டுமே ஒரு முறையான விருந்தோம்பலை வழங்க முடியும், இதனை வழங்க மனிதர்களுக்கு மென்மை, பயபக்தி முதலிய குணங்கள் காணப்பட வேண்டுமென ஜான் பால் கூறுகின்றார்.

இஸ்லாம் சமயத்திலும் விருந்தோம்பல் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இஸ்லாமியர்களின் முக்கிய ஐந்து கடமைகளில் விருந்தோம்பலும் (ஸகாத்) ஒன்றாகும். முஹம்மது நபி அவர்கள் 'முஸ்லிம்கள் தங்கள் விருந்தினரை அன்புடனும் சமாதானத்துடனும் நடத்த வேண்டும்' எனக் கூறுகின்றார்.

இதுபோல், அபு அஜிஸ் இப்னு உமைர் அவர்கள், ' பத்ர் போரின் போது நான் போர்க் கைதிகளில் ஒருவனாக இருந்தேன். அங்கு முஹம்மது, ' கைதிகளை நன்றாக நடத்துமாறு நான் உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்' என்றார். நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, நான் அன்சாரிகளில் ஒருவனாக (மதீனாவில் வசிப்பவர்கள்) இருந்தேன், மதிய உணவு அல்லது இரவு உணவு நேரம் வரும்போது, முஹம்மதுவின் கட்டளையின்படி எனக்கு ரொட்டி வழங்கப்பட்டதால், கைதிகளுக்கு பேரீச்சம்பழம் ஊட்டுவேன்' என்றார். இவ்வாறு இஸ்லாத்தில் விருந்தோம்பலுக்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்றது.

உணவை மையமாகக் கொண்ட விருந்தோம்பல் ஆரம்ப காலத்திலிருந்தே மத பக்தியின் மைய அம்சமாக இருந்தது. தேவைப்படுபவர்களுக்கு உணவளிப்பதற்காகவும், நண்பர்கள், அந்நியர்கள் அல்லது பயணிகளுடன் உறவுகளை வளர்ப்பதற்காகவும் விருந்தோம்பல் செய்யப்பட்டது. ஒரு விருந்தினருக்கு வழங்கப்படும் உணவும் பானமும் கடவுளின் அருளின் அடையாளங்களாகக் கருதப்பட்டன. மதங்களைப் பொறுத்தவரையில் விருந்தோம்பல் ஒரு புனிதமான கடமையாகும். மற்றவர்களுக்கு உணவு வழங்குவதைப் போல மிகவும் எளிமையானதும் ஆழமானதும் எதுவும் இல்லை. நாம் அனைவரும் கடவுளின் விருந்தோம்பலுக்கு விருந்தாளிகளாக இருக்கிறோம், இதனால் மற்றவர்களுக்கு விருந்தோம்பல் செய்ய வேண்டிய கடமை எமக்கு உள்ளது. இவ்வாறு நாம் மற்றவர்களுக்கு விருந்தோம்பல் செய்வது கடவுள்மீது நமக்குள்ள அன்பின் அடையாளமாகும். ஏனென்றால் விருந்தினர்கள் மேசையில் இருக்கும்போது கடவுள் எப்போதும் நம்முடன் இருகிறார் என்பது மதங்களின் பொதுவான கருத்தாக உள்ளது.

**பயிற்சி வினாக்கள்**

1. இந்து சமயம் கூறும் விருந்தோம்பலை ஆதாரமாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக?

   அ) விருந்தோம்பல் என்பதன் வரைவிலக்கணம்

   ஆ) விருந்தோம்பலின் அவசியம்

2. சமயத்திற்கும் விருந்தோம்பலுக்கும் இடையே உள்ள தொடர்புகளை மதிப்பிடுக.
3. " விருந்தோம்பல் இந்துக்களின் மனிதநேய பண்பாகும்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

**உசாத்துணை நூல்கள்**


1. இறையன்பு., இலக்கியத்தில் விருந்தோம்பல், கற்பக புத்தகாலயம்.
2. திருவேணி.வே., சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல், கௌரா பதிப்பகம் குழுமம்.
3. சுபராஜ்.ந., ரதிதேவி,சே., (2019), இந்துக்களின் ஸகாத் நடைமுறையும் இந்துக்களின் விருந்தோம்பற் கோட்பாடும், சர்வதேச ஆய்வு மாநாட்டு ஆய்வுத் தொகுப்பு 2019, இஸ்லாமிய கற்கை மற்றும் அரபுப் பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

# அத்தியாயம் 02

# இந்துக்களின் வாழ்க்கை முறையில் விருந்தோம்பல்

2.1 இந்துக்களின் வாழ்க்கை முறை – ஓர் அறிமுகம்
2.2 பண்டிகைகளில் வெளிப்படும் விருந்தோம்பல்
2.3 திருவிழாக்களும் விருந்தோம்பலும்
2.4 பண்டைத்தமிழ் மக்களின் வாழ்வியலில் விருந்தோம்பல்

## அத்தியாயச் சுருக்கம்

இந்து மக்களின் வாழ்வியலில் திருவிழாக்களும் பண்டிகைகளும் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. அந்த வகையில் திருவிழா என்பது சில குறிப்பிட்ட நாட்களில் மக்கள் ஒன்று கூடி கொண்டாடுவது ஆகும். இதனை உற்சவம், ஊர்வலம் என்றும் பொருள் கொள்ளலாம். அதே போல வருடத்தில் குறிப்பிட்ட நாட்களில் சமய ஈடுபாட்டுடனும் விருந்துகளுடனும் கொண்டாடப்படும் சடங்கு பண்டிகை என அழைக்கப்படும்.

திருவிழா மற்றும் பண்டிகைகளின் முக்கிய கோட்பாடு ஒன்று கூடுதல், கூடி உண்ணுதல், கொண்டாடுதல், மகிழ்ச்சியைப் பகிர்தல் ஆகியவை ஆகும். ஆதலால் திருவிழாக்களிலும் பண்டிகைகளிலும் விருந்தோம்பல் பற்றிய கருத்துக்கள் அதிகளவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பண்டைய காலம் முதல் இந்து மக்கள் தமது பண்பாடு சார் நிகழ்வுகளில் விருந்தோம்பலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளனர். இதற்கு தக்க சான்றாக பண்டைத்தமிழர்களின் வாழ்வியல் முறை அமைந்திருப்பதையும் அவதானிக்கலாம்.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. இந்துக்களின் வாழ்க்கை முறைகள் பற்றி அறிந்து கொள்வர்.
2. திருவிழாக்கள் பற்றி அறிந்து கொள்வர்.
3. திருவிழாக்களில் உள்ள விருந்தோம்பல் பண்பினை புரிந்து கொள்வர்.
4. பண்டிகைகள் பற்றி விளங்கிக் கொள்வர்.
5. பண்டிகை காலங்களில் மக்கள் மத்தியில் வெளிப்படும் விருந்தோம்பல் பண்பினை அறிந்து கொள்வர்.

6. பண்டைத் தமிழ் மக்கள் தம் வாழ்வியல் முறைகளில் விருந்தோம்பலுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வர்.

### கற்றல் பெறுபேறுகள்

1. இந்துக்களின் வாழ்க்கை முறைகள் பற்றி அறிந்து விளக்குவார்.
2. திருவிழாக்கள் பற்றி அறிந்து தெளிவுபடுத்துவார்.
3. திருவிழாக்களில் உள்ள விருந்தோம்பல் பண்புகளைப் பட்டியற்படுத்துவார்.
4. பண்டிகைகள் பற்றி அறிந்து விளக்குவார்.
5. பண்டிகை காலங்களில் மக்கள் மத்தியில் வெளிப்படும் விருந்தோம்பல் பண்புகளை அட்டவணைப்படுத்துவார்.
6. பண்டைத் தமிழ் மக்கள் தம் வாழ்வியல் முறைகளில் விருந்தோம்பலுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை அறிந்து விளக்குவார்.

## 2.1 இந்துக்களின் வாழ்க்கை முறை – ஓர் அறிமுகம்

இயற்கையை இறைவனாகப் பாவித்து இயற்கையோடு மனிதனை வாழ வைக்கும் முறைமையை இந்துசமயம் முன்வைக்கின்றது. மனிதன் ஒவ்வொருவனும் இப்படித்தான் வாழவேண்டும் என்ற நெறிமுறைகளை வகுத்து அதன்படி இறைவனே மனிதனாகத் தோன்றி மக்கள் நன்றாக வாழ்வதற்கு இந்துசமயம் வழிகாட்டுகின்றது. பிறப்பிலிருந்து இறப்புவரை ஒருவன் எப்படி வாழவேண்டும் என்பதையும் அவன் செய்யும் நன்மை, தீமைக்கு என்ன பலன் என்பதனையும் இந்துசமயம் எடுத்துக் கூறுகின்றது.

இந்து சமயத்தின் வாழ்க்கை என்பது அன்பு, அறிவு, ஆற்றல், செல்வம், ஒழுக்கம், ஒற்றுமை, செயல், தியாகம், நம்பிக்கை எனப் பல அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது. இவற்றுடன் சடங்குகள், கிரியைகள், வேள்விகள், விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், பூசை வழிபாடுகள் என்பனவும் இந்துக்களின் சமய வாழ்க்கையில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவை அனைத்தும் நாம் மனிதத்தன்மை பெற்று மனிதன் மனிதனாக வாழ்வதற்கு உதவுகின்றன. ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்பவர்களே இறைவனை அடைய முடியும் என இந்து சமயம் வலியுறுத்துகிறது.

இறைவழிபாடு, சமய அனுட்டானம், தியானம், இறைத்தொண்டுகள், சமய நூல்களைக் கற்றல் மற்றும் பெரியோரைக் கனம் பண்ணுதல் என்பவற்றில் ஈடுபாடு செலுத்துவதன் மூலம் எம் மனதை தேவையில்லா விடயங்களில் செல்ல விடாது தடுக்கலாம். எந்த ஒரு செயலை செய்யத் தொடங்கும் முன்னும் செய்யும் போதும் இறைவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே இருக்கின்றான் என்ற சிந்தனை எமக்கு இருக்க வேண்டும். அப்போது தான் நாம் தீய செயல்களைச் செய்ய மாட்டோம். எமது மனமும் செய்யும் செயல்களும் நல்லவையாக இருக்கும். தீய செயல்களைச் செய்யும் போது துன்பங்களே எம்மை நாடி வரும். அதனால் நாம் நற்செயல்களிலேயே ஈடுபடல் வேண்டுமென்று இந்து சமயம் கூறுகின்றது.

இந்து சமய வழிபாட்டில் சிவமின்றி சக்தியில்லை. சக்தியின்றி சிவம் இல்லை என்ற தத்துவம் உணர்த்தப்படுகின்றது. ஆண், பெண் இருவரில் யார் உயர்ந்தவர்? யார் தாழ்ந்தவர்? என்ற பேச்சுக்கே இடமில்லை. இருவருமே சமம் என்பது ஆலய வழிபாட்டில் பல்வேறு வகையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்துமத தெய்வக்கோட்பாட்டில் அர்த்தநாரீஸ்வரரின் தத்துவமே இதுதான். எனவே ‘ஆணும் பெண்ணும் சேர்ந்தது தான் வாழ்க்கை’ எனும் பால்சமத்துவ சிந்தனையை இந்துமதம் எடுத்துக்காட்டுகின்றது.

அத்தோடு இறைவனுடைய அருளைப் பெறுவதற்கான வழிகளில் தொண்டுகள் செய்தல் முக்கியமானதாகும். இத்தொண்டுகள் சரியை, கிரியை என இருவகைப்படும். இதில் கிரியைத் தொண்டுகளாவன தேவாரம் பாடுதல், வேதம் ஓதுதல், தோத்திரங்கள் சொல்லுதல், திருவிளக்கேற்றுதல் என்பனவாகும். மற்றையது எமது சரீரத்தினால் (உடம்பினால்) செய்யும் தொண்டுகளான ஆலயத்தைக் கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல், பூமாலை கட்டுதல், மற்றும் பிரகாரங்களைச் சுத்தம் செய்தல் போன்ற சரியைத் தொண்டுகளாகும். இத் தொண்டுகளைச் செய்வதன் மூலம் இறைவனது திருவருளைப் பெறுவது மட்டுமல்லாமல் எமது சுயநல மனப்பான்மையை நீக்கி பொதுநலத் தொண்டுகளில் நம்மை ஈடுபாடு கொள்ள வழிவகுக்கின்றது.

இந்துக் கோயில்களிலே நடைபெறும் திருவிழாக்களினால் மனித சமூகமானது புனிதமடைகின்றது. இத்தகைய திருவிழாக்கள் சமூகத்தினை ஒருங்கிணைப்பதற்காகவே நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்டது. முக்கிய திருவிழாவான தேர்த்திருவிழாவின் போது தேரினுடைய வடத்தினை ஏழை, பணக்காரர்

என்ற பேதமின்றியும், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றியும் இழுப்பார்கள். இறைவன் முன்பு நாம் அனைவரும் சமம் என்ற அசைக்க முடியாத வாழ்வியல் நெறி அங்கு உணர்த்தப்படுகிறது.

இந்து சமயப் பாரம்பரியங்களைப் பேணி, அதனை எமது வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கு நாம் கொண்டாடும் விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் பற்றிய அடிப்படை அறிவை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இந்த வகையில் தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, தீபாவளி முதலியவை நாம் கொண்டாடும் பண்டிகைகளில் முக்கியமானவை ஆகும். இவற்றை விட மகாசிவராத்திரி, அமாவாசை, பூரணை, விநாயகசதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, கேதார கௌரி விரதம் போன்ற விரதங்களும் மனித வாழ்க்கை முறையோடு ஒன்று பட்டு விளங்குகின்றன.

இவ்வாறு விழாக்கள், பண்டிகைகள், விரதங்களைக் கொண்டாடும் போதும், அனுட்டிக்கும் போதும் வீடுகளையும், சுற்றுப்புறச் சூழலையும் தூய்மைப் படுத்துகின்றோம். அத்தோடு நாமும் நீராடி புதிய ஆடைகளையும் அணிகின்றோம். புதிய பாத்திரங்களில் சமைத்து இறைவனுக்குப் படைத்து, நமது உறவினர், நண்பர்களுக்கும் கொடுக்கின்றோம். இதனால் இந்து சமயப் பண்டிகைகளும் விழாக்கள் விரதங்களும் மக்களின் அகத் தூய்மையையும், புறத்தூய்மையையும் வளர்ப்பதோடு, மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையையும், ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற சிந்தனையையும் வளர்க்கின்றன. அதனால் இவற்றை முறைப்படி அனுட்டிப்பது முக்கியமான விடயமாகும்.

இந்து மக்களின் முக்கிய குணாம்சங்களில் ஒன்று மற்றைய உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதாகும். ' அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு" என்று திருவள்ளுவர் பெருந்தகையார் எடுத்தியம்பியுள்ளார். அதாவது பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துபவர்களது உடம்பில் உயிர் நிலைத்து வாழும். மற்றவர்களிடத்தில் அன்பில்லாதவர்களது உடம்பானது வெறும் எலும்பைத் தோலினால் போர்த்த வெற்றுடம்பு என்றும் கூறியுள்ளார்.

இவற்றோடு நின்று விடாது நம்நாட்டில் உள்ள பல திருக்கோயில்களுக்கும் சென்று அவற்றை மெய்யன்போடு தரிசிப்பதால் பல்வேறுபட்ட நன்மைகளை நமது வாழ்க்கையில் பெற முடியும். கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் தெய்வீகம் எனப் பல விடயங்களை எடுத்துக் காட்டும் இடங்களாக இந்துக் கோயில்கள்

விளங்குகின்றன. கோயில்களில் காணப்படும் அழகான சிற்பங்கள், ஓவியங்கள் மக்களின் கலை ஆர்வத்தை வளர்ப்பனவாக அமையும். இதன் மூலம் எம் இளைய சமுதாயத்தினர் எமது பண்பாடு, கலாசாரம், கலை அம்சங்களை அழிய விடாது பின்பற்றவும், பாதுகாக்கவும் முடியும்.

இந்துக்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் இந்து சமயத்தோடு இரண்டறக் கலந்திருக்கின்றது. எனவே இந்துக்களின் வாழ்க்கை முறையில் இந்து சமயத்தின் ஒவ்வொரு அம்சமும் வியாபித்திருப்பதைக் காண முடிகின்றது.

## 2.2 பண்டிகைகளில் வெளிப்படும் விருந்தோம்பல்

### (அ) பண்டிகைகள் ஓர் அறிமுகம்

வருடத்தில் குறிப்பிட்ட நாட்களில் சமய ஈடுபாட்டுடனும் விருந்துகளுடனும் கொண்டாடப்படும் சடங்கு பண்டிகை என வழங்கப்படும். நாம் கொண்டாடும் பண்டிகைகள் ஒவ்வொன்றும் உயர்ந்த நோக்கங்களை கொண்டவை. அவற்றின் பயன்களையும் தத்துவங்களையும் புரிந்து கொண்டாடும் போது அவற்றின் பண்பும் பயனும் பல வெளிப்படும்.

மனித வாழ்வில் பிரதான இலட்சியம் அறத்தின் வழியில் வாழ்ந்து முக்தி அடைவதே ஆகும். அந்த இலட்சியத்தை அடைவதற்குரிய வழிகளில் ஒன்றாக பண்டிகைகளும் அமைகின்றன. ஒவ்வொரு மதத்தவரும் தத்தமது பண்டிகைகளை ஒவ்வொரு விதமாக கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இந்து சமயத்தவர்கள் தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பல பண்டிகைகளை கொண்டாடுவது வழமை.

**பொங்கல் பண்டிகைகள்**

சங்ககாலத்தின் அறுவடை காலத்தில் நல்ல மழை பெய்யவும், நாடு செழிக்கவும் பெண்கள் விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்கள். உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல்.

உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்தது வழிபட்டனர். இந்து மக்கள் பொங்கல் பண்டிகைகளை ஆன்மீகப் பொங்கல், தைப் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என நான்கு வகையாக கொண்டாடுகின்றனர்.

01. ஆன்மீகப் பொங்கல் - ஆன்மீகப் பொங்கல் என்பது இறைவனுக்காக செய்யப்படும் பொங்கல் ஆகும்.

02. தைப்பொங்கல் – இது தை மாதத்தில் கொண்டாடப்படுகிறது. தைப்பொங்கலுக்கு சில நாட்களுக்கு முன்னரே கொண்டாட்ட வெடிகள் வெடிக்கத் தொடங்கி விடும். பொங்கலுக்கு தேவையான பொருட்களை ஆயத்தப்படுத்திக் கொள்வர். பல இடங்களில் புதுப்பானை வாங்கி பொங்கல் செய்வர்.

    மேற்குநாடுகளில் பொங்கலுக்கு தேவையான அனைத்து பொருட்களும் கொண்ட பொதிகள் விற்பனைக்கு இருக்கும். வசதிபடைத்த பலர் புத்தாடை வாங்குவர். பொங்கலன்று அதிகாலை எழுந்து முழுகுவர். வீட்டு முற்றத்தில் கோலம் இட்டு அதன் நடுவில் பானை வைப்பர். புதுப்பானையில் புது அரிசியிட்டு முற்றத்தில் பொங்க வைப்பார்கள்.

    புதிய பானைக்கு புதிய மஞ்சளைக் காப்பாக அணிவர். புதிய மஞ்சள் கொத்தையும் புதிய கரும்பையும் புதிய காய்கறிகளையும் அன்று பயன்படுத்துவர். முற்றத்தில் கோலமிட்டு தலை வாழையிலையில் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்கி பொங்கலிடத் தொடங்குவர்.

    இந்துக்கள், சாணத்தில் பிள்ளையார் பிடித்தும் வைப்பார்கள். பொங்கல் பொங்கி வரும் வேளையில் குடும்பத் தலைவன், மனைவி மக்களுடன் கூடி நின்று ”பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!” என்று உரக்கக் கூவி அரிசியை இருகைகளாலும் அள்ளிப் பானையில் இடுவர்.

தனது முதற் பானையை கதிரவனுக்குப் படைத்துப் பின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்த பின்பு தான் நுகர்வார்கள். இது இந்துக்களின் பண்பாடாக தொன்று தொட்டு உள்ளது.

03. மாட்டுப் பொங்கல் - மாட்டுப் பொங்கல் என்பது தைப்பொங்கல் நாளின் மறுநாள் இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை ஆகும். இது பட்டிப் பொங்கல் அல்லது கன்றுப் பொங்கல் எனவும் அழைக்கப்படுகிறது. மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், பசுக்களில் எல்லாத் தேவர்களும் இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகக் கொண்டாடுகின்றனர்.

அன்றைய தினம் மாடுகள் கட்டும் தொழுவத்தினைச் சுத்தம் செய்து கால்நடைகளை குளிப்பாட்டி சுத்தம் செய்வார்கள். மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு பளபளக்கும் வகையில் வண்ணம் பூசி, கூரான கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டிவிடுவார்கள். கழுத்துக்கு தோலிலான வார் பட்டையில் சலங்கை கட்டி அழகு படுத்துவார்கள். திருநீறு பூசி குங்குமப் பொட்டிட்டும் புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும் தயார் செய்வார்கள்.

உழவுக்கருவிகளை சுத்தம் செய்து சந்தனம், குங்குமம் வைப்பார்கள். விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து கருவிகளையும் இதேபோல செய்வார்கள். தாம்பாளத் தட்டுகளில் தோட்டம் மற்றும் காடுகளில் விளைந்த பயிர், தேங்காய், பூ, பழம் போன்றவற்றைப் பூஜைக்காக எடுத்து வைப்பார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட்டப்படும். இதன் பின் பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.

காணும் பொங்கல் - பொங்கல் கொண்டாட்டங்களில் நான்காவது நாள் இடம்பெறும் விழா காணும் பொங்கல் ஆகும். காணும் பொங்கலை கன்னிப் பொங்கல் அல்லது கணுப் பண்டிகை என்றும் அழைப்பர். உற்றார், உறவினர், நண்பர்களை காணுதல் மற்றும் பெரியோர் ஆசி பெறுதல் என்பன இதில் அடங்கும்.

**சித்திரைப் புத்தாண்டு**

சைவ சமயத்தவர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் சித்திரைப் புத்தாண்டும் ஒன்றாகும். இப்பண்டிகையை நாம் வருடந்தோறும் கொண்டாடி வருகின்றோம். சித்திரை முதலாம் நாள் மத்திய கோட்டில் இருந்து வடதிசையை நோக்கிச் செல்லும் சூரியன் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் மூலஸ்தானத்தை கடந்து செல்லும் தினமே இதுவாகும்.

எமது தமிழ் வருடங்கள் பிரபாவ தொடக்கம் பரிதாபி வரை 60 ஆகும். ஒவ்வொரு ஆண்டும் சித்திரை முதலாம் திகதி தொடக்கம் பங்குனி 31ம் தேதி வரை கொண்ட காலப் பிரிவாகும். பிறக்கின்ற ஒவ்வொரு ஆண்டையும் அதற்குரிய பெயரால் அழைத்து ஆண்டின் முதல் நாளை புத்தாண்டாகக் கொண்டாடுவது சைவ மக்களின் வழக்கம். புத்தாண்டுக்கு முன்னுள்ள நாட்களில் வீடு, கோயில் என்பவற்றை கழுவி அவற்றுக்கு வெள்ளை அடித்தல், நிறம் பூசுதல் என்பவற்றில் ஈடுபடுவர். மேலும் மருத்து நீர் வைத்து நிறைகுடம் வைத்து அலங்காரத் தோரணம் கட்டி பொங்கல் வைத்தும் வழிபடுவர்.

புது வருட பிறப்பன்று பெரியவர்களிடம் ஆசி வாங்குதலுடன் கைவிசேடம் பெரும் நிகழ்வும் விசேடமாக இடம்பெறும். கைவிஷேடம் பெறுவதன் மூலம் அவ்வாண்டில் பணப்பெருக்கம் அதிகரிக்கும் என்பது சைவ மக்களின் நம்பிக்கை ஆகும்.

**தீபாவளி**

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்று. தீபங்களை வரிசையாக ஏற்றுதல் என்பது தீபாவளி என்ற சொல்லின் பொருளாகும். இது ஒவ்வொரு ஆண்டும் துலாம் மாதம் எனப்படும் ஐப்பசி மாதத்தின் தேய்பிறை சதுர்த்தசி தினத்தில் அதிகாலையில் பிறக்கின்றது.

இத்தினத்திலேயே தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தீபாவளி பண்டிகை இலங்கையில் உள்ள சைவ சமயத்தவர்களாலும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், நேபாளம் முதலான நாடுகளில் வாழும் சைவ வைணவ சமயத்தவர்களாலும் கொண்டாடப்படுகின்றது.

தீபாவளிப் பண்டிகை பல அறப் பண்புகளை எம்மிடையே வளர்க்கின்றது. இருப்பவர் இல்லாதவர் என்ற இரு பிரிவினரிடையே ஏற்றத்தாழ்வுகளை குறைத்து ஈந்துவக்கும் இன்பம் தரும் பண்டிகையாக தீபாவளிப் பண்டிகை விளங்குகின்றது.

### (ஆ) இந்துப் பண்டிகைகளில் விருந்தோம்பல்

இந்து மக்களிடையே பண்டிகை என்பது ஒரு விசேட நிகழ்வாக காணப்படுகின்றது. இப்பண்டிகை நேரங்களில் மக்களிடத்தில் விருந்தோம்பல் பண்பு வெளிப்படுவதை அதிகம் காணலாம். அந்த வகையிலே பொங்கல் பண்டிகைகளிலும் விருந்தோம்பல் பண்பு அதிகமாக காணப்படுகின்றது. இறைவனுக்கு படைக்கும் ஆன்மீகப் பொங்கலிலும் சூரியனுக்கு படைக்கும் தைப்பொங்கலிலும் மாடுகளுக்கு படைக்கும் மாட்டுப் பொங்கலிலும் உறவினர்களை கண்டதும் அவர்களுடன் கூடி செய்யப்படும் காணும் பொங்கலிலும் பொங்கல் படைத்து முடிந்ததும் கூடி உண்பதை காணலாம்.

வீடுதேடி வருபவர்களை அமர வைத்து உண்ணக் கொடுப்பதோடு பொங்கல் செய்யாத வேறு மதத்தவர்களுக்கும் வீடு தேடிச் சென்று உணவு வழங்கும் முறையும் இந்தப் பண்டிகை காலங்களில் அதிகம் நடைமுறையில் உள்ளது. பொங்கி முடித்ததும் கரும்பு கற்கண்டு மற்றும் சர்க்கரைப் பொங்கல் போன்றவற்றை வாழை இலையில் வைத்து அயலவர்களுக்கு கொடுத்து பகிர்ந்து உண்பது சிறந்த விருந்தோம்பல் பண்பாகும்.

மேலும் சித்திரை புதுவருடப் பிறப்பு தீபாவளிப் பண்டிகை அன்றும் பால் பொங்கல் அல்லது சர்க்கரைப் பொங்கல் செய்து வீட்டுக்கு வருபவர்களுக்கு உண்ணக் கொடுக்கும் வழக்கம் இந்து மக்களின் மத்தியில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி மதிய நேரத்தில் அறுசுவை உணவு சமைத்து உறவினர்களுக்கு கொடுத்து அனுப்புவதுடன் அயலவர்களுடன் பகிர்ந்து உண்பதும் நடைமுறையிலேயே உள்ளது.

மதிய உணவு மாத்திரமன்றி வருடப் பிறப்பு மற்றும் தீபாவளி பண்டிகை காலங்களில் செய்யும் பலகாரங்கள், இனிப்புகள் போன்றவற்றையும் அயலவர் உறவினர்களுடன் பகிர்ந்து உண்பதை காண்பதனூடாக விருந்தோம்பல் பண்பினை பண்டிகை காலங்களில் அவதானிக்க முடிகின்றது.

## 2.3 இந்துத் திருவிழாக்களில் விருந்தோம்பல்

### (அ) திருவிழாக்கள் ஓர் அறிமுகம்

திருவிழா என்பது சில குறிப்பிட்ட நாட்களில் மக்கள் ஒன்று கூடி கொண்டாடுவது ஆகும். இதனை உற்சவம், ஊர்வலம் என்றும் பொருள் கொள்ளலாம். திருவிழாவின் முக்கிய கோட்பாடே ஒன்று கூடுதல், கூடி உண்ணுதல், கொண்டாடுதல், மகிழ்ச்சியைப் பகிர்தல் ஆகியவை ஆகும். பொதுவாக சிறியவர் முதல் பெரியவர் வரை திருவிழா என்றவுடன் ஆர்வம் மற்றும் உற்சாகமடைந்து அதனை வரவேற்க தயாராகி விடுகின்றனர். திருவிழாக்கள் ஓர் இடத்தில் உள்ள மக்களின் நாகரிகம், கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றை பிரதிபலிக்கின்றன.

பொதுவாக திருவிழாக்கள் என்பவை மதம் சார்ந்தவையாகவே இருக்கின்றன. அவை ஏதேனும் நிகழ்ச்சிகளை நினைவு கூறும் விதமாகவோ, இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையிலோ அமைந்திருக்கின்றன. சிறுசிறு கிராமங்களில், ஊர்களில், நகரங்களில் திருவிழாக்கள் தனித்தனியே ஆண்டில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் கொண்டாடப்படுகின்றன.

இத்திருவிழாக்களில் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், தேரோட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இத்திருவிழாவின் போது வெளியூர்களில் இருந்து உறவினர்கள் விருந்தினர்களாக வருகை தருவார்கள். வேலை நிமித்தமாக வெளியூர் சென்றவர்களும் ஊர்த் திருவிழாவிற்கு சொந்த ஊருக்கு வருகை தந்து சொந்த பந்தம் நட்புகளுடன் சேர்ந்து கொண்டாட்டத்தில் பங்கு பெறுகின்றனர்.

அன்றாட பணிகளினால் ஏற்பட்ட களைப்பினை போக்கி புத்துணர்ச்சி தருவது இதுபோன்ற திருவிழாக்கள்தான். குடும்பத்தினரோடு இத்தகைய திருவிழாக்களில் கலந்து கொள்வதன் மூலம் குழந்தைகளுக்கு திருவிழாக்களின் முக்கியத்துவம், கலாசாரம், பண்பாடு, சமூக நோக்கம் போன்றவற்றைக் கற்றுக் கொடுக்கலாம்.

திருவிழாக்கள் கொண்டாடுவதன் மூலம் கவலைகள் பாதியாகக் குறைகின்றன. மகிழ்ச்சியானது இரட்டிப்பாகிறது. உள்ளப் பகிர்தலின் மூலம் மன அழுத்தங்கள் மறைகின்றன. திருவிழாக்கள் ஒற்றுமை, பகிர்ந்துண்ணல், விருந்தோம்பல் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன.

மேலும் இளைய தலைமுறையினருக்கு இவற்றைப் பற்றி கூறுவதன் மூலம் திருவிழாக்களின் நோக்கங்கள், அவற்றின் பயன்கள், கொண்டாடும் முறை ஆகியவை பற்றி தெரிந்து கொள்வதோடு எதிர் காலத்திலும் பாரம்பரியம் மாறாமல் பின்பற்றச் செய்ய முடியும்.

அதுமட்டுமின்றி திருவிழாக்கள் இடம் சார் தளமாற்ற முறையை ஏற்படுத்துகின்றன. திருவிழாக்களில் சமூக ஒருமைப்பாடு அதிகரிப்பதோடு சாதியின வேறுபாடு குறைவடைவதை அவதானிக்கலாம். வேறு மதத்தவர்கள் கூட நம் ஊரத் திருவிழா என்று ஒன்றிணைந்து திருவிழா அலங்காரங்களில் பங்குபற்றுவதை அவதானிக்கலாம்.

## 2.3 திருவிழாக்களில் விருந்தோம்பல்

இந்து மக்கள் தொன்று தொட்டு கொண்டாடி வரும் திருவிழாக்களில் விருந்தோம்பல் பண்புகளை அதிக அளவில் அவதானிக்க முடியும். ஒவ்வொரு பிரதேசத்திற்கு ஏற்ற வகையிலும் திருவிழா நாட்கள் என்பது அந்த ஆலயத்தின் பொருட்டு வேறுபடுவது அவதானிக்கத்தக்கது. அந்த வகையிலே சில ஆலயங்களில் பத்து நாள் திருவிழாக்களும் சில ஆலயங்களில் பதினெட்டு நாள் திருவிழாக்களும் வேறு சில ஆலயங்களில் ஏழு அல்லது ஐந்து அல்லது மூன்று நாட்கள் கூட இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

இத்தகைய திருவிழா நாட்களில் மக்கள் ஒன்றுபட்டு சமூக ஒருமைப்பாடு அதிகரிப்பதுடன் விருந்தோம்பல் பண்பு வளர்வதையும் அவதானிக்கலாம். அந்த வகையிலே திருவிழா காலங்களில் அமுது வழங்குவது விருந்தோம்பல் பண்பினை எடுத்துக்காட்டும் வகையில் அமைகின்றது. அடியவர்கள் நேர்த்தி வைத்து பூஜைக்கு வரும் பக்தர்களுக்கு அமுதளிக்கும் பண்பை விருந்தோம்பலின் உச்சமாகக் கருதலாம்.

உணவின்றி வாடுபவர்கள் கூட திருவிழா காலங்களில் வயிறு நிறைய உண்டு மனமகிழ்வோடு செல்வதைக் காணலாம். சில பிரதேசங்களில் ஆலய திருவிழாக்களின் போது ஐந்தாவது நாள் ஊர் மக்களிடம் அரிசியைப் பெற்று சேமித்து அந்த அரிசியின் மூலம் கஞ்சி காய்ச்சி பாயாசமாக முதலில் அம்மனுக்கு படைப்பர். அதன் பின்னர் அந்த பாயாசத்தை அந்த ஊர் மக்களுக்கும் ஆலயத்தை நாடிவரும் பக்த

அடியார்களுக்கும் உணவாக வழங்குவதன் மூலம் விருந்தோம்பல் பண்பை அவதானிக்க கூடியவாறு உள்ளது.

மேலும் தேர்த் திருவிழாவின் போதும் சாமி ஊர்வலங்களின் போதும் ஊர்வலத்தில் நடந்து களைத்து வரும் பக்தர்களுக்காக ஊர்மக்கள் தண்ணீர்ப் பந்தல் அமைத்து மோர், பானக்கம் போன்ற இனிப்பு பானங்களை அருந்தக் கொடுப்பதும் விருந்தோம்பல் பண்பினையை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வழமையை கிழக்கு மாகாணங்களில் அதிகமாக அவதானிக்கலாம்.

மேலும் ஆலய திருவிழாக்களில் அன்னதானம் வழங்கும் முறையும் விருந்தோம்பலையே எடுத்துக்காட்டுகின்றது. அந்த வகையில் சுவாமி தரிசனம் முடித்த பின்னர் வணங்க வரும் பக்தர்களுக்கு சுடச்சுட அமுது படைக்கப்படும். பசியால் வாடும் பலரும் இந்த அன்னதானத்தில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

மேலும் திருவிழா காலங்களில் உறவினர்கள், சொந்த பந்தங்கள், அயலவர்கள் என அனைவரும் ஒன்று கூடி ஆலயங்களுக்கு செல்வதோடு அவர்கள் உணவு சமைத்து எடுத்துக் கொண்டு செல்வதும் ஆலயத்தில் கூடி அமர்ந்து உருண்டை பிடித்து பகிர்ந்து உண்பதையும் காணலாம்.

இந்து மக்கள் விரும்பும் திருவிழாக்கள் பொதுவாக ஆகமம் சார்ந்த ஆலயங்களிலும் ஆகமம் சாராத ஆலயங்களிலும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையிலே ஆகமம் சாராத ஆலயங்களில் கிடா வெட்டு பூசை நடப்பது வழமை. அதாவது கருப்புசாமி எனும் தெய்வத்திற்கு ஆடுவெட்டி அதனை சமைத்து படைத்து ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு கொடுப்பதும் ஊர் மக்களுக்கு உணவைப் பகிர்வதும் குறிப்பிடத்தக்கது. இவ்வழமையை ஹட்டன் மற்றும் அவிசாவெல பிரதேசங்களில் அதிகம் அவதானிக்கலாம்.

அதைப்போல எட்டாம் மடைத் திருவிழாவில் மாமிசங்கள் இறைவனுக்கு படைத்து பின்னர் பக்தர்களுக்கு உண்ணக் கொடுப்பதையும் காணலாம். பெண் தெய்வமான மாரியம்மனுக்கு ஆடி மாதத்தில் திருவிழா கொண்டாடப்படும். இம்மாதத்தில், பெண்கள் மாரியம்மனுக்கு விரதம் இருந்தும், தீ மிதித்தும், அம்மனுக்கு கூழ் வார்த்தும் தங்களது நேர்த்திக்கடனை செலுத்துவார்கள். அவ்வேளையில் வார்க்கப்படும் கூழ் கோயிலுக்கு வரும் மக்களுக்கும் பகிர்ந்து கொடுப்பதை அவதானிக்கலாம்.

அந்த வகையிலே திருவிழாக்கள் அதிதி போஜனம் எனும் விருந்தோம்பல் பண்பினை மக்கள் மத்தியில் வளர்க்கும் ஒரு சமய நிகழ்வாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

### 2.4 பண்டைத்தமிழ் மக்களின் வாழ்வியலில் விருந்தோம்பல்

பண்டைத் தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் தனியிடம் பெறுகின்றது. இல்லறக் கடமைகளில் ஒன்றான திருமணம் நடைபெறுவதன் நோக்கமே விருந்தோம்பலாகும். விருந்தோம்பும் பண்பு உடையவர்கள் வறுமையில் வாடினாலும் அவர்கள் வாழ்வில் மேன்மையுடையவர்கள். ஊடல் தணிக்கும் வழிகளில் ஒன்று விருந்தினர் வருகை. நம்மை நாடி வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று, உண்டி முதலியவைகளை அளித்து, மிக்க அன்போடும் ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பது வாழ்க்கையில் தலைசிறந்த பண்பாகக் கருதப்படுகின்றது. விருந்தினரைக் கையொழியாது போற்றிய செய்தி " விருந்தோடு கைதூவா" என்று கலித்தொகையில் காணப்படுகின்றது. விருந்தினரின் மூலம் தலைவன் தலைவியிடையே ஏற்படும் ஊடலும் தீர்வதைக் காணமுடிகிறது.

விருந்தோம்பலில் ஆறறிவு உயிர்களுக்கு மட்டுமன்றி தனக்கு உதவி செய்தவரை மறக்காது நன்றி மறவா உள்ளத்தோடு விருந்து படைப்பது தமிழர் வழக்கம். பொருள் தேடச் சென்ற காதலரிடமிருந்து தூதுவராய் இளவேனில் வந்திருக்கிறது. இளவேனில் காலம் பொருள் தேட உகந்ததன்று. எனவே தலைவன் வரும் செய்தியோடு வந்த இளவேனிற்கு நாம் விருந்து வைப்போம் என்கிறாள் தோழி. இதனை,

" இன்உயிர் செய்யும் மருந்தாகி, பின்னிய
காதலர் - எயிறு ஏய்க்கும் தன் அருவி நறுமுல்லைப்
போது ஆரக் கொள்ளும் கமல் குரற்கு என்னும்
தூது வந்தென்றே, தோழி
துயர் அறு கிளவியோடு அயர்ந்தீகம் விருந்தே"

(கலித்தொகை பா.32)

என்ற பாடலில் நம் இனிய உயிரை வாழ்விக்கும் மருந்தினைப் போல, உன்னுடைய துயர் தீர்க்கும் இனிய மருந்து நம் காதலருடைய வருகை. அதைத் தெரிவிக்கும் பொருட்டு இளவேனில் வந்திருக்கின்றது. ஆதலால் அக்காலத்திற்கு விருந்தானவற்றைச்

செய்வோம் என்றுரைக்கும் தோழிக் கூற்று தமிழர் பண்பாட்டின் விருந்தோம்பலின் சிறப்பை வெளிப்படுத்துகின்றது.

விருந்து என்னும் சொல்லுக்குப் புதுமை என்று பொருள். இல்லறம் தேடி புதிதாக வருபவரை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழிகள் பேசி, உபசரித்துப் போற்றும் உயரிய பண்பே விருந்தோம்பல் ஆகும். தலைவியின் உயர் பண்புகளில் ஒன்றாக விருந்தோம்பல் குறிப்பிடப்படுகின்றது. தலைவியின்றி விருந்தோம்பல் நிகழாது. மனையற மகளிரின் தலையாய கடமை விருந்தோம்பல். இந்த விருந்தோம்பலானது சங்க மகளிரிடம் சிறப்பாக அமைந்திருந்தது. தலைவி தான் ஊடல் கொள்ளக் கருதி இருந்தும் இயலாத நிலையை தோழியிடம் கூறுகின்றாள்.

" அவ்அவ் இடத்தால் அவை அவை காண
பூங்கண் மகளிர் புனைநலம் சிதைக்கும்
மாய மகிழ்ந்தன் பரத்தையை
நோவென் தோழி கடன் நமக்கு எனவே"

(கலித்தொகை பா.75)

விருந்தினரைப் பேணல் தலைவியின் பண்பாகக் கூறப்படுகிறது. விருந்தினர் வருவதால் புலவியை மறந்து விடுவதாக கூறுகிறாள் தலைவி.

" விருந்து நனி பெறுதலும் உயிரின் மாதோ
இரண்டும் தோன்று விசும்பின் உயிர்நிலை உலகத்து
அருந்ததி அனைய கற்பின்"

(ஐங்குறுநூறு. பா.442)

என்ற பாடல் அடிகள் தலைவி மகிழ்ச்சியுடன் விருந்து உபசரிப்பதாகக் கூறுகின்றன.

களவு கற்பாக மாறித் தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் வாழ்வு இல்லறம். இந்த இல்லற வாழ்வில் இன்றியமையாத ஒன்று விருந்தோம்பல். விருந்தோம்பல் இல்லறத்துடன் ஒன்றுபட்டு மக்கள் மனதில் நிலைத்திருந்ததைக் குறிஞ்சிப்பாட்டு,

" சாறு அயர்ந்தன்ன.....
உண்டலும் புரைவது"

(குறிஞ்சிப்பாட்டு, பா.வரி.200-206)

என வரும் அடியில் மொழியும். சங்ககாலத்தில் விருந்தோம்பல் சிறந்த கலையாகப் பேணப்பட்டது. கணவனுடன் கூடி வாழும் மங்கல மகளிர்க்குரிய தனி உரிமையாக

இது கருதப்பட்டது. கணவனை இழந்தவர்களும், பிரிந்து வாழ்பவர்களும் விருந்தை எதிர்கொண்டு வரவேற்கும் உரிமை பெறவில்லை.

விருந்தோம்பல் பண்பிலே சிறந்தவர்கள் நம் முன்னோர்கள், இதனைப் பரிசில்விடை, பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, விறலியாற்றுப்படை என்னும் துறைகள் எடுத்துரைக்கின்றன. வேந்தனது உள்ளம் மகிழ வெல்புகழ் கூறி பரிசிலார்க்குப் பரிசிற் பொருளை வழங்கியதோடு அரண்மனை வாயிலையும் கடந்து நடந்து வந்து விடை நல்கும் நிகழ்ச்சி விருந்தோம்பலின் பண்பை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. தாலாட்டுப் பாடலில் ஒரு தாய்,

" வாழையிலை நறுக்கி வந்தாரைக் கையமர்த்தி
தேடி விருந்தழைக்கும் திசையுள்ளோர் நாம்"

என்று உபசரிப்பதன் மூலம் விருந்தோம்பல் பண்பாட்டினை உணர முடிகிறது.

குடும்ப வாழ்வில் ஊடல் என்பது கூடி இன்பத்தை அனுபவிப்பதற்கே ஆகும். அவ்வூடல் உப்பு போல அளவோடு இருக்க வேண்டும். உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பதற்கிணங்க ஊடல் இல்லாத வாழ்வும் சுவையைத் தராது. ஊடலைத் தீர்க்கும் மருந்தாக விருந்தினர் வருகை அமைகின்றது. தலைவன் நற்குணம் உடையவன், அறிவில் சிறந்தவன் எனவே தலைவியின் ஊடலை தணிக்கும் பொருட்டு வீட்டிற்கு விருந்தினரை அழைத்து வருகின்றான்.

" விருந்து எதிர்கொள்ளவும் பொய்ச்சூள்"

(கலித்தொகை, பா.75)

விருந்தினரை எதிர் கொள்ளுதல், பொய் சத்தியம் செய்வதற்கு அஞ்சுதல், பெறுதற்கு அரிய புதல்வனைத் தழுவுவதைக் காணல் நன்மை, இவற்றைத் தான் கண்டு தெளிந்தால் என் சினமெல்லாம் அழிந்து போகும் என்கிறாள் தலைவி. தனக்கு ஏற்பட்ட சினத்தின் ஊடலை விருந்தினர் வருகையானது தணித்து விடுகின்றது. ஊடல் தீர்க்கும் வாயிலாக இங்கு விருந்தினர் வருகை அமைந்து சிறப்பிடம் பெறுகிறது.

அகத்திணை இலக்கியமான ஐங்குநுறூறு தன்னைப் போன்ற சக மனிதர்களுக்கு உணவிடும் நேய உணர்வானது விருந்தோம்பல் என்னும் நிகழ்வால் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது. விருந்தோம்பல் என்னும் இனிய பண்பாட்டு அறத்தை ஆணும் பெண்ணுமாக இணைந்தே செயல்படுத்தியுள்ளனர். வளம் மேம்பட்டால்தான்

விருந்தினருக்கு உணவிட முடியும் என்பதும் அவர்களால் உணரப்பட்டுள்ளது. அதனால்தான் இயற்கை செழிக்கவும் வேண்டியுள்ளனர்.

" நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!"
விளைக வயலே! வருக இரவலர்!
பால்பல ஊறுக! பகடுபல சிறக்க!
பசிஇல் ஆகுக! பிணிசேண் நீங்குக!"

(ஐங்குநுறூறு)

இரவலர் வர வேண்டும், பசி இல்லாமல் போக வேண்டும் என்பது முன்னோர்களின் விருப்பமாக இருந்துள்ளது. சங்ககால மகளிரின் மனையற மாண்புகளில் முதன்மையானதாக விருந்தோம்பல் முன் வைக்கப்பட்டுள்ளது.

உறவினரும் நண்பரும் அல்லாதவராகப் புதியவராக நம்மிடம் வரும் அனைவரையும் விருந்தினர் என்கிறோம். அகநானூற்றில் மாற்றூர்கிழார் மகனார் கொற்றங்கொற்றனார் ' விருந்து' என்ற சொல்லை ' புதியவர்' என்ற பொருளில் கையாண்டுள்ளார்.

" விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப,
வேந்தனும் வெம்பகை தணிந்தனன்"

(அகம்.54)

புதிய மன்னர்கள் கொடுத்த திறைப்பொருளால் மன்னன் பகை தணிந்தான் எனச் சுட்டியுள்ளது. விருந்தோம்பல் என்பதற்கு கழகத் தமிழ் அகராதி " புதிதாய் வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரிக்கை நடத்துவது" எனச் சுட்டுகின்றது. இல்லறத்தின் தலையாய நெறி விருந்தோம்பல் என்பதனைச் சிலப்பதிகாரமும் கம்பராமாயணமும் புலப்படுத்துகின்றது.

அறநானூற்றில் பெருந்தேவனார் பாடிய பாலைத்திணைப் பாடல் விருந்தோம்பலை " இல்வாழ்க்கைத் தொழில்"' என்றே சுட்டுகின்றது.

" … … … … நாளும்
மனைமுதல் வினையொடும் உவப்ப,
நினை – மாண் நெஞ்சம் நீங்குதல் மறந்தே"

(அகம்.51)

பொருள்வயிற் பிரிவு கடைகூட்டிய நெஞ்சிற்குத் தலைவன் கூறும் கூற்றில் இடம் பெறும் ' மனைமுதல் வினை' என்ற சொல்லாடல் விருந்தோம்பல் என்னும் குறியீட்டு

நிகழ்வாகும். மேலும், கணவன் - மனைவி இணைந்து நிகழ்த்தும் தொழிலாக விருந்தோம்பல் கூறப்பட்டுள்ளது.

அக இலக்கியங்களில் ‘ எக்காலமும் விருந்துக்கு உகந்த காலமாக’ குறிப்பிடப்பட்டுள்ளது. விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்ற மகளிரை ‘ முல்லை சான்ற கற்பினள்’ என்று குறிப்பிடப்படுகின்றது.

“ அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்”

(நற்றிணை)

சங்ககால மகளிர் நள்ளிரவில் விருந்தினர் வந்தாலும் முகம் திரிந்து நோக்காது அவர்களை எதிர் கொண்டு வரவேற்று உணவளித்தமையைக் கற்புடைமைக்குப் பொருத்திக் காட்டியுள்ளனர்.

இல்லற வாழ்வின் இணைப்புப் பாலமாக விருந்தினர் அமைந்துள்ளனர். மருதநிலத் தலைவியின் ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் வருகை நிகழ்ந்தமையைப் பின்வரும் நற்றிணைப் பாடல் வழி காணலாம்.

“ தடமருப்பு எருமை மடநடைக் குழவி
....... ...... .... ...........
புகைஎண்டு அமர்த்த கண்ணள், தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்லியர்
அம்துகில் தலையில் துடைத்தனள், நப்புலந்து
அட்டிலோளே, அம்ம அரிவை
எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பு ஆன்று,
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண்கும்மே”

(நற்றிணை.120)

உணவு தயாரிக்கும் தலைவியின் கண்கள் புகையுண்டு சோர்வோடு விளங்கின. அழகுடைய நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின. இவ்வாறு சமைக்கும் தலைவி தலைவனோடு ஊடல் கொண்டுள்ளாள். ஆதலால் பரந்தமை கொண்ட தலைவன் தனது ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் வருகையை வேண்டுகிறான்.

தலைவன் மேல் ஊடல் இருக்கும் சமயத்தில் கூட விருந்தினர்களை உபசரிக்கத் தயங்கமாட்டாள் தலைவி என்பதே அக இலக்கியங்கள் காட்டும் உண்மையாகும்.

" … …. … குன்றூர் அன்ன என்
நல்மனை நனிவிருந்து அயரும்
கைதூ வின்மையின் எய்தாமாறே"

(நற்றிணை.280)

விருந்தினரிடம் முழுமையாக கவனம் செலுத்துவதால் தலைவனிடம் ஊடல் நீங்காது இருக்கும் தலைவி குறித்து அக இலக்கியம் குறிப்பிடுகின்றது. " தலைவனின் பரத்தமை ஒழுக்கம் கண்டு வாடிய தலைவி விருந்தின் வழி ஊடல் தீர முயலும் தலைவனிடம் ஊடல் நீங்காது இருக்க காரணம் அவள் கவனம் முழுவதும் விருந்தினர் பக்கம் இருப்பதனால் என்று நற்றிணை பதிவு செய்துள்ளது.

விளையாட்டுப் பருவத்தில் பயிற்றுவிக்கப்படும் செயல்கள் ' பசுமரத்து ஆணிபோல' ஆழப்பதிந்து விடும். ஆதலால், விளையாட்டில் கூட விருந்தோம்பும் மரபு கூறப்பட்டுள்ளது. நெய்தல் நிலத்து மகளிர் சிற்றில் இழைத்து விளையாடுவதை இயல்பாக கொண்டிருப்பர். அத்தகைய விளையாட்டில் கூட தலைவி உணவு சமைப்பதாகப் பாவனை செய்கிறாள். அப்போது தலைவன் விருந்து உண்ண வருவதற்கு விருப்பம் தெரிவிக்கின்றான்.

" தொடலை ஆயமொடு கடல்உடன் ஆடியும்
சிற்றில் இழைத்தும், சிறுசோறு குவைஇயும்,
வருந்திய வருத்தம் தீர, யாம் சிறிது
இருந்தனமாக, எய்தவந்து
தடமென் பனணத்தோள் மடநல்லீரே!
எல்லம் எல்லன்று அசைவு மிக உடையேன்
மெல்இலைப் பரப்பின் விருந்துஉண்டு, யானும் இக்
கல்லென் சிறுகுடித் தங்கின் மற்று எவனோ?"

(அகம்.110)

வண்டல் இழைத்து விளையாடும் தலைவியிடம் தலைவன் நானும் உனது இல்லத்தில் தங்கி விருந்துண்டு என் வழிநடை வருத்தத்தைப் போக்கிக்கொள்ளவா? என்று வினவுவதாகப் பாடல் அமைந்துள்ளது. விருந்தோம்பும் பழக்கம் சிறுவயதிலேயே பயிற்றுவிக்கப்படுதல் இதன் மூலம் புலனாகின்றது.

விருந்தினரை வரவேற்கக் காத்திருக்கும் அடைக்காத வாயில்கள் அகஇலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருவிழா நடைபெறும் நாட்களில் பெரிய பானையில் உணவு தயாரிக்கப்பட்டு, சுற்றத்தவருக்கும், புதிதாக விழா பார்க்க வரும் விருந்தினருக்கும் அளிப்பதற்கு தலைவன் - தலைவி காத்திருக்கின்றனர். பைந்நிணம் கலந்த நெய்ச்சோற்றை விருந்தாகத் தருகின்றனர். தங்களுக்கு என்று உணவைப் பத்திரப்படுத்தாமல் அனைவருக்கும் தந்து விட்டு எஞ்சிய சோற்றை தலைவி விருப்பி உண்டுள்ளாள்.

" சாறு அயர்ந்தன்ன மிடா அச்சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிணம் ஒழுகிய நெய்மலி அடிசில்
வசையில் வான் திணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு
அறம் புணைஆகத் தேற்றிப் பிறங்கு மலை"

(குறிஞ்சி.201)

உணவு வேண்டி வரும் விருந்தினர்களும் தடையில்லாமல் உண்டு மகிழ்ந்து சென்று வர வாயில் கதவை திறந்தே வைத்திருக்கும் வளமனைகளும் பகுத்துண்டு வாழும் இல்லறச் சிறப்பும் குறிஞ்சிப்பாட்டில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இல்லறக் கடமையாற்றக் காத்திருக்கும் அடையா வாயில்கள் விருந்தோம்பலுக்கு தக்க சான்றாகும்.

நம் முன்னோர்கள் இரவுப் பொழுதில் உணவுக்கு வழித்தேடி வரும் புதியவர்கள் தடுமாறா வண்ணம் அறிவிப்புச் செய்து உணவு வழங்கியுள்ளனர். இது குறுந்தொகைப் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

" புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நார்இல் மாலை,
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்,
வருவீர் உளரோ? எனவும்
வாரார் தோழி நம் காதலரே."

(குறுந்தொகை.118)

பொழுது கண்டு இரங்கிய நெய்தல் நிலத்தலைவி, தலைவன் வருகை நீடித்த வழி, தோழியிடம் உரையாடிய பாடலில் " பலர் புகும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை அடைப்பதற்கு முன்னம் வீட்டிற்குள் உணவருந்த வருபவர் யாரும் உள்ளீர்களா? என்று அறிவிக்கும் வீடுகள்" இருந்ததாகக் கூறுகின்றாள். இன்றைய நடைமுறை வாழ்வில் அறிவிப்பு பலகைகள் அன்னச் சத்திரங்களை இனங்காட்டுதல் போன்று சங்ககாலத்தில் அறிவிப்புச் செய்து விருந்தோம்பியுள்ளனர் என்பது சிறப்பிற்குரியது.

" பெருங்சின வேந்தன் அருந்தொழில் தணியின்,  
விருந்து நனி பெறுதலும் உரியள் மாதோ?  
இருண்டு தோன்று விசும்பின் உயர்நிலை உலகத்து  
அருந்ததி அனைய கற்பின்  
குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே"

(ஐங்குறுநூறு.442)

பாசறைகண் பருவவரவு கண்டு வருந்தும் தலைவனின் மனமானது வினை மீண்டால் தலைவி விருந்திடுவாளே என்று ஏக்கம் கொள்கின்றது. புதல்வன் தாய், அருந்ததி அனைய கற்பினாள் என்று தலைவியின் இல்லறத்திற்கான நற்பண்புகளும் பாடலில்களில் சுட்டப்படுகின்றது.

உறவினர்களுக்கு உணவு முதலியன தந்து பாதுகாத்தல் சுற்றம் ஓம்பலாகும். பழந்தமிழர்களின் மரபுகளில் விருந்திட்டு சுற்றம் ஓம்புதல் குறிப்பிடத் தகுந்த வழக்கமாகும். பாலைநிலத் தலைவி பிரிவில் வருந்தும் போது தோழியானவள் சுற்றம் ஓம்பலின் கடமையை வற்புறுத்துகின்றாள். தலைவன் பிரிந்து சென்று பொருள் ஈட்டுவதே இல்லை என்று இரந்த சுற்றத்தவர்க்கு கொடுப்பதற்கே என்ற அறவுணர்வைப் போதிக்கின்றாள்.

" அறந்தலை பிரியாது ஒழுகுலும், சிறந்த  
கேளிர் கேடுபல ஊன்றறும் நாளும்  
வருந்தா உள்ளமொடு இரந்தோருக்கு இல் எனச்  
செய்வினை புரிந்த நெஞ்சினர்"

சங்ககால மக்கள் தன் வீடு, தன் பிள்ளை என்று சுயநலத்தோடு வாழாமல் சமூகத்தோடு ஒன்றுபட்டு வாழ்ந்துள்ளனர். இல்லறத்தான் தான் தேடிய பொருளை சுற்றத்தவரோடு பகிர்ந்து உண்டுள்ளான் என்பதைச் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

“ பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்
அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை”

(கலித்தொகை,பா.133)

அன்பு என்பதைக் குறிப்பிடும் போது தன் கிளையோடு ஒன்றுபடுதலே என்று குறிப்பிட்டுள்ளார். சுற்றம் தழுவதலுக்கு என்றே ஈகைப் பண்பை போற்றியுள்ளார்.

சங்ககால மக்கள் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் முக்கியத்துவம் தந்துள்ளனர். பாணர், பொருநர், கூத்தர், விறலியர், போன்ற கலைவளர் செம்மல்களைப் போற்றிப் பாதுகாத்துள்ளனர். கலைஞர்கள் தமது திறமைகளை வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று வெளிப்படுத்தச் செல்லும் இடங்களில் விருந்து உபச்சாரங்களை பெறறுள்ளனர். இதனை ஆற்றுப்படை இலக்கியம் பதிவு செய்துள்ளதைப் போன்று அக இலக்கியமும் பதிவு செய்துள்ளது.

“ அன்னாய்! இவன் ஓர் இளமாணாக்கன்
தன்ஊர் மன்றத்து என்னன் கொல்லோ?
இரந்தூண் நிரம்ப மேனியொடு
விருந்தின் ஊரும் பெருங் செம்மனே”

(குறுந்தொகை.33)

பாணன் சிறந்த மாண்புடையவன் மன்றத்தில் திறன் வெளிப்படுத்துபவன். பிறரிடம் விருந்துண்டு வாழ்வதால் மெலிந்த தேகத்தை உடையவன் என்று சுட்டப்பட்டுள்ளதன் மூலம் கலைஞர்களின் வாழ்வே மற்றவர்கள் தரும் விருந்துகளில் கழிவது புலனாகின்றது.

புழுங்கள் அரிசி, பச்சை அரிசி ஆகிய இருவகை உணவுகளும் சங்க காலத்தில் வழக்கில் இருந்தன. பச்சை அரிசி சோறு கட்டியாக இருப்பது வரவேற்கப்பட்டது. புழுங்கல் அரிசிச் சோறு ஒன்றை ஒன்று ஓட்டாமலும் நொறுங்காமலும் இருக்குமாறு சமைப்பது வரவேற்கப்பட்டது. நெல்லைக் குற்ற இரும்புப்பூண் இட்ட உலக்கைகள் பயன்படுத்தப்பட்டன. சமையல் நுணுக்கத்தை விளக்கும் மடைநூல் இருந்ததாக சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

பலவகை உணவுகள் தயாரிக்கப்பட்டன. திணையரிசியும் பாலும் கலந்த பால்சோறு, துவரைப் பருப்பும் அரிசியும் கலந்த பருப்புச்சோறு, இறைச்சியும் அரிசியும் கலந்த ஊன்சுவை அடிசில், புளியும் மோரும் மூங்கில் அரிசியோடு கலந்து ஆக்கப்பட்ட

அரிசிக்கூழ், அரிசிச்சோறு, அரிசி அவல் ஆகியன அரிசியில் இருந்து தயாரிக்கப்பட்டவையாகும். ஊன் உணவும் கள்ளும் இனவேறுபாடின்றி அனைவராலும் உண்ணப்பட்டன. இவ்வுணவுப் பழக்கங்கள் சமுதாயத்தினால் சாடப்பட்டமைக்கு சங்க இலக்கியங்களில் சான்று இல்லை.

கறிக்கூட்டு வகைகளில் அசைவ உணவே பெருவழக்கமாக இருந்தது. முட்டையுடன் கூடிய உடும்புப் பொரியல், பன்றியின் கொழுப்புக்கறி, செம்மறியாட்டின் தொடைக்கறி, சுட்டமீன் வறுவல் ஆகியன கறிகூட்டு வகைகளில் குறிப்பிடத்தக்கவை. மாவடுவை ஊறவைத்து மிளகுப் பொடியும் கறிவேப்ப இலையும் கலந்து வேகவிட்டு ஊறுகாய் செய்யும் வழக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. ஏழைகள் குப்பைக் கீரையை மட்டும் உணவாகக் கொண்டதாக சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. கறியும் சோறும் கலந்த உணவு ஊன் பழக்கம் அல்லது ஊன்துவை 'அடிசில்' எனப்பட்டது. உப்புக்கண்டம் " வாடுவான்" எனப்பட்டது. குழம்புக்கறி " கவலை" எனப்பட்டது. ஊறுகாய் " காடி" எனப்பட்டது. கறியை வேகவைப்பதும் சுடுவதும் வழக்கில் இருந்தன.

இத்தகைய சிறப்புகளுடன் பண்டைத்தமிழரின் விருந்தோம்பல் வழமைகள் காணப்படுகின்றன.

**பயிற்சி வினாக்கள்**

1. இந்து பாரம்பரியத்தில் திருவிழாக்களின் முக்கியத்துவத்தை விளக்குக?
2. திருவிழாக்களில் வெளிப்படும் விருந்தோம்பல் பண்பு பற்றி விபரிக்குக?
3. இந்துக்களின் பண்டிகைகள் பற்றி சுருக்கமாக விளக்குக?
4. பண்டிகைகளில் வெளிப்படும் விருந்தோம்பல் பண்புகளை ஆராய்க?
5. சங்க இலக்கியங்களில் வெளிப்படும் விருந்தோம்பல் கருத்துக்களை விளக்குக?

**உசாத்துணை**


1. சத்யா சுரேஷ்., (2015), பண்டிகைகள், கண்ணதாசன் பதிப்பகம்.
2. சியாமளா ராகவன்., (1991), இந்து சமய பண்டிகைகள், நர்மதா பதிப்பகம்.
3. சொக்கு சுப்பிரமணியன்., (2001), இந்திய திருவிழாக்கள், இந்திய அரசு செய்தி ஒலிப்பரப்பு அசைச்சகத்தின் புத்தக வெளியீட்டு பிரிவு.

4. பரமசிவன்.தொ., (2019), மஞ்சள் மகிமை, காலச்சுவடு பதிப்பகம்.
5. செயபால்.இரா., (2006), அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
6. தட்ஷிணாமூர்த்தி.அ., (2004), ஐங்குநூறு, பாவை பிரிண்டர்ஸ், சென்னை
7. நாகராசன்.வி., (2004), குறுந்தொகை, பாவை பிரிண்டர்ஸ், சென்னை
8. பாலசுப்பிரமணியன்.கு.வெ., (2004), நற்றினை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
9. விசுவநாதன்.அ., (2004), கலித்தொகை, பாவை பிரிண்டர்ஸ், சென்னை

# அத்தியாயம் 03

# இந்து மூலங்களில் விருந்தோம்பல் சிந்தனைகள்

3.1 வேதத்தில் விருந்தோம்பல்

3.2 உபநிடதத்தில் விருந்தோம்பல்

3.3 மகாபாரதத்தில் விருந்தோம்பல் சிந்தனைகள்

3.4 இராமாயணத்தில் விருந்தோம்பல்

3.5 தொல்காப்பியத்தில் விருந்தோம்பல்

3.6 ஆசாரக்கோவையில் விருந்தோம்பல்

3.7 நாலடியாரில் விருந்தோம்பல் சிந்தனைகள்

3.8 திருக்குறளில் விருந்தோம்பல்

3.9 சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல்

3.10 மணிமேகலையில் விருந்தோம்பல்

## அத்தியாயச் சுருக்கம்

இந்துசமயத்தில் விருந்தோம்பல் பண்பாடு முதன்மைப்படுத்தப்படுகின்றது. இந்துசமய மூலங்களில் விருந்தோம்பலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதனை அவதானிக்கலாம். இந்துசமயத்தின் பொதுநூலாகவும் முதல் நூலாகவும் கொள்ளப்படுவது வேதம், வேதத்தின் அந்தமாக விளங்கும் உபநிடதம் மற்றும் இராமாயணம், மகாபாரதம், திருக்குறள், ஆசாரக்கோவை, தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற இந்துசமய மூலநூல்களில் விருந்தோம்பல் சிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இந்துவும் இரந்து வருபவர்களுக்கு அன்னமிட தவறக்கூடாது என இந்துசமயம் இந்நூல்களுக்கூடாக வலியுறுத்தி நிற்கின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. வேதத்தில் காணப்படும் விருந்தோம்பல் கருத்துக்களை அறிந்து கொள்வர்.
2. உபநிடதத்தில் காணப்படும் விருந்தோம்பல் கருத்துக்களை அறிந்து கொள்வர்.
3. இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்களில் வெளிப்படும் விருந்தோம்பல் கருத்துக்களை அறிந்து கொள்வர்.

4. இந்துசமய தமிழ் மூலங்களான தேவாரம், திருவாசகம், திருமந்திரம் மற்றும் திருக்குறள், ஆசாரக்கோவை போன்ற இலக்கியங்களில் வெளிப்படும் விருந்தோம்பல் கருத்துக்களை அறிந்து கொள்வர்.

**கற்றல் பெறுபேறுகள்**

1. இந்துசமய வடமொழி மூலங்களான வேதம், உபநிடதம், இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களில் காணப்படும் விருந்தோம்பல் கருத்துக்களை விளக்குவார்.
2. இந்துசமய தமிழ்மொழி மூலங்களான தேவாரம், திருவாசகம், திருமந்திரம் மற்றும் திருக்குறள், ஆசாரக்கோவை போன்ற நூல்களில் காணப்படும் விருந்தோம்பல் கருத்துக்களை அட்டவணைப்படுத்துவார்.

## 3.1 வேதத்தில் விருந்தோம்பல்

### (அ) வேதம் - ஓர் அறிமுகம்

இந்துசமயத்தின் பொதுநூலாகவும் முதல் நூலாகவும் கொள்ளப்படுவது வேதமாகும். வேதம் என்ற சொல் வித் என்ற வடமொழிச் சொல்லை வேராகக் கொண்டது. வித் என்றால் சமஸ்கிருதத்தில் அறிதல் என்று பொருளாகும். வேதங்கள் என்பதற்கு "உயர்வான அறிவு" என்றும் பொருள்படும். இந்து சமயத்திற்கு அடிப்படையானவை நான்கு வேதங்கள் ஆகும். ரிக், யசுர், சாம, அதர்வண வேதம் ஆகியவை தான் அடிப்படையில் வேதங்களாகக் கருதப்பட்டன. அதர்வணத்தை தீமை என்று கருதினார்கள். பிற்காலத்தில் தான் அது நான்காவது வேதமாகச் சேர்க்கப்பட்டது. இவை தமிழில் நான்மறை என்றும் கூறப்படும். வேதங்கள் நான்கு என வகுத்தவர் வியாசர். வேதங்களை "சுருதி, மறை" எனவும் கூறுவர்.

வேதங்களுக்கு சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதங்கள் எனும் நான்கு பாகங்கள் உண்டு. இருக்கு வேதத்தில் 1028 சூத்திரங்களும் 10 மண்டலங்களும் காணப்படுகின்றன. யசுர் வேதம் பொது வழிபாடு, கிரியைகள், வேள்விகள் என்பவற்றை பற்றி கூறுகின்றது. இது இரு பிரிவுகளை கொண்டுள்ளது. அவையாவன, சுக்கில யசுர், கிருஸ்ண யசுர். சாம வேதம் பாடலுடன் கூடிய அறிவு என்று பொருள்படும். இது 1549 செய்யுள்களால் உருவாக்கப்பட்டது. அதர்வ வேதம், பிரம வேதம் எனப்படும. 735 செய்யயுள்களை கொண்டு 20 பகுதிகளாக பிரிக்கப்பட்டள்ளது.

**(ஆ) வேதத்தில் விருந்தோம்பல்**

நால்வகை வேதங்களும் தத்துவ கருத்துக்களை மட்டும் கூறிவிடாமல் விழுமிய கருத்துக்கள், இசையுடனான துதி பாடல், நோய்கள் மற்றும் அதற்கான மருந்துக்கள் என்ற பல கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. அந்தவகையில் நால்வகை வேதங்களிலும் கூறப்பட்டுள்ள விருந்தோம்பல் சிந்தனைகளை நோக்குவோம்.

ரிக்வேதத்தில் 10 – 117 பாடலில் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் எனும் கருத்து தொனிக்கிறது. சாம வேதத்தில் அக்கினி கடவுளுக்கு அவி பொருட்களை மக்கள் அளிக்கின்றார்கள். அதனை இறைவன் ஏற்று அவர்களுக்கு ஐஸ்வர்யத்தை தருக்கின்றார் என்ற கருத்து எட்டாவது காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் விருந்தோம்பல் பண்பை அறிய முடிகின்றது. அதாவது, இறைவனுக்கு தினம் தினம் அவி பொருட்களை வழங்குகின்றார்கள். இதன் மூலம் விருந்தோம்பலின் சிறப்பு பண்பான எல்லோருக்கு வழங்கும் பண்பு வெளிப்படுகின்றது.

சாம வேதத்தில் 13 வது காண்டத்தில் விருந்தோம்பல் பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. “ வசுவே! இங்கு தோன்றிய சோமரசத்தை உன் வயிறு நிறையும் வரை பருகவும், அச்சமற்றவனே, அதை உனக்கு அளிக்கின்றேன்.” இவ்வரியினூடாக விருந்தோம்பல் சிந்தனை வெளிப்படுகின்றது.

மேலும், மனிதர்கள் வழங்கும் சோம பானத்தை பருகுவதற்கு இந்திரனை அழைக்கவும் என 17 வது காண்டத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் இதே காண்டத்தில் பல விருந்தோம்பல் கருத்துக்கள் காணப்படுகின்றன. அவையாவன, “ விருஷபனே! பொழியப்பட்ட சோமனை உனக்கு பருக ஊற்றுகிறேன். திருப்தியாகவும், ஆனந்தமளிக்கும் சோமனை விசேஷமாய் அடையவும். மற்றும் இந்திரனே! உன் நிமித்தம் விடப்பட்ட சோமன் பாத்திரங்களில், பொருள்களிலே இருக்கின்றன. அதை பருகவும்.” இவ்வாறு சோம பானத்தை இந்திரனுக்கு வழங்குவதன் மூலம் விருந்தோம்பல் பண்பு வெளிப்படுகின்றது.

20 வது காண்டத்தில் இந்திரன் சத்தியத்தை விருத்தி செய்வதற்காக பசுக்களின் நெய்யையும், பாலையும் அளிக்கிறார்கள் என்ற கருத்து கூறப்பட்டுள்ளது. 24 வது

காண்டத்திலும் இந்திரனுக்கு சோம பானத்தை வழங்கி வழிபடுகின்றார்கள் என்ற கருத்து காணப்படுகின்றது.

43 வது காண்டத்தில் “ இந்திரனே! உன்னால் அளிக்கப்பட்டதை புசித்து பேரானந்த முடனாகிறார்கள். பிரியர்கள் அதிக உணவால் பேசாமல் எழுந்து சென்றுவிடுகிறார்கள்.” மக்கள் மட்டுமன்றி இறைவனும் விருந்தோம்பல் செய்வதில் வள்ளல் என்ற கருத்தை அறிய முடிகின்றது. இவ்வாறாக சாம வேதத்தில் விருந்தோம்பல் சிந்தனைகள் காணப்படுகின்றன.

அதர்வ வேதத்தில் (14 – 11) ஒரு பாடல் விருந்தோம்ல் பற்றி மேல்வருமாறு கூறுகின்றது. “ இந்த அறிவு உடைய விராத்யன் விருந்தாளியாக வரட்டும்: உடனே எழுந்து நின்று விராத்யனே, நீ நேற்று இரவு எங்கு தங்கினாய்? இதோ தண்ணீர் இருக்கிறது. முதலில் கொஞ்சம் சிரம பரிகாரம் செய்: எனக்கு என்ன வேண்டுமோ அதெல்லாம் கிடைக்கும், விராத்யா, நீ விரும்பியதெல்லாம் நடக்கட்டும்: விராத்யா உன் ஆசைகள் எல்லாம் நடக்கட்டும்.” அதாவது, விராத்தியனிடம் நேற்றிரவு எங்கு தங்கினாய் இதோ தண்ணீர் இருக்கின்றது சிரம பரிகாரம் செய் என உபசரிப்பதன் வாயிலாக விருந்தோம்பலின் உச்சத்தையும் உபசரிப்பையும் அதர்வ வேதத்தில் காணக்கூடியதாக உள்ளது.

2வது காண்டத்தில் 61 வது சூக்தத்தில் நான் உனக்கு நெய்யுடன் உரம் இரசமுமான பசுவின் பாலை பொழிகின்றேன். என்னிலே வீரர்கள் பொழியப்படட்டும். அதாவது நான் உனக்கு நெய், பால் தருகின்றேன் எனக்கு ஆண்மகனை தருவாயாக எனக் கூறப்படுகின்றது. இதன் மூலம் விருந்தோம்பல் பண்பு வெளிப்படுகின்றது. மேலும் நான் பசுக்களின் பாலை இங்கு கொண்டு வருகிறேன். நான் தானிய ரசத்தை கொண்டு வந்துள்ளேன். என இந்திரனை நோக்கி கூறுகின்றார்கள். இதன் மூலம் மக்களிடம் இருக்கும் செல்வத்தை இறைவனிடம் கொடுத்து மகிழ்கின்றார்கள். இவ்வாறு கொடுப்பதும் விருந்தோம்பல் பண்பாகும்.

6வது காண்டம் 244 சூக்தம் விருந்தோம்பல் பண்பை கூறும் வகையில் அமைகின்றது. “ நான் வெகுமுறை உண்ணும் பல உணவையும் நான் பிரதிகிரஹித்துள்ள பொன்னையும் புரவியையும் பசுவையும் அஜத்தையும் ஆட்டையும் எதனையும் ஹோதாவான அக்கினி நல்ல அவியாக செய்க.”

" பிதுருக்களால் அளிக்கப்பட்டு மானிடர்களால் அனுமதியாகி என்னை அடையும் அடையாததுமான உணவை, எதனால் எனது மனம் மகிழ்வுடனாகின்றதோ அந்த உணவை ஹோதாவான அக்கினி நல்ல அவியாக செய்க." இந்த கூற்றின் வாயிலாக விருந்தோம்பல் பண்பு வெளிப்படுகின்றது.

இவ்வாறாக வேதத்தில் மக்கள் இறைவனுக்கு உணவு கொடுத்து வழிபடுவதும் இறைவன் மக்களுக்கு உணவு கொடுப்பதுமான ஒரு பண்டமாற்று முறையில் விருந்தோம்பல் பண்பு காணப்படுகின்றது.

## 3.2 உபநிடதத்தில் விருந்தோம்பல்

### (அ) உபநிடதம் - ஓர் அறிமுகம்

பண்டைய தத்துமாகவும், இந்து சமயத்தின் ஆதார நூலாகவும் விளங்கும் உபநிடதங்கள் வரலாற்றுக்காலங்களில் முதலில் எழுந்ததாகக் கருதப்படுகின்ற வேதங்களின் இறுதியில் தோன்றிய இலக்கியமாகும். அதாவது கி.மு. 10 - 06 நூற்றாண்டு வரையில் எழுச்சி பெற்றிருந்தன. இது வேதங்களின் இறுதியில் தோன்றியது என்பதால் வேதாந்தம் என்றும் அழைக்கப்படுகின்றது. உபநிடதம் என்பது " உபநிஷத்" என்ற வடமொழிச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இவ் உபநிஷத் என்ற சொல்லானது உப + நி + ஷத் என பிரிபட்டு உட்காருதல் என்ற பொருளைத் தருகின்றது. எனவே இதனடிப்படையிலே உபநிடதம் என்பது குருவுக்கு மிக அண்மையில் இருந்து குரு கூறுகின்ற மறைபொருட் தத்துவத்தை சிரத்தையுடன் கேட்டல் என்று பொருள்படுகின்றது.

இங்கு குருவுக்கு மிக அண்மையில் இருக்கும் சீடர்கள் கூட அறிவு மிக்கவர்களாகவும் பக்குவ நிலைப் பட்டவர்களாகவுமே காணப்பட்டனர். பக்குவப்பட்டவர்களை மட்டுமே ஆசிரியர்கள் தமது சீடர்களாகக் கொண்டனர். எனவே உபநிடதம் என்பதற்குச் சொல்லப்படுகின்ற குருவுக்கு மிக அண்மையில் இருந்து அவர் கூறுகின்ற மறைபொருட் தத்துவங்களைச் சிரத்தையுடன் கேட்டல் என்பது பொருத்தமாகவுள்ளது.

இவ் உபநிடதங்களே பிற்பட்ட கால வைதீக, அவைதீக நெறிகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்திருந்தன. மேலும் இந்திய மெய்யியலின் உண்மையியல்,

அறிவாராய்ச்சியியல், ஒழுக்கவியல் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் உபநிடதங்களே பங்களிப்புச் செய்துள்ளன. மேலும் மேற்கத்தேய மெய்யியல் வரலாற்றில் பிரதான பங்களிப்புச் செய்யும் தோற்றப்பாட்டில் வாதம், பொருளியல் போன்ற துறைகளிலும் உபநிடதங்களின் ஆழமான செல்வாக்கைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு உபநிடதங்கள் இந்திய மெய்யியல் வரலாற்றிலே முக்கியமானதொரு இடத்தினை வகிக்கின்றது.

### (ஆ) உபநிடதத்தில் விருந்தோம்பல்

உபநிடதங்களில் தத்துவ போதனை, பொருளாதார, சமூக ஒழுக்கங்கள் மட்டும் கூறாது விருந்தோம்பல் சிந்தனையும் மிக அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. உபநிடதங்களில் கூறப்படும் விருந்தோம்பல் பற்றி நோக்குகையில், இவற்றில் நேரடியாக விருந்தோம்பல் பற்றிக் கூறாமல் உணவின் மகத்துவம், முக்கியத்துவம், விருந்தினரின் சிறப்புக்கள் மூலமாக எடுத்துரைக்கப்படுகின்றது. அதன்படி, முண்டக உபநிடத மகா வாக்கியமானது, அனைத்தும் அறிந்த இறைவனிலிருந்தே உணவானது தோற்றம் பெற்றது எனக் கூறுகின்றது. இதனை,

**" அன்னம் ச ஜாயதே "** (1:1.9)

என்ற மகா வாக்கியம் சுட்டி நிற்கிறது.

வைதீக கர்மங்களுள் முக்கியமானது அக்னி ஹோத்ரம். இல்லறத்தானின் தினசரி கடமைகளுள் இதுவும் ஒன்று. இவ் யாகத்துடன் தர்சனம், பூர்ணமாசம், வைசுவ தேவம் போன்ற பல முறையான யாகங்களும் செய்தால் தான் அக்னி ஹோத்ரம் பூரணமடையும். இதில், வைசுவ தேவம் என்பது பறவை, விலங்கு முதலான உயிரினங்களுக்கு உணவளித்தலை குறிக்கின்றது. அத்துடன், விருந்தினரை அழைக்காமலும், உரிய முறையில் அல்லாமலும் ஒருவன் அக்னி ஹோத்ரம் செய்தால் அவனுக்கு ஏழு உலகங்களிலும் அழிவே மிஞ்சுகிறது என்று, விருந்தானது மனிதர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய உயிர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும், விருந்தினரின் சிறப்பும் முண்டக உபநிடத மகா வாக்கியத்தில் (1:2.3)

**" அதிதிவர்ஜிதம் ச**
**அஹூதம் அவச்சதேவம் அவிதினா ஹூதம்..."**

எனக் கூறப்படுகின்றது.

பிரசன உபநிடதம் கூறுவதாவது, “ **உணவே படைப்புக் கடவுள். உணவிலிருந்தே விந்து உண்டாகிறது. அதிலிருந்தே உயிரினங்கள் தோன்றுகின்றன”**. அதாவது, உண்ணும் உணவிலிருந்தே இரத்தம், தசை, எலும்பு என்று உடம்பிலுள்ள அனைத்தும் உற்பத்தியாகின்றன. அவ்வாறு ஆணின் உடம்பிலுருந்து உருவாகின்ற ஒன்றே விந்து. இது பெண்ணிடம் வைக்கப்படும் போது உயிர் தோன்றுகின்றது. இவ்வாறு உயிரினங்கள் அனைத்தின் தோற்றத்திற்கும் அடிப்படையாக உணவு இருப்பதால் உணவு படைப்புக்கடவுளாக போற்றப்படுகின்து. இதனை,

**“ அன்னம் வை ப்ரஜாபதிஸ்ததோ ஹ வை தத்ரேதஸ்**
**தஸ்மாதிமா: ப்ரஜா: ப்ரஜாயந்த இதி ”** (1:14)

என்று கூறுகின்றது.

மேலும், பிரசன உபநிடதம் (2:11) வாழ்க்கைக்கு ஆதாரம் உணவு. உணவுக்கு ஆதாரம் மழை. அந்த மழையாகப் பொழிந்து உயிரினங்களின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவது பிராணன் என்கிறது. ஐதரேய உபநிடதம் உணவானது எவ்வாறு தோன்றியது என்பது பற்றி தெளிவாக கூறி நிற்கிறது. அதாவது, கடவுள் தண்ணீரை பற்றி சிந்தித்தார். தண்ணீரிலிருந்து ஓர் உருவம் தோன்றியது. அதுவே உணவு என்று கூறுகின்றது. இதனை,

**“ ஸ ஈதேமே ந லோகாச்ச லோகாபாலாச்ச அன்னமேப்ய:**
**ஸ்ருஜா இதி”**

ஐதரேய உபநிடதம் (1:3) கூறுகின்றது.

பிருகதாரணிய உபநிடதத்தில் ஸப்தான்ன பிராம்மணமானது, படைப்பு முழுவதையும் ஏழு வகையான அனுபவப் பொருட்களாகப் பகுக்கின்றது. அனுபவப் பொருட்களை ‘ அன்னம்’ அல்லது ‘ உணவு’ என்ற பெயரால் இது அழைக்கின்றது. ஏழு வகை உணவுகளைக் கூறுவதால் ‘ ஸப்தான்ன பிராம்மணம்’ எனப்படுகின்றது. எல்லோருக்கும் பொதுவாக முதல் வகை உணவும், இரண்டு வகை உணவுகள் தேவர்களுக்கும், மூன்று வகை உணவுகள் மனிதர்களுக்கும், ஒரு வகை உணவு மிருகங்களுக்கென்று வகைப்படுத்தப்படுகின்றது.

மேலும், ‘ எப்போதும் உண்ணப்பட்டும் இந்த உணவு வகைகள் ஏன் குறையவில்லை?’ என்றால் மனிதனே அவற்றின் குறையாத தன்மைக்கு காரணமாகின்றான். ஏனெனில் மீண்டும் மீண்டும் அவனே இந்த உணவை உற்பத்தி

செய்கின்றான். எல்லோருக்கும் வேண்டியளவு உணவை அவன் உற்பத்தி செய்ய வேண்டும். அப்படியானால் தான் விருந்தோம்பலை குறைவில்லாமல் மெற்கொள்ள முடியும். இதனை,

**“ ஸ ஹுூத அன்னம் புன: புனர்ஜனயதே ”**

பிருகதாரணிய உபநிடதம் (1:5.2)

கூறுகின்றது.

இல்லறத்தான் ஒருவன் அக்னி ஹோத்ரத்தில் பாலின் உண்மையறிந்து அதனை ஆஹுூதியாக அளிப்பான் ஆயின் ஒரே நாளில் மரணமற்ற நிலையை அடைய முடியுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் பாலை அளிப்பதன் மூலம் ‘ உண்ணத்தக்க உணவு அனைத்தையும் தேவர்களுக்கு அளிக்கின்றான்’ என்று உபநிடதம் கூறுகின்றது. இதில் மனிதன் தேவர்களுக்கு அளிக்கும் விருந்தோம்பல் பற்றியும் அதனால் உண்டாகும் நன்மை பற்றியும் கூறப்பட்டுள்ளது. இதனை,

**“ தேவேப்யோ அன்னாத்யம் ப்ரயச்சதி ”**

பிருகதாரணிய உபநிடதம்(1:5.2) என்று

குறிப்பிடுகின்றது.

சாந்தோக்கிய உபநிடதத்தில், காபேயசௌனகனும் அபிப்ரதாரியும் உணவு உண்பதற்காக அமர்ந்திருந்தார்கள். அப்போது பிரம்மச்சாரி ஒருவர் வந்து உணவு யாசித்தார். அவருக்கு அவர்கள் உணவு கொடுக்கவில்லை. அப்போது அந்த பிரம்மச்சாரி கூறினார்: ‘ பிரஜாபதி எனப்படும் ஒரே தெய்வம் நான்கு மகா சக்திகளை விழுங்கியவர். இந்த உலகங்களை காப்பவர் அவரே. பல்வேறு வடிவங்களில் உறைகின்ற அவரைச் சாதாரண மானிடர்கள் காண்பதில்லை. எல்லா உணவும் யாருக்கு சொந்தமோ அவருக்கு நீங்கள் உணவை கொடுக்க மறுக்கின்றீர்கள்’ .

அதாவது, உலகங்கள் அனைத்தையும் படைத்துக் காக்கின்ற கடவுளாக இருப்பவர் பிரஜாபதி. அவரே பல்வேறு உயிர்களாக, தேவர்களாக மற்றும் தெய்வங்களாகத் தோன்றுகிறார். இப்படி ஒரே கடவுள் தான் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளார் என்பதைச் சாதாரண மனிதர்கள் உணர்வதில்லை. ‘ அந்த இறைவன் என்னுள் எழுந்தருளி இருப்பதை நான் உணர்வேன்: எனவே எனக்கு அளிக்கப்படும் உணவு உண்மையில் அந்தப் பிரஜாதிபதிக்கு அளிக்கப்படுவதற்குச் சமம்: எனக்கு உணவை மறுப்பது அந்த இறைவனுக்கு மறுப்பதற்குச் சமம்’ என்பதைத் தெரிவித்தார் அந்தப் பிரமச்சாரி. இதன் மூலம் தாம் உண்மையில் ஓர் ஆன்மீக சாதகரே தமக்கு யாசகம் அளிப்பது

தகுதியானதே என்பதை அவர் உணர்த்தினார். அதனடிப்படையில், தகுதி பார்த்து யாருக்கும் விருந்தோம்பல் செய்யக்கூடாது. விருந்தளிக்கப்படும் உணவுகள் யாவுமே இறைவனுக்கு அளிக்கப்படும் உணவாக கருதி விருந்தினை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், ஒவ்வொருவருக்குள்ளேயும் இறைவன் உறைகின்றார். என்பதை,

**" அபிப்ரதாரின் பஹூதா வஸந்தம் யஸ்மை வா ஏததன்னம்**
**தஸ்மா ஏதன்ன தத்தமிதி "**

சாந்தோக்கிய உபதிடதம் (4:3.5) கூறி நிற்கிறது.

ஜனச்ருதரின் கொள்ளுப்பேரனான ஜானச்ருதி என்ற மன்னர் சிரத்தையுடன் ஏராளம் தானம் செய்பவர், ஏராளம் உணவை சமைப்பவர். ' எல்லா இடங்களிலும் மக்கள் எனது உணவை உண்ண வேண்டும்' என்ற எண்ணத்துடன் எங்கும் அன்ன சத்திரங்களை கட்டி மக்களின் நன்மையை நாடுபவர். என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விருந்தோம்பல் முதலான நற்காரியங்களை செய்வது புண்ணியத்தை தரும். புண்ணியம் ஒருவனை இங்கும் மேலுலகங்களிலும் இன்பங்களை அனுபவிக்கச் செய்யும். என்பதை,

**" ஏவ மே அன்னம் அத்ஸ்யந்தீதி"**

சாந்தோக்கிய உபநிடதம் (4:1.1) கூறுகின்றது.

மேலும், உணவு நிச்சயமாக வலிமையை விட உயர்ந்தது. அதனால் உணவை தியானம் செய்ய வேண்டும். உணவை இறைவனாக தியானிப்பவன் உணவும் தண்ணீரும் நிறைந்த உலகங்களை அடைவான் என்றும், உணவையே தெய்வீகமாக எண்ணி தியானிப்பவன் அந்த உணவு செல்லும் எல்லை வரை தான் விரும்பியதைச் சாதிக்க வல்லவன் ஆகின்றான் எனவும் சாந்தோக்கிய உபநிடதம் (7:9.1 , 7:9.2)

**" அன்னம் வாவ பலாத்"** எனவும்,

**" ஸ யோ அன்னம் ப்ரஹ்மேத்யுபாஸ்தே அன்னவதோ வை**
**ஸ லோகான் பானவதோ"** எனவும் கூறுகின்றது.

இதிலிருந்து உணவின் தேவைப்பாடு எடுத்துக்காட்டப்படுவதோடு உணவின் சிறப்பும் கூறப்படுகிறது. உணவினால் தனக்கு மட்டும் நன்மையை தேடாது பிறருக்கும் நலனைக் கொடுக்க வேண்டும். அதுவே ஒருவனை உயர்வடையச் செய்யும்.

அத்துடன், உணவின் தூய்மையால் உள்ளம் தூய்மையாகிறது. தூய உள்ளத்தில் நினைவு நிலைத்ததாகின்றது. நினைவு நிலைபெறும் போது எல்லா முடிச்சுக்களும் அவிழ்கின்றன. அதாவது, உணவளிக்கும் போது தூய்மையான உணவினையே அளிக்க வேண்டும். அப்போது தான் மனமானது தூய்மையடையும். அதன் பின் அவர்களின் நினைவு மனதினுள் நீங்கா இடம் பிடிக்கும். என்று,

**" ஆஹார சுத்தௌ ஸத்த்வசுத்தி:**
**ஸத்த்வசுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி"**

சாந்தோக்கிய உபநிடதம் (7:26.2) கூறுகின்றது.

தைத்திரீய உபநிடதமானது விருந்தோம்பல் பற்றிய சிந்தனைகள் பலவற்றை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. அதனடிப்படையில், கற்பதும் கற்பிப்பதும் தான் மாணவப்பருவத்தில் ஒருவன் செய்ய வேண்டிய மிக முக்கியமான கடமையாகும். அவன் கற்க வேண்டும், இளையவர்களுக்கு கற்பிக்க வேண்டும். இது அவனது முக்கிய கடமை என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. பாடங்களை கற்பதுடன் அவன் தன்னை ஒரு நல்ல மனிதனாக உருவாக்கிக் கொள்ளவும் வேண்டும். அதற்கு அடிப்படைத் தேவைகளாக தைத்திரீய உபநிடதம் கூறுகின்ற ரத்தினங்கள் போன்ற பன்னிரு கோட்பாடுகளுள் (பன்னிரு ரத்தினங்கள்) ' விருந்தினரைப் பேணுதல்' என்பது மிக முக்கியமானதாகும். இதனை, தைத்திரீய உபநிடத சீஷா வல்லீப் பகுதி (1:9)

**" அதிதயச்ச ஸ்வாத்யாய ப்ரவசனே ச"**

என்று குறிப்பிடுகிறது.

மேலும், தாய், தந்தை, ஆசிரியர் போன்றோரை மட்டுமல்லாது விருந்தினரையும் தெய்வமாக போற்ற வேண்டும் என்ற அறக் கருத்தானது வலியுறுத்தப்படுகின்றது. இதனை,

**" அதிதி தேவோ பவ"**

என்று தைத்திரீய உபநிடதம் (1:11.3) குறிப்பிடுகின்றது.

மேலும், தைத்திரீய உபநிடதம் (2:2.2) உணவிலிருந்தே மக்கள் தோன்றினர். உணவே உயிர்களின் ஆரம்பம். அதனால் தான் உணவு அனைத்திற்கும் மருந்து என்று சொல்லப்படுகின்றது. யார் உணவை தெய்வமாக போற்றுகின்றார்களோ அவர்கள் தவறாமல் உணவை பெறுகின்றனர். அதாவது, உணவின் முக்கியத்துவம், பெருமை போன்றவற்றை இவ்வளவு சிறப்பாக கூறுவதன் மூலம் அதனை நாம் எவ்வளவு

கவனமாக கையாள வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது இந்த தைத்திரீய உபநிடதம். இதனை,

**" அன்னம் ப்ரஹ்மோபாஸதே**
**அன்னக்ம் ஹி பூதானாம் ஜ்யேஷ்ட்டம்"**

தைத்திரீய உபநிடதம் (2:2.2) கூறுகின்றது.

அத்துடன், உணவை தெய்வீகமாக போற்ற வேண்டும் என்பதற்கு நான்கு நியதிகளும் கூறப்பட்டுள்ளன. (தைத்திரீய உபநிடதம் 3:7, 3:8, 3:9, 3:10 )
உணவை பழிக்கக் கூடாது. **(அன்னம் ந நிந்த்யாத் ' தத் வ்ரதம்)**
உணவை வெறுக்கக் கூடாது. **(அன்னம் ந பரிசீத ' தத் வ்ரதம்)**
உணவை ஏராளமாக உற்பத்தி செய்யுங்கள். **(அன்னம் பஹுகுர்வீத ' தத் வ்ரதம்)**
உணவை தேடி வருகின்ற யாரையும் திருப்பி அனுப்பக் கூடாது. **(ந கஞ்சன வஸதௌ ப்ரத்யாசீத ' தத் வ்ரதம்)**

உணவை தேடி வருகின்ற யாரையும் திருப்பி அனுப்பக்கூடாது. இது உங்கள் கடமை. எனவே உணவை பல வழிகளில் ஏராளமாக உற்பத்தி செய்ய வேண்டும். யார் எப்போது வந்தாலும், ' இவனுக்கு உணவு தயாராக உள்ளது' என்று சொல்லுமளவிற்கு உணவு தாராளமாக இருக்க வேண்டும். உணவின் முக்கியத்துவத்தையும், உணவு தானத்தால் வரும் பலனையும் அறிந்து அதைச் செய்பவன் அந்தப் பலனை பெறுகிறான். என்று விருந்தோம்பலின் சிறப்பானது கூறப்பட்டுள்ளது.

மேலும் உணவைப் பழிக்க கூடாது இது உங்கள் கடமை. பிராணனே உணவு. உணவை உண்பது உடம்பு, உடம்பு பிராணனில் நிலைபெற்றுள்ளது. எனவே உணவில் நிலை பெற்றுள்ளது யார் இதனை அறிகிறானோ அவன் இந்த உண்மையில் நிலைபெறுகின்றான். அவன் உணவுச் செல்வம் உடையவன் ஆகின்றான். உண்டு மகிழ்கின்றான் மக்கட் செல்வமும் கால்நடைச் செல்வமும் உடையவன் ஆகின்றான். உணவை இறையருளின் ஒரு சின்னமாக காண வேண்டும்.

உடம்பு உணவினால் வளர்கிறது. உடம்பை இயக்குவது பிராணன். எனவே உடம்பு பிராணனைச் சார்ந்துள்ளது. அது போல் பிராணனின் செயல்பாடும் உணவைப் பொறுத்தே அமைகின்றது. தொடர்ந்து சாப்பிடாமல் இருந்தால் உடம்பின் இயக்கம்

தடைபடுவதை நாம் உணரலாம். உடம்பும் பிராணனும் ஒன்றை ஒன்று சேர்க்கின்றன. இரண்டும் உணவைச் சார்ந்திருக்கின்றன எனவே வாழ்க்கைக்கு ஆதாரமாக உணவை போற்ற வேண்டும் என உபநிடதம் கூறுகின்றது. இதனை

“ அன்னம் பஹீகுர்வீத த்த வர்தம் ப்ருதிவீ வா...”

உணவை ஏராளமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று பொருளாதார உபதேசம் செய்கிறது உபநிடதம். இவ்வுலகில் செய்யும் முயற்சிகள் அனைத்தும் தனக்கென்று இல்லாமல் பிறர் பொருட்டாக அமைய வேண்டும். உணவு தேடி வருகின்ற யாரையும் திரும்பி அனுப்பக் கூடாது. இது உங்கள் கடமை எனவே பல வழிகளில் ஏராளமாக உணவை உற்பத்தி செய்ய வேண்டும். யார் எப்போது வந்தாலும் “ இவனுக்கு உணவு தயாராக உள்ளது” என்றும் சொல்லும் அளவிற்கு உணவு தாராளமாக இருக்க வேண்டும்.

உணவை சிறந்த முறையில் தயாரிப்பவனுக்கு உணவு சிறந்த முறையில் கிடைக்கிறது. சாதாரணமாக தயாரிப்பவனுக்கு சாதாரணமான முறையில் கிடைக்கின்றது. உணவின் முக்கியத்துவத்தையும் உணவு தானதால் வரும் பலனையும் அறிய செய்ய வேண்டும் என உபநிடதம் கூறுகிறது. உணவில் இருந்தே மக்கள் தோன்றினான் பூமியில் யாரெல்லாம் உண்டோ எவையெல்லாம் உண்டோ அவை அனைத்தும் உணவில் இருந்தே உண்டாயின. அனைத்தும் உணவினாலே வாழ்கின்றன. கடைசியில் உணவிலே கலக்கின்றன.

உணவே உயிர்களின் ஆரம்பம் அதனால்தான் உணவு அனைத்திற்கும் மருந்து என்று சொல்லப்படுகின்றது. யார் உணவை தெய்வீகமாக போற்றுகிறார்களோ அவர்கள் தவறாமல் உணவைப் பெறுகின்றனர். உணவே உயிர்களின் ஆரம்பம் அதனால் தான் உணவு அனைத்திற்கும் மருந்து என்று சொல்லப்படுகிறது. உணவில் இருந்து உயிர்கள் தோன்றுகின்றன. தோன்றியவையே உணவினால் வளர்கின்றன.

இவ்வாறாக உபநிடதங்களில் ‘ விருந்தோம்பல்’ பற்றிய மிகவும் சிறப்பான சிந்தனைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் கூறப்பட்ட விடயங்களை கருத்திற் கொண்டும் உதாரணங்களை முன்மாதிரியாகக் கொண்டும் தற்காலத்திலும் விருந்தோம்பலை சிறப்புற செய்ய வேண்டும். ‘ இட்டுக்கெட்டவர் யாரும் இல்லை’ என்று கூறுமளவிற்கு தானமும் தர்மமும் தலை காக்கும் என்பது மரபு. அதன் வாயிலாகவே ஈகை பண்பு

அடுத்தவருக்கு உணவளிக்கும் உயரிய மாண்பாக கூறப்படுகின்றது. வரும் விருந்தினர்களை அன்பாக கவனித்து உணவளித்து அனுப்பி விட்டு அடுத்து வருகின்ற விருந்தினர்களுக்காக காத்திருந்தவர்கள் நம் முன்னோர்கள். அன்றைய, தலை சிறந்த பண்புகளில் ஒன்றான " விருந்தோம்பல்" பண்பினை இனி வரும் காலங்களிலும் சால சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டும்.

## 3.3 மகாபாரதத்தில் விருந்தோம்பல் சிந்தனைகள்

### (அ) இதிகாசங்கள் ஓர் அறிமுகம்

இதிகாசம் என்பது இதி + ஹ + ஆஸ எனப் பிரித்து பொருள் விளக்கப்படுகின்றது. இதி - இவ்வாறு, ஹ - எங்கும் பிரசித்தமாகிய, ஆஸ - இருப்பது எனப் பொருள்படுகிறது. இதன் பொருளை இப்படி இவ்வாறு நடந்தது என்று கூறுவர். இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம் ஆகியன இதிகாச இலக்கியங்களாகும்.

இதிகாசம் தோன்றிய பின்னணி குறித்து நோக்குகின்ற போது வேத இலக்கியங்களிலும் உபநிடதங்களிலும் பேசப்பட்ட தத்துவ கருத்துக்கள் பாமர மக்களை சென்றடையாமையினால் இத்தகைய கருத்துக்களை பாமர மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிய கற்பனை கலந்த கதைகளாக எடுத்து விளக்கும் வகையில் இதிகாசங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு வேத இலக்கியங்களில் கூறப்பட்ட கருத்துக்களை விரிவுபடுத்திக் கூறும் நெறியாக விளங்குவதனால் இதிகாசங்களை ஐந்தாம் வேதம் என அழைக்கின்ற மரபும் காணப்படுகின்றது.

அத்தோடு சட்டமும் ஒழுங்கும் இல்லாத காலத்தில் இந்து சமூதாயத்தை நெறிப்படுத்தி வழிநடத்த எழுந்த இலக்கியங்களாக இதிகாசங்களின் தோற்றத்தினை கருதுபவர்களும் உள்ளனர். மக்கள், தேவர், அரசர் முதலியோர்களுக்கிடையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் கதைகளையும் கொண்டு சமய நெறியினையும் தத்துவத்தினையும் ஒழுக்கங்களையும் மக்களுடைய நல் வாழ்வுக்கு ஏற்ற வகையில் போதிக்கும் இலக்கியங்களாக இதிகாசங்கள் தோற்றம் பெற்றன.

### (ஆ) மகாபாரதம் ஓர் அறிமுகம்

மகாபாரதம் 74,000ற்கு மேற்பட்ட பாடல் அடிகளையும், நீளமான உரைநடைப் பத்திகளையும் கொண்டு விளங்கும் இந்த ஆக்கத்தில் 18 இலட்சம் சொற்கள்

காணப்படுகின்றன. இதனால் இது உலகின் மிக நீண்ட இதிகாசங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

மகாபாரதத்தின் முற்பட்ட பகுதிகள் வேதகாலத்தின் இறுதிப் பகுதியைச் (கி.மு. 5ஆம் நூற்றாண்டு) சேர்ந்தவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் தொடங்கிய குப்தர் காலத்தில் இவ்விலக்கியமானது இதன் முழு வடிவத்தினைப் பெற்றிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

நீண்டகாலமாகப் படிப்படியாக வளர்ச்சியடைந்தே இது இதன் முழு வடிவத்தைப் பெற்றிருக்கலாம் எனக்கூறப்படுகின்றது. முறையான பாரதம் எனப்படும் நூலின் மூலப்பகுதி 24,000 அடிகளைக் கொண்டது என மகாபாரதத்திலே அடையாளம் காணப்பட்டுள்ளது. வியாசரால் இயற்றப்பட்ட பாரதத்தின் மூலப்பகுதி 8,000 அடிகளைக் கொண்டிருந்தது என மகாபாரதத்தின் ஆதி பருவம் கூறுகின்றது.

பாரத வம்சத்தின் பெருங்கதையினை உலகிற்கு எடுத்துரைப்பதே இவ்விலக்கியமாகும். இது குருசேத்திரப் போர் எனப்படும் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையிலான பெரும் போரை மையப்படுத்திய கதையாக இருந்தபோதும் இதில் பிரம்மம், ஆன்மா, உலகம் தொடர்பான தத்துவங்களையும் தன்னகத்தே விளக்கமாகக் கொண்டுள்ளமை சிறப்பாகும்.

### (இ) மகாபாரதத்தில் விருந்தோம்பல்

மகாபாரதத்தில் அதிதியாக செல்பவர்களும் அதிதியை உபசரிப்பவர்களும் நடந்து கொள்ளும் விதம் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது.

அரக்கு மாளிகைக்கு தீயிட்டு பாண்டவர்களையும் குந்திதேவியையும் அழிப்பதற்கு சகுனியுடன் இணைந்து துரியோதணண் போட்ட திட்டத்தினை அறிந்த பாண்டவர்கள் தமது தாயையும் உடன் அழைத்துக் கொண்டு அரண்மனையை விட்டு ரகசியமாக வெளியேறி விடுகின்றனர். இந்நிலையில் ஏகசக்பபுரம் என்ற ஓர் கிராமத்தில் அந்தனர் ஒருவரின் வீட்டில் அவர்கள் தங்க வாய்ப்பு கிடைக்கின்றது.

அன்றைய தினம் அந்தணரின் குடும்பத்தினர் பகாசுரன் எனும் அரக்கனுக்கு உணவளிக்கும் முறையாக இருந்தபோது, தாயின் கூற்றுக்கிணங்க வீமன் அந்தணருடன் சென்று பகாசுரனுடன் யுத்தம் செய்து அனைவரையும் துன்பத்திலிருந்து

விடுவிக்கின்றான். தமக்கு அடைக்கலம் தந்து விருந்துபசாரம் செய்தவர்களுக்காக உயிரையும் கொடுக்க துணிந்தான் வீமன். இதன் மூலம் விருந்தளிப்போரை ஒரு போதும் மறக்கக்கூடாது. அவர்களுக்கு அபயம் அளிக்க வேண்டுமெனும் விழுமியச் சிந்தனையை மகாபாரதம் எடுத்துக் காட்டுகின்றது.

**விருந்தோம்பலில் ஏற்ற தாழ்வு இன்மை.**

- பாண்டவர்களது வனவாசத்தின் போது அரக்க குலத்தினரால் (இடும்பனின் சகோதரியினால் வழங்கப்பட்ட உபசரிப்பு) வழங்கப்பட்ட விருந்துபசாரத்தினை நல்மனதுடன் ஏற்றமை.
- கர்ணனின் தாய் - யசோதை – சிறந்த விருந்தோம்பல் பண்பினைக் கொண்டவள்
- திரௌபதி மற்றும் தர்மர் வனவாசத்தின் போது, வனத்தில் தவம் செய்கின்ற அனைத்து ரிஷிகளுக்கும் இனிதே விருந்துபசாரம் வழங்கியமை.

**'' வயிற்றிற்கு சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்''** – மகாகவி பாரதியார்

❖ **உபசரிப்பதில் பணிவும், ஆர்வமும் மிக முக்கியமானது.**

- துரியோதணண் அரண்மனைக்கு விருந்தினராக கிருஷ்ணர் சென்றிருந்தவேளை அவன் மிக ஆடம்பரமாக விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் கிருஷ்ணண் அதனை ஏற்க மறுத்தார்.
- அதற்கு காரணம் அவனிடம் பணிவு இன்மையாகும்.
- அரசபோக விருந்தினை நிராகரித்த பகவான் விதுரரின் வீட்டில் தங்கியிருந்து விருந்தினை உண்டார்.
- விதுரரின் வரவேற்பும், பக்தியும், பணிவுமே அவரை அங்கு மகிழ்வித்தது.
- எனவே வீட்டிற்கு விருந்தினர் வரும்போது நாம் அவர்களை மெய்யான அன்போடு வரவேற்க வேண்டும் என்பது அவசியம்.
- அதாவது விருந்தினரை தெய்வமாக போற்ற வேண்டும் என்பது இந்துக்களது மரபாக காணப்படுகின்றது. இதனையே உபநிடதங்கள், " அதிதி தேவோ பவ" எனும் மகா வாக்கியத்தினூடாகச் சுட்டுகின்றமை சிறப்பாகும்.

விருந்தினருக்கு அளவோடு உணவினைப் பரிமாறல் சிறப்பாகும் என மகாபாரதம் எடுத்துரைக்கின்றது. விருந்தினரின் தேவைக்கு அதிகமாக வற்புறுத்தி உணவினை வழங்குவது அவசியமற்றது. குருசேத்திர போரின் பின் அஸ்தினாபுரத்தில் தர்மர் மிகப் பெரியளவில் இராஜசூய யாகமொன்றினை நடாத்தினார். அதில் பீமனுக்கு மக்களை உபசரிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது.

### 3.4 இராமாயணத்தில் விருந்தோம்பல்

#### (அ) இராமாயணம் - அறிமுகம்

இதிகாசங்களில் முதலில் தோன்றிய இலக்கியம் இராமாயணமாகும். இராமாயணமானது வான்மீகி என்னும் முனிவரால் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்ட மிகப் பழைய இதிகாசமாகும். இது கி.மு 5ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 2ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இயற்றப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது. இது இந்து சமயத்தின் முக்கியமான நூல்களுள் ஒன்றாகும். மூலநூலான வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவிப் பல இந்திய மொழிகளிலும் பிறநாட்டு மொழிகளிலும் இராமாயணம் இயற்றப்பட்டுள்ளது.

சோழர்காலத்திலே கம்பர் எனும் புலவரால் தமிழ் மொழியிலும் இந்திமொழியிலே துளசிதாசர் என்பவராலும் மலையாள மொழியிலே எழுத்தச்சன் என்பவராலும் அசாமில் மாதவ் கங்குனி என்பவராலும் ஓரியாவில் பலராம்தாகவ் என்பவராலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவை மட்டுமின்றி கெமர் மொழியிலுள்ள ரீம்கெர், தாய்மொழியில் உள்ள ராமயென், லாவோ மொழியில் எழுதப்பட்ட ப்ரா லாக் ப்ரா லாம், மலாய் மொழியில் எழுதப்பட்ட இக்காயத் சேரி ராமா போன்றவை வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவி எழுந்தவையாகும்.

இராமாயணம் என்னும் பெயர் இராமன், அயனம் என்னும் சொற்களின் கூட்டாகும். காவியத்தின் மையப் பாத்திரத்தின் பெயரான இராம, இரண்டு சூழ்நிலை அர்த்தங்களை கொண்டுள்ளது. அதர்வ வேதத்தில் இது அடர், அடர் நிறம், கருப்பு என்று பொருள்படும். மற்றும் இரவின் இருள் அல்லது அமைதி என்று பொருள்படும் அயனம் என்னும் சொல் சமஸ்கிருதத்தில் பயணம் என்னும் பொருளுடையது. இதனால் இராமாயணம் என்பது இராமனின் பயணம் என்று பொருள்படும்.

## (ஆ) இராமாயணத்தில் விருந்தோம்பல்

கம்பராமாயணத்தில் முகம் மலர்ந்தே விருந்தினரை வரவேற்று உபசரிக்க வேண்டும் என கம்பர் எடுத்துரைக்கின்றார்.

" விருந்தினர் முகம் கண்டன்ன
விழா அணி விரும்புவாகும்"

(பாலகாண்டம்: நாட்டுப்படலம் - 47)

கோசல நாட்டு வளம் குறித்தும், மக்களின் பழக்கவழக்கங்கள், பொழுதுபோக்குகள் குறித்தும் கூறியுள்ளார். அதில் சிலர் விருந்தினர்களின் முகங்களைப் பார்த்து, அவர்களுக்கு அன்னம் அளிக்கும் விழாவினை விரும்பினார்கள் என்று கூறுவதன் ஊடாக விருந்தினரை வரவேற்கும் தன்மை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. விருந்தினர் வருகை கண்டு உள்ளம் களிக்கும் மகளரின் முகம் போல என்று கம்பர் கோசல நாட்டு மக்களின் விருந்தோம்பலை குறிப்பிட்டுள்ளார்.

" தாமரை மலர்ந்தது என்று
...... விருந்து கண்டு உள்ளம் களிக்கும்
மங்கையர் முகம் எனப் பொலிந்த கமலம்..."

(கிட்கிந்தா காண்டம் - கார்காலப்படலம் - 476)

வானில் மேகங்களை விருந்தினர் எனக்கருதி, தாம் வீட்டில் இருப்பதனையே அவர்களது வருகையை கருதி உள்ளம் களிக்கின்ற பெண்கள் முகம் மலர்வது தாமரைக் கொடிகள் நீரில் எழுச்சியுடன் இருப்பதனை ஒத்ததாகக் காணப்படுகின்றது. மேலும் விருந்தினரிடம் உள்ளத்தினால் அன்பு செய்தல் அவசியம். அத்கைய அன்பு இல்லையெனில் விருந்தின் பயன் அற்றுப் போகும் என்பதனை பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

" உள்ளன்பு இல்லாதவர் தித்திக்கவே பேசி
உறவாடும் உறவு உறவே அல்ல..."

பரதனது சேனையரை பரத்துவாசர் வரவழைத்து படையில் உள்ள ஆடவர்களுக்கு பணிவிடை செய்யும் பாடலாகவும் வீட்டிற்கு வந்த விருந்தினரை மன உறுதி கொண்டு விருந்து செய்வேன் எனக் கூறி இன்முகங்காட்டி வரவழைத்து அப் பரதனது சேனையில் உள்ளவர்களை எவ்வாறு விருந்து உபசரிப்பதற்கு முன்னர் அவர்களுக்குரிய பணிவிடைகளை செய்து கவனிக்க வேண்டும் என்ற விருந்தோம்பலின் மிக

முக்கியமான (இரவலர் பணிவிடைகள்) ஒரு பண்பு இப் பாடலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அதாவது பரதனையும் சேனைகளையும் மதிப்போடு வரவழைத்து அனைத்து ஆடவருக்கும் கஸ்தூரி முதலான பொடிகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க வாசனைப்பொடிகளை உடம்பு முழுவதும் பூசினார்கள். பின்னர் குளிர்ந்த வானத்தில் பொருந்திய தேவ கங்கா நதியின் கிடைப்பதற்கரிய நீரினால் அவர்களை முழுக்காட்டினார்கள். பின்பு நறுமணம் வீசுகின்ற அழகிய கற்பக மரங்கள் ஏந்தி நின்ற குற்றமில்லாத மலர்போன்ற பட்டாடைகளை அணிவித்தனர். ஆகவே முதலில் வீட்டிற்கு விருந்தினர் வருகை தந்தால் அவர்களை வரவேற்று பின்பு அவர்களுக்குரிய பணிவிடைகளை செய்த பின்னரே உபசரிப்பது மிகவும் உயர்ந்த விருந்தோம்பல் பண்பாகும்.

“ நானம் நன்கு உரைத்தார் நளிர் வானிடை
ஆன கங்கை அரும் புளல் ஆட்டினர்
தான மாமணிக் கற்பகம் தாங்கிய
ஊனம் இல் மலர் ஆடை உடுத்தினர்”

மேலும் பூங்கொம்பு போன்று வளைந்து அசைகின்ற உடம்பினை உடைய தேவ மகளர்கள் நீராட்டிய பின்னர் செம்பொன்னினால் செய்யப்பட்ட அணிகலண்களினை அணிவித்தும் பின்னர் வானுலகத்தில் உள்ள தேவர்கள் அனைவருக்கும் தலைவனான இந்திரன் உண்ணக்கூடிய இனிமையான அமிர்தத்தினை ஊட்டுவித்தனர். அத்துடன் தேவலோகத்தில் எங்கனம் தேவர்கள் போற்றப்படகின்றனரோ அதுபோல பரத்துவாசரது ஆச்சிரமத்திற்கு வந்த பரதனது சேனைகளுக்கும் சேவை செய்தனர். இதிலிருந்து வீட்டிற்பு வந்த விருந்தினரது களைப்பினை நீக்கி அவர்களுக்கு அமிர்தத்திற்கு நிகரான உணவினைப் பரிமாறி அவர்களை சிறப்பாக கவனித்தமையிலிருந்து விருந்தினர்களுக்கான மரியாதை, மதிப்பு போன்றனவற்றையும் விருந்தினர்களை இறைவனுக்கு நிகராக போற்றுகின்ற தன்மையினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

“ கோம்பின் நின்று நுடங்குறு கொள்கையார்
சேம்பொன்னின் கல ராசி திருத்தினார்
ஆம்பரத்தின் அரம்பையர், அன்பொடும்,
உம்பர்கொன் நுகர் இன் அமுது ஊட்டினார்.”

செம்மஞ்சள் போன்ற மென்மையான பாதத்தினை உடையதுடப் விடம் போன்ற கூர்மையான கண்களை உடைய தேவலோகப் பெண்கள் பஞ்சுமெத்தையால் ஆன மஞ்சனத்தில் பொன் மான்கள் போன்று மென்மையாக படுத்துறங்கும்போது அவர்களுக்கு அருகில் அச்சகத்தினை அனுபவித்துக் கொண்டு பரதனின் சேனையிலுள்ள ஆடவர்களும் படுத்துறங்கினர். இப்பாடலின் ஊடாக விருந்தினராக வந்திருப்பவர்களுக்கு உணவினை கொடுப்பது மட்டுமன்றி அவர்களுக்கு மகிழ்ச்சியினைத் தரக்கூடிய அனைத்து விதமான விடயங்களையும் செய்தல் வேண்டும் என்பது புலப்படுத்தப்படுகின்றது.

" அஞ்சு அடுத்த அமளி, அலத்தகப்
பஞ்சு அடுத்த பரிபுரப் பல்லவ
நஞ்சு அடுத்த நயனியர், நவ்வியின்
துஞ்ச, அத்தனை மைந்தரும் துஞ்சினார்."

**விருந்தினரிடம் பாரபட்சமின்மை**

பரதனது படையிலுள்ள அரசர்கள் முதல் பல்லக்கு சுமக்கின்ற அனைவரையும் அன்போடு இன்முகத்துடன் வரவேற்று அவர்களிடம் எவ்வித தகுதியும் பார்க்காது வேறுபாடின்றி அனைவரையும் சமமாக மதித்து அப்பெண்கள் பணிவிடை செய்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதிலிருந்து விருந்தினராக வருபவரிடம் எவ்வித ஏற்றத்தாழ்வினையும் காட்டாது அனைவரையும் சமமாக மதித்தல் வேண்டும் எனும் உயரிய பண்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

" ஏந்து செல்வத்து இமையவர் ஆம் என,
கூந்தல் தெய்வ மகளிர் கொண்டாடினார்
வேந்தர் ஆகி, சிவிகையின் வீங்கி தோள்
மாந்தர்காறும், வரிசை வழாமலே" .

விண்ணுலக தெய்வ மாதரினைப் பேணுவது போன்று பரதனது சேனையில் இருக்கும் பெண்களுக்கு பரத்துவாசரது ஆச்சிரமத்தில் இருக்கின்ற பெண்கள் பணிவிடை செய்தனர். விருந்தோம்பலின் முக்கியப் பண்பாக விருந்தினரைப் பேணுதல் காணப்படுகின்றது. அந்த வகையில் தெய்வத்திற்கு நிகராக விருந்தினரைப் பேணுதல் வேண்டும் என்பது இந்துக்களது முக்கிய கடமையாகும். அவ்வகையில் கம்பராமாயனமானது இத்தகைய உயரிய பண்பினை எடுத்துரைப்பதனை பின்வரும் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

மாதர் யாவரும், வானவர் தேவியர்

கோது இல் செல்வத்து வைகினர் - கொவ்வை வாய்த்
தீது இல் தெய்வ மடந்தையர், சேடியர்,
தாதிமார் எனத் தம் பணி கேட்பவே

நந்து அம் நந்தவனங்களில், நாள் மலர்க்
கந்தம் உந்திய கற்பகக் காவினின்று,
அந்தர் வந்தென அந்தி தன் கை தர,
மந்த மந்த நடந்தது வாடையே.

மேலும் மனிதர்களுக்கு மட்டுமல்லாது உயிரினங்களுக்கும் விருந்தளித்த முறைமை எடுத்துரைக்கப்படுகின்றது. அதாவது பரத்துவாசர் ஒரு துறவியாக காட்டில் இருந்த போதிலும் பரதனுக்கும் அவனது சேனைக்கும் விருந்தளிக்க எண்ணியமை விருந்தோம்பல் குறித்த உயரிய ஒழுக்கத்தினைச் சுட்டுகின்றது. அத்துடன் மானிடர்க்கு மட்டுமல்லாது அவர்களது படையில் உள்ள உயிரினங்களுக்கும் விருந்தான அளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதாவது கற்பகத் தருவின் தேன் நிறைந்த உணவினையும் செம்பொன் போனற நெற்கதிர்களையும் உணவாக கொடுத்தமை சிறப்பானவொன்றாகும். ஏனெனில் கற்பகத் தருவானது தேவலோகத்தில் தேவர்களுக்கு மாத்திரம் உரியதொன்றாகும். அதன் மூலம் கிடைக்கப்படும் உணவு முதலியன தேவலோகத்தில் இருப்பவர்கள் மட்டுமே பயன்பெறவுள்ளதாக இருப்பினும் யானை, குதிரை முதலிய உயிரினங்களுக்கு அளிக்கப்படுவது சிறப்பாகும்.

" மான்று, அளிக் குலம் மா மதம் உண, -
தேன் தளிர்த்த கவளமும், செங் கதிர்
கான்ற நெல் தழைக் கற்றையும், கற்பகம்
ஈன்று அளிக்க, நுகர்ந்தன – யானையே."

அத்துடன் விலங்குகளின் செயல்களின் உடாக விருந்தோம்பல் பண்பானது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் பாவங்களை இல்லாதொழித்து புண்ணியத்தினை தரக்கூடிய கங்கை நீரினை யானைகள் பருகுகின்றன. மேலும் மரகத மணிபோல நன்றாக உயர்ந்து வளர்ந்துள்ள புற்களை குதிரைகள் உண்ணுகின்றன. இப்பாடலில் கிடைப்பதற்கு அரிதான கங்கை நீரினை யானைகள் பருகுவதற்கு கொடுத்துள்ளமையும் குதிரைகளுக்கு புற்கள் கொடுத்துள்ளமையும் மானிடரது

தேவையை அறிந்து விருந்தளித்தமை மட்டுமல்லாது உயிரினங்களுக்கும் சிறப்பாக விருந்தளித்துள்ளமை விருந்தோம்பலின் முக்கியத்துவத்தினை பறைசாற்றுகின்றன. இதனை பின்வரும் பாடலின ் ஊடாக அறிய முடிகின்றது.

" நரகதர்க்கு அறம் நல்கும் நலத்த நீர்
கர கதக் கரி கால் நிமிர்த்து உண்டன்
மரகதத்தின் கொழுந்து என வார்த்த புல்
குரகதத்தின் குழாங்களும் கொண்டனவே"

அக, புற இன்பங்களை துறந்த பரத்துவாச முனிவர் பரதனுடன் வந்த சேனைகள் உட்பட அனைவருக்கும் உணவளிப்பேன் என்று நினைக்கின்றார். விருந்தளிப்பேன் என்று நினைப்பதே விருந்தோம்பலின் சிறப்பாகக் கொள்ளலாம். மேலும் இவர் இப்படி நினைத்தவுடன் சுவர்க்க லோகமே பறந்து வந்து பூமியில் இருப்பது போலவும் தவச்சாலையில் உள்ள மானிடர்கள் புதிய பிறப்பெடுத்து வேறொரு உலகிற்கு சென்று வாழ்வது போலவும் உணர்ந்து இராமன் காட்டிற்கு சென்ற துயரினை மறந்து களிப்புற்று காணப்படுகின்றனர்.

அதாவது வீட்டிற்கு வந்த விருந்தினரின் மனநிலையை உணர்ந்து கொண்டு அதற்கு ஏற்றபடி அவர்களை கவனிக்க வேண்டும். துன்பத்தில் உழன்று வந்தவர்களை முதலில் இன்ப நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் அதுவே விருந்தோம்பலின் முக்கிய பண்பாகும். அதற்கிணங்க பரத்துவாசர் சுவர்க்க லோகத்தினையே அளித்து அவர்களை பரவச நிலைக்கு உட்படுத்தினார். இதனை பின்வரும் பாடல் எடுத்துரைக்கின்றது.

" துறந்த செல்வன் நினைய, துறக்கம்தான்
பறந்து வந்து படிந்தது பல் சனம்,
பிறந்து வேறு ஓர் உலகு வெற்றாரென,
மறந்து வைகினர், முன்னைத் தம் வாழ்வு எலாம்."

தேவருலக தேவ மாதர்கள் கெடுதல் அற்றவர்கள் அப்படிப்பட்ட தேவமாதர்கள் தங்களுடைய அன்பினையும் பரிவையும் கொண்டு பரதனுடன் வந்த சேனையிலுள்ள ஆடவர்களை நிலா ஒளி போல் விளங்கும் பரத்துவாசரின் வீட்டிற்குள் இன்முகத்துடன் அழைத்து சென்றனர். அதாவது வீட்டிற்கு வருகின்ற விருந்தினரை அன்புடனும் இன்முகத்துடனும் வீட்டிற்குள் அழைத்து செல்ல வேண்டியது விருந்தோம்பலின் முதல்

நிலையாகும். இதனடிப்படையில் அவர்களை அன்புடன் தேவமாதர்கள் வீட்டிற்குள் அழைத்து சென்றமையினை இப்பாடல் உணர்த்துகின்றது.

நந்தல் இல் அறம் நந்தினர் ஆம் என,
அந்தரத்தின் அரம்பையார், அன்பினர்,
வந்து உவந்து எதிர் ஏத்தினர் மைந்தரை,
இந்துவின் சுடர் கோயில் கொண்டு ஏகினார்.

### 3.5 தொல்காப்பியத்தில் விருந்தோம்பல்

தனிஒரு மனிதனுக்கு உணவில்லை எனின் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார் முண்டாசுக்கவி பாரதி. இவ் உலகத்தில் ஏற்படும் அனைத்து நோய்களுக்கும் அபூர்வமான மருந்து தமிழனிடமே உள்ளது. அம்மருந்தின் மூலத்தினை நம் முன்னோர்கள் நம்மிடையே சொல்லிச் சென்றுள்ளனர். விருந்தோம்பல் சிறப்பினையும், உணவு கொடுத்து பசிப்பிணியைப் போக்குவதையும் பெரிய அறமாகக் கருதியிருந்தனர் நம் முன்னோர்கள் என்பதை அன்றைய காலத்தைய இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்

.

" விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும் அறன்"

என்ற நூற்பாவை அக்கால மக்கள் விருந்தோம்பலைக் கடமையாகக் கொண்டனர் என்பதைக் குறிப்பிடுகின்றது.

எந்நாட்டவராயினும் எம்மொழியினராயினும் நட்புக் கொள்ளும் நல்லெண்ணெத்துடன் வீடு தேடி வருவார்களாயின் அவர்களை வரவேற்று புதியவராக கொண்டாடினர். இரவலர் வர வேண்டும், பசி இல்லாமல் போக வேண்டும் என்பது முன்னோர்களின் விருப்பமாக இருந்துள்ளது. சங்ககால மகளிரின் மனையற மாண்புகளில் முதன்மையானதாக விருந்தோம்பல் முன்வைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் மனையறம் போற்றும் தலைவியின் மாண்புகளை " வருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்புதலும்" என விருந்தோம்பலுக்கு முன்னுரிமை தந்து கூறியுள்ளார்.

விருந்தோம்பல் என்பது பெண்ணிற்குரிய கடமையாக இலக்கணம், இலக்கியங்கள் கூறுகிறது. விருந்தோம்பல் பண்பு குறித்து தொல்காப்பியம் பெண்ணிற்கு இலக்கணம் கூறுகையில் விருந்தோம்பல் பண்பாட்டையும் கூறியுள்ளார்.

" விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"

(தொல்காப்பியம். பொருளதிகாரம் கற்பியல்.150: 3-4)

விருந்தினரைப் பாதுகாத்தலும், சுற்றத்தாரைப் பாதுகாத்தலும் தலைவியின் பண்புகளாக தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் அறிமுகமானவர்களும் விருந்தினராக வருவர். அறியாதவர்களும் வருவர். ஆனாலும் விருந்து என்பதற்குப் புதிது என்றும் விருந்தினர் என்பதற்குப் புதியவர் என்றுமே பொருள். எத்தனை முறை வந்தாலும் சரி பழகி அவர்களையெல்லாம் புதியவராக எண்ணி போற்ற வேண்டும் என்னும் விழுமிய எண்ணத்தால் எழும்பியதே இச்சொல் என்கிறது. இதனை,

" விருந்தே தானும் புதுவது கிளர்ந்த
யாப்பின் மேற்றே"

(தொல்காப்பியம் பொருளதிகாரம்.1495)

இப் பாடல் அடியினூடாக அறிந்து கொள்ளலாம். விருந்தினரை போற்றி வரவேற்று உபசரிப்பதே இல்லறத்தில் உள்ளவர்களின் தலையாய கடமை என்பதை தொல்காப்பியர்,

" கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோர் மாண்புகள்"

(தொல் பொருள் கற்பியல்.11)

என்னும் பாடலடிகளின் வழி கண்ணகியின் அழுகைக்கான காரணத்தை அறியலாம்.

### 3.6 ஆசாரக்கோவையில் விருந்தோம்பல்

விருந்தோம்புவதற்கு உணவு இன்றியமையாமை என்பதால் நெறிகள் சொல்லப்படுகின்றன. உண்ணும் முன் நீராடிக் கால் கழுவி, வாயைத் துடைத்து உண்ணும் கலத்தைச் சுற்றி நீர் தெளித்து உண்ண வேண்டும் எனும் நெறியினைக் குறிப்பிடுகின்றது.

" நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலம் செய்து..."

(ஆசாரக்கோவை -18)

அவ்வாறே உண்ணும் பொழுது கிழக்கு நோக்கி அமர்ந்து ஆடாமல் அசையாமல் நன்றாக அமர்ந்து வேறு எதையும் பார்க்காமல் பேசாமல் உணவைத் தொழுது சிந்தாமல் உண்ண வேண்டும் என்றும் கூறுகின்றது.

உண்வுண்ணும் முறை பற்றி ஆசாரக் கோவை பின்வருமாறு குறிப்பிடுகின்றது,

" உண்ணுங்கால் நோக்கும் திசைகிழக்குக் கண்ணமர்ந்த...."

உணவிற்கு கருத்தில்லாமல் சிந்தைக் குழம்பி வேறொன்றை நினைப்பதனால் உணவில் சுவையை அறிந்து அதன் பயனை அறிய முடியாது என்பதனால் உணவில் கருத்தினை செலுத்தி தூய்மையாகவும் நிர்சிந்தனையுடனும் உணவிணை உட்கொள்வதன் மூலம் உணவின் பயனைப் பெற்று ஆரோக்கியத்தை பேண முடியும் என்பதை வலியுறுத்தியுள்ளது.

மேலும் அத்தகைய உணவிணை உண்ணும் விதம் பற்றிக் குறிப்பிடும் போது ஆசாரக் கோவையானது உணவினை உட்கொள்ளும் போது கசக்கும் உணவு வகைகள் கடைசியிலும் இனிக்கும் பண்டங்களை முதலிலும் எஞ்சிய பொருட்களை இடையிலும் முறைப்படி புகழும் வகையாக உண்ணல் வேண்டும் என கூறுகின்றது.

" கைப்பன் எல்லாம் கடை தலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண்"

(செய். 25)

இத்தகைய மரபானது இன்றைய காலத்திலும் கூட பெரிதாக பேணப்படுவதாக இல்லை. மருத்துவ ரீதியாக நோக்கும் போது இவ்விதிக்கு புறம்பாக உண்ணும் போது நோய்க்கு இடமளிக்கும் என்று கருதப்படுகின்றது. சித்த ஆயர்வேத மருத்துவத்தில் பஞ்சபூத அம்சப்படி இதனையே குறிப்பிடுகின்றது. இனிப்பு சுவை சீரணமடைந்து

உடலாற்கிரகிக்கப்படுவதற்கு அதிக நேரம் தேவைப்படுவதால் இதனை முதலிலும், கைப்புச் சுவையில் இலகு குணம் இருப்பதால் இலகுவில் ஜீரணித்துவிடும். ஆகையால் இவற்றை இறுதியாக உட்கொள்ளலாம். ஆகவே மக்களின் ஒழுக்கத்திற்கு மட்டுமின்றி உணவு பழக்கத்தால் பிணிகளின்றி நல்வாழ்வு வாழ்வதற்கும் இவ்வகையில் விருந்தினை வழங்க வேண்டும் என்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதை காணமுடிகின்றது. மேலும்

" முன் துவ்வார் முன்கெழார் மிக்குறார் ஊணின்கண்
என் பெறினும் ஆற்றவலம் இரார் தம்மில்
பெரியார்தம் பால் இருந்தக் கால்"

(ஆ.கோ.24)

என்னும் பாடலினூடாக பெரியவர்கள் பசியுடன் காத்திருக்க நாம் உண்ணுவது குற்றம். அவர்களுடன் பந்தியில் அமர்ந்து உண்ணுங்கால் அடக்கமும் சிறிது இடைவெளியும் தேவை. பெரியோரிடம் அமர்ந்து உண்ணும் போது அவர்களின் வலப்பக்கம் அமர்ந்து உண்ணுவதும் அவர்களுடன் நெருங்கி அமர்ந்து அவர்கள் உண்ணுவதற்கு முன் உண்ணுவது அவர்களுக்கு முன் பந்தியை விட்டு எழுவது ஆகிய செயல்களை செய்யக் கூடாது என்பதையும் உணர்த்துகின்றது. உணவை பழித்துரைத்தலோ பெரியவர்கள் உண்ட உணவை வினவுதலோ சிறப்பாகாது. இதனூடாக விருந்தினரை சிறப்பிக்கும் பண்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

" இழிவறிந்து உண்பான் கண் இன்பம் போல நிற்கும்
கழிபேரிரையான் கண் நோய்"

என்னும் வள்ளுவர் கூற்றிற்கிணங்க உண்ணும் கலத்தினை குறிப்பிடுவதனூடாக மறைமுகமாக உணவினை சுருக்கி உண்ணவேண்டும் என்பதையும் பகிர்ந்துண்ண வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றது. சிறிய உண்கலத்தில் உண்ண வேண்டும் என்பது அளவுக்கு அதிகமாக உட்கொள்வதால் நோய்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும். எனவே எதிலும் வரையறை அவசியமாகின்றது. அவற்றை மீறுவதால் இடையூறுகள் ஏற்பட கூடும் என்பதனால்,

" ..விதிமுறையால் உண்பவற்றுள் எல்லாம் சிறிய கடைப்பிடித்து
ஆன்பில் திரியாமை ஆசாரம் நீங்காமை
பண்பினால் நீக்கல் கலம்"

(ஆசாரக்கோவை. 26)

எனும் பாடலில் உணவிலும் வரையறையின் தேவையை உணர்த்தியுள்ளது.

" உயர்ந்ததின் மேல் இரார் உள் அழிவு செய்யார்
இறந்தின்னார் செய்தக் கடைத்தும் குரவர்
இளங்கிளைஞர் உண்ணுமித்து"

(ஆசாரக்கோவை.40)

இப்பாடலினூடாக புதிய சுற்றத்தார் விருந்து உண்டு கொண்டிருக்கும் பொழுது சான்றோர் உயர்ந்த பீடத்தின் மேல் அமராமலும், வந்திருப்போர் தமக்கு எல்லையற்ற துன்பங்களைத் தந்தவராக இருப்பினும் அவர் மனம் நோகும் படி எதுவும் செய்யார் என்பதன் மூலம் விருந்தினரை அனுசரிக்கும் இயல்புடையவராக இருக்க வேண்டும் என்ற கருத்து பெறப்படுகின்றது. இதன் மூலம் விருந்தோம்பலின் சிறப்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

நம் இல்லத்திற்கு வரும் விருந்தினரை இன்முகத்தோடு விரும்பி வரவேற்று அவர்களைப் பேணி அவர்களுக்கு விருப்பமான உணவினைப் பரிமாற வேண்டும். அப்படி இல்லாது பனிமாறுகின்ற நேரத்தில் முகந்திரிந்து நோக்குவோமாயின் அதைவிட கொடியது வேறு எதுவும் இல்லை. இதனை ஆசாரக்கோவை அழகாக குறிப்பிடுகின்றது.

" முறுவல் இனிதுரை கால்நீர் மணைப்பாய
கிடைக்கையோடு…ஊணொடு செய்யும் இறப்பு"

(ஆசாரக்கோவை.54)

என்னும் பாடலானது விருந்தினருக்கு செய்யும் சிறப்பாக உணவளித்தலுடன் புன்முறுவலோடு இனிய சொற்களைக் கூறி வரவேற்றல், கால் கழுவ நீர் அளித்தல், அமர்வதற்கு மணையை அளித்தல், படுக்கப் பாயைத் தருதல், தங்க இடம் கொடுத்தல் விருந்தினரை சிறப்பாக ஓம்பும் பண்பாக கூறப்படுகின்றது.

விருந்து என்பது நாம் அளிக்கும் பொருளில் இல்லை. விருந்து அளிக்கும் முறையில் உள்ளது. அதாவது முகமலர்ந்து அவர்களை கவனிக்கும் போது விருந்துப் பொருள் உப்பில்லாக் கூழாக இருந்தாலும் சிறப்பாக இருக்கும். இதுவே விருந்தோம்பலின் சிறப்பாகும். இக் கருத்திற்கு ஏற்றவகையில் விவேக சிந்தாமணியும்

" ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மை பேசி
உப்பில்லாக் கூழிடாலும் உண்பதே அமுதமாகும்
முப்பழமொடு பாலன்னம் முகம் கருத்து

ஈவாராயின், கப்பிய

பசியினோடு கடும்பசி ஆகுமன்றோ"

என்ற பாடலில் இதனை சிறப்புறச் சுட்டுகின்றது.

உலகில் தலை சிறந்த இன்பம் ஈத்துவக்கும் இன்பம், அவ்வின்பத்திற்கு ஈடு வேறொன்றும் இல்லை எனலாம். இதனை,

" மருந்தே ஆயினும் விருந்தோடு உண்"

" விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்"

(கொன்றைவேந்தன்.70.830)

எனவும் கொன்றைவேந்தன் பகிர்ந்துண்ணும் பண்பு குறிப்பிடுவது போலவே இதற்கு அரண் சேர்க்கும் விதமாக ஆசாரக்கோவையும் எவர் எவர்க்கெல்லாம் கொடுத்துண்ண வேண்டுமெனப் பட்டியலிட்டுள்ளது.

" விருந்தினர் மூத்தோர் பசுசிறை உண்ணாரே

இவர்க் கூண் கொடுத்தல்லால் உண்ணாரே

என்றும் ஒழுக்கம் பிழையா தவர்"

(ஆசாரக்கோவை.21)

விருந்தினர், முதியவர், பசுக்கள், பறவைகள், பிள்ளைகள் எனப்பட்ட அவர்களுக்கு உணவைக்கொடுத்தல்லது தாம் உண்ணமாட்டார்கள் என பகிர்ந்து உண்ண வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. ஒழுக்கம் பிழையாமைக்கு அறம் கொடுத்துண்பது தான். இவ்வறம் இன்று தடம் தவறிச் செல்வதால் தான் முதியோர் இல்லங்களும் குழந்தைகள் காப்பகங்களும், பிற காப்பகங்களும் இன்று பல்கி பெருகி உள்ளமை குறிப்பிட்டு கூறக்கூடியதாகும். மேலும்,

" தமக்கென்று உடலை ஏற்றார் தம் பொருட் ஊண் கொள்ளார்…"

(ஆசாரக்கோவை.39)

எனும் பாடலினூடாக தமக்கென்று உடலை வையார், பிறருக்கு உழைப்பதற்காக அன்றி தமக்காகவே உணவு உட்கொள்ளமாட்டார்கள் என்பதினூடாவும் விருந்தோம்பலின் சிறப்பு மிக உயர்வாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்தாகும்.

ஆசாரக்கோவையும் விருந்தினரை உபசரிக்கும் போது குறுமுறுவல், இனிமையாகப் பேசுதல், கால் கழுவ நீர் தந்து மனையினுள் வந்த உடன் பாய் விரித்து அமர வைத்து என்று இவ்வைந்தும் முக்கியம் என்பதை

“ முறுவல், இனிதுரை,கால்நீர்,மணைப்பாய்
கிடைக்கையோடு இவ்வைந்தும்”

(ஆசாரக்கோவை.54)

என்ற பாடலடி மூலம் அறிய முடிகின்றது.

### 3.7 நாலடியாரில் விருந்தோம்பல் சிந்தனைகள்

பதிணெண்கீழ்க்கணக்கு அற நூல்களில் முதல் நூல்களில் முதல் நூலான நாலடியார் விருந்தோம்பல் குறித்து

“ குடநீர் அட்டு உண்ணும் இடுக்கண் பொழுதும்
கடல்நீர் உற உண்ணும் கேளீர் வரினும்
கடன் நீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சியாள்”

(நாலடியார்.382)

குடத்து நீரைக் காய்ச்சி உண்ணும் வறுமைத்துன்பம் வாட்டிய போதும், கடல் நீரையே கொடுத்தாலும் போதாத அளவு சுற்றத்தார் வந்த போதும் அவர் தம் முகம் கோணாதவாறு விருந்தோம்புதலைக் கடமையாகச் செய்யும் பெண்ணே மாட்சிக்கு உரியவள் ஆவாள். மேலும் இன்முகத்துடன் வரவேற்று பரிமாறப்படும் எந்த உணவும் அமிழ்தமாகத் திகழும்.

“ கழுநீரும் கார் அடகேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்து ஆம் விழுமிய
குய்த்துவை ஆர் வெண் சோறே ஆயினும் மேவாதார்
கைத்தூண்டல் காஞ்சிரங் காய்”

(நாலடியார்.217)

கழுநீருள் வைக்கப்பட்ட கீரை உணவு உள்ளன்பு உடையவரால் பரிமாறப்படின், அமிழ்தத்திற்கு நிகரானது. உள்ளன்பு இல்லாதவர் நறும் வகை ஊட்டிச் சமைத்த புளிங்கறி கலந்த வெண் சோறாக இருந்த போதிலும், எட்டிக்காய் போலக் கசக்கும்

என வலியுறுத்துகிறது. இவ்வாறு உணவின் சுவை உணவுக்கு உள்ளே இருப்பதைக் காட்டிலும் உணவை வழங்குவோர் உள்ளத்தின் உள்ளே இருக்கிறது என்பது தெளிவாக உணர்த்தப்படுகிறது.

நாலடியார் விருந்தோம்பலுக்கு அடிப்படை அன்புணர்ச்சியாகும். என்கிறார் அன்பற்றவர்கள் வீட்டிற்குச் சென்ற விருந்தினர்கள் முகம்வாடி வருவர் என்று குறிப்பிடுகிறது. இதனை,

" நன்றிசாம் நன்று அறியாதார் முன்னர்
விருந்தும் விரும்பிலால் முன்சாம் சென்ற"

(நான்மணிக்கடிகை.44)

கணவனும் மனைவியும் ஒருங்கே இருந்து இன் முகத்துடன் விருந்தினர்களை உபசரிக்க வேண்டும். அங்ஙனம் விருந்து உபசரிக்கும் பொழுது விருந்தினர்கள் முகம் மலரும் என்று குறிப்பிடுகிறது.

## 3.8 திருக்குறளில் விருந்தோம்பல்

திருவள்ளுவர் தனது திருக்குறளில் விருந்தோம்பலை தனியதிகாரமாகவே படைத்துள்ளார். அதிலே இல்லறத்தான் கடமை பற்றிக் கூறும் போது,

**" இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

(குறள்:81)

என்று கூறி, இல்லத்தை போற்றி, விருந்தினரை வரவேற்று, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தலே இல்லறத்தான் கடமை என கூறுகிறார்.

திருக்குறளில் விருந்து கொடுப்பவரின் முகமானது மிக மலர்ச்சியுடன் எதிர் கொண்டு அழைத்து விருந்து கொடுக்க வேண்டும். எதிர் கொண்டு அழைப்பவர்களின் முகமானது சிறிது வாட்டத்துடன் இருந்தாலும் விருந்தினர் முகம் சட்டென்று அனிச்ச மலரைப் போல் வாடும் தன்மையுடையதாக மாறிவிடும்.

" மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

(குறள்.86)

என்று கூறுகிறது.

வீட்டுக்கு வரும் விருந்தினரை வாயில் வரை சென்று இன்முகத்துடன் அழைத்து வந்து உபசரிப்பது தமிழரின் தலைப் பண்புகளில் ஒன்று. இதனை,

அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகம் அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்

(குறள்.84)

என்ற குறளினூடாக நோக்கலாம். அதாவது ஒருவர் விருந்தினராக எதிரில் வந்தால் புது மகிழ்ச்சியைக் காட்ட வேண்டும், உபசாரமான இனிய சொற்களைப் பேச வேண்டும், அன்பு கனிந்த முகத்தோடு அவரைப் பார்க்க வேண்டும், வாருங்கள் என்று அவரை வரவேற்க சேண்டும், இருக்கையில் இருந்தால் எழுந்து வரவேற்க வேண்டும், மகிழ்ச்சியான சொற்களைப் பேச வேண்டும், விருந்தினருக்கு தக்கமுறையில் இருக்க வேண்டிய நெருக்கத்தில் இருக்க வேண்டும், அவர்களுக்கு வெற்றிலை பாக்கு சிற்றுண்டி என்பன கொடுத்து உபசரிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். விருந்தினரை எதிர்கொண்டு உபசரிப்பவரின் பெருமையை திருவள்ளுவர்,

**" செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்வருந்து வானத்தவருக்கு"**

(குறள்:86)

என்று கூறி, நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்ற வேண்டுமெனவும் அவ்வாறு போற்றுகிறவனுடைய வீட்டில் திருமகள் தங்குவாள் என்றும் உரைத்துள்ளார். அத்தோடு அந்த விருந்தினரைப் போற்றி இனி வரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன் வானுலகிலுள்ள தேவர்கட்கும் நல் விருந்தினனாவான் என வள்ளுவர் எடுத்தியம்பியுள்ளார்.

ஆணும், பெண்ணும் இணைந்து திருமணம் செய்து வாழ்வது தன்னிடத்தில் வரும் விருந்தினர்களை உபசரிக்கவே என்பதை உணரவேண்டும் என்பதை

" இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

எனும் குறள் வழி இல்வாழ்க்கையின் உயிர்துடிப்பாக விளங்குவது விருந்தோம்பலே என வள்ளுவர் கூறுகின்றார்.

இல்வாழ்க்கையில் இணைந்து வாழும் கணவன், மனைவியரின் தலையாயப் பண்பு விருந்தோம்பல் ஆகும். நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டிலே திருமகளானவள் அகமலர்ந்து அவர்கள் வீட்டிலே வாசம் செய்வாள். மேலும் தன்னைக் காணவரும் விருந்தினரை நாள்தோறும் விருந்தோம்பல் செய்து போற்றுகின்றவனுடைய வாழ்க்கை என்றும் துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போவதில்லை என்பதை வள்ளுவர்,

" வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவருந்து பாழ்படுதல் இன்று"

(குறள்.83)

என்ற விருந்தோம்பல் சிறப்பைத் தம் நூலானத் திருக்குறளின் வாயிலாக எடுத்துக்காட்டியுள்ளார்

.

ஒருவன் தான் பெற்ற உணவைப் பழிக்கு அஞ்சிப் பகுத்து உண்ணும் பழக்கத்தைக் கொண்டிருப்பானேயானால், அவனது வாழ்க்கையில் எப்போதும் எக்குறையும் வராது என்பதனை,

" பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

(குறள், 44)

என்ற குறளில் வள்ளுவர் பகுத்துண்ணும் பாங்கு முறையினை விளக்குகிறார். " விருந்தாளி வெளியே அமர்ந்திருக்க தான் மட்டும் உண்பவன் விடத்தை உண்கிறான்" என்றும் மகாபாரதத்தில் சுட்டப்பட்டுள்ளது. இதனை வள்ளுவப் பெருந்தகை,

" விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று"

(குறள்:82)

என்றழகுற எடுத்துரைத்துள்ளார்.

### 3.9 சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல்

சில்பபதிகாரத்தில் கோவலனுக்குக் கண்ணகி உணவு பரிமாறுவதைக் கண்ட மாதரியும் அவளது புதல்வியும் கோவலனைக் கண்ணனுக்கும், கண்ணகியை நப்பின்னைக்கும் ஒப்பிட்டுக் கருதினார் என்பதனை இளங்கோவடிகள்,

" ஆயர்பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ,
நல்லமுது உண்ணும் நம்பி ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்
தொழுனையொற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்..."

கோவலன், கண்ணகியைப்பிரிந்து பல ஆண்டுகள் மாதவியு டன்சேர்ந்து இருந்தான். மாதவியிடம் இருந்து மீண்டும் கேவலன் கண்ணகியிடம் ஏகிய போது கண்ணகி அழுகிறாள். அதன் காரணத்தினை வினவியபோது தான் அழுவது பொன் போனது என்றோ, பொருள் போனது என்றோ, தனது இளமை போய்விட்டதோ என்று இல்லை இத்தனை நாள் கோவலன் இல்லாமல் ிருந்தோம்பல் போய்விட்டதே என்பது தான் என்கிறாள்.

" அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை..."

(மதுரைக் காண்டம் - கொலைக்காதை, 73 -75)

ஒரு ஆண் தனித்து இருந்தாலும், பெண் தனித்து இருந்தாலும் விருந்தினர் வரமாட்டார். ஆணும், பெண்ணும் சேர்ந்த இல்லறத்தாராக இருக்கும் போது மட்டுமே விருந்தினர் வருவர். நம்மைத் தேடி வரும் விருந்தினரை மென்மையான சொல்லைக் கூறியும், உள்ளம் கலந்து உறவாடியும் தங்குவதற்கு வசதியான இடமளித்தும், ஆடை ஆணிகலன்கள் அளிக்க வேண்டும். இவ்வாறு விருந்தினரை உபசரிப்பவர்களைத் தேவர்கள் தம்விருந்தினராக ஏற்றுக் கொள்வார்கள் என ஏலாதி பண்டைத் தமிழரின் விருந்தோம்பும் முறையைத் தெரிவிக்கிறது.

" இன்சோல்,அளவல்,இடம்,இனிது ஊண் யாவர்க்கும்
வன் சொல் களைத்து வகுப்பானேல் - மென் சொல்

முருந்து ஏய்க்கும் மட்போல் ஏயிற்றினாய் நாளும்
விருந்து ஏற்போர் விண்ணோர் விரைந்து”

(ஏலாதி - 7)

என்று எலாதி குறிப்பிடுகின்றது.

**கண்ணகி உணவு படைத்தல்**

மெய் விரல் சிவக்கப் பல்வேறு பசுங்காய்களை அரிவாளில் வைத்துக் கொய்தாள் அவள் திருமுகம் வியர்த்தது கண்கள் சிவந்தன் ஐயை அடுப்புப்பற்ற வைக்க உதவினாள். தன் கைத்திறன் அமையக் கணவனுக்காகச் சமைத்து முடித்தாள்.

பனை ஓலை கொண்டு அழகாக பின்னப்பட்ட தடுக்கை அதனை இட்டாள்˙ அதில் செல்வ மகனாகிய கோவலன் அமர்ந்தான்˙ அவன் அடிகளை கழுவித்துடைத்தாள்˙ தரையில் நீர் தெளித்தாள்˙ குமரிவாழையை விரித்து உணவு பரிமாரினாள். “ அமுதம் உண்க அடிகளே” என்று அன்புடன் கூறினாள். அவனும் தன்குல மரபுக்கு என விதிக்கப்பட்ட சடங்குளின் படி கை,கால் கழுவிக்கொண்டு உண்ண அமர்ந்தான்.

அவள் உணவு இட அவன் உண்ணும் காட்சி ஆயர் மகளிரை மகிழச் செய்தது. அவர்களுக்குக் கண்ணன் நப்பின்னை காட்சி நினைவில் நின்றது. “ ஆயர் பாடியில் யசோதை பெற்றெடுத்த காயாம் பூ நிறத்தவனாகிய கண்ணன் இவன்” என்றும், “ அவன் துயர் கன்னி நப்பின்னை இவள்” என்றும் கூறிப் பாராட்டினர். ஐயையும் அவள் தாயும் விம்மிதம் எய்தினர். “ கண்கொள்ளாக் காட்சி இங்கு நமக்கு இவர்” என்று கூறிப் பாராட்டி மகிழ்ச்சி அடைந்தனர்.

கோவலன் கழிவிரக்கம்

அவன் உணவு உண்டு இனிது இருந்தான். அவனுக்கு வெற்றிலையும் பாக்கும் தந்தனள்.

**கண்ணகி மாற்றம்**

இதுவரை எதிர்த்துப் பேசியது இல்லை. “ ஏன் நீ தடுத்து இருக்க கூடாது?” என்று அவன் கேட்டதற்கு அவள் தன் மனத்தை திறந்து காட்டினாள். அவன் பிரிவில் தனக்கு ஏற்பட்ட துயரை அவள் எடுத்துக் கூறவில்லை. பெற்றோர்கள் அடைந்த வருத்தத்தை

மட்டும் குறிப்பிட்டாள். " இல்வாழ்க்கையின் மையக்கூறு அறம் செய்தல்' அறவோரை எதிர் கொள்ள முடியாமல் ஆகி விட்டது விருந்தினரை அருந்தச் செய்யவில்லை இது தான் பேரிழப்பு" என்று பேசினாள். என்பதன் ஊடாக அவளது பெருந்துயர் புலப்படுத்தப்படுகின்றது.

மேலும் பூம்புகாரின் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்று வழங்கப்பட்ட இரு பாக்கங்களுக்கும் இடையில் அமைந்திருந்த நாளங்காடி (பகற்கடைத்தெரு) என்னும் இடத்திலுள்ள நாளங்காடி பூதத்தினை, இந்திர விழா தொடங்கும் முன்பாக அழகிய மறக்குடிப் பெண்டிர் வழிபடுவர். இவர்கள் காவற் பூதத்துக் கோயிலின் பலி பீடிகையில் புழுங்கல், எள்ளுருண்டை, திணைச்சோறு, மலர்கள், நறுமணம் கமழும் புகை, பொங்கல் ஆகியவற்றையெல்லாம் படைத்துத் துணங்கைக் கூத்து, குரவைக் கூத்து போன்ற கூத்து வகைகளையாடி,

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்க

(சிலப்பதிகாரம் : இந்திரவிழா-489-490)

என வாழ்த்துவார்கள். இவ்வாறு கடவுளுக்கு உணவு படைக்கப்படுவதன் நோக்கம், திருவிழாவிற்கு வருகை தரும் அனைவரும் ஒன்று கூடி மகிழ்ச்சிகரமாக உணவினை உட்கொள்ள வேண்டும் என்பதாகும். மேலும், சமூகத்திற்கிடையில் விருந்தோம்பல் பண்பானது என்றும் நிலை பெற்று காணப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தவே சிலப்பதிகாரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது.

### 3.10 மணிமேகலையில் விருந்தோம்பல்

மணிமேகலை ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் சீத்தலைச்சாத்தனார். இக்காப்பியத்தின் தலைவி மணிமேகலை. சிலப்பதிகாரத்தின் கோவலன் மற்றும் மாதவி என்போரின் மகளாவாள். மணிபல்லவத் தீவு என்னும் தீவில் உள்ள கடல் தெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பக்தியால் கோவலன் மணிமேகலை என்னும் பெயரைத் தன் மகளுக்குச் சூட்டினான். கோவலனின் துயர மரணத்திற்கு பின் மாதவி தன் மகளை ஒரு புத்த துறவியாக வளர்த்தாள்.

மணிமேகலை துறவற வாழ்க்கையை வாழவே பிறப்பெடுத்தாள். ஒரு குளத்தில் மணிமேகலைக்கு கிடைக்கப் பெற்ற அட்சய பாத்திரமானது அள்ள அள்ள குறையாத பாத்திரமாகும். இதன் மூலம் அவள் உலக மக்களின் பசியைப் போக்கினாள். அதனடிப்படையில் நம்மிடம் உள்ளவற்றினை மற்றவர்களுக்கு கொடுத்து உதவுதல் சிறந்த விருந்தோம்பல் பண்பினை எடுத்துரைக்கின்றது. யானைத்தீ எனும் தீராப்பசி சாபத்தைப் பெற்ற காயசண்டிகையின் தீராப்பசியினை தன் அமுத சுரபியின் ஒரு பிடி உணவு கொடுத்து தீர்த்து வைத்தாள் மணிமேகலை.

அது மட்டுமன்றி பல ஏழை மக்களுக்கு உணவளிக்கும் சிறந்த தொண்டினை மணிமேகலை செய்தாள். மணிமேகலை காப்பியம், விருந்தோம்பல் சிறப்பை இல்லறத் தருமமாகக் காட்டாமல் மடப்பள்ளிகளில், மடாலயங்களின் கடமையாகக் காட்டியுள்ளது. அதனால் தான் ' உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று கூறுகிறது மணிமேகலை.

திணையிலக்கியத்தின் பின் தோன்றிய மணிமேகலையில், உணவின் முதன்மையானது,

" அறம் எனப்படுவது யாது எனக் கேட்டபின்
மறவாது இதுகேள் மண் உயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அல்லது கண்டது இல்"

(மணிமேகலை : 25.288-291)

என்று விருந்தோம்பல் சிறப்பினையும், உணவு கொடுத்து பசிப்பிணியைப் போக்குவதையும் பெரிய அறமாகக் கருதியிருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

அறநெறிக்கால தமிழர்கள் விருந்தோம்பலை அறமாகப் போற்றியுள்ளனர். தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு தான் மட்டும் இல்லறம் நடத்தாமல் தன்னால் இயன்ற மட்டும் முறையாக விருந்தோம்பல் செய்து தங்கள் வாழ்க்கையை நடத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**பயிற்சி வினாக்கள்**

1. வேத இலக்கியத்தில் காணப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளை விளக்குக?
2. உபநிடதத்தில் காணப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளை விளக்குக?
3. இராமாயணத்தில் வெளிப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளை விபரிக்குக?
4. மகாபாரதத்தினை அடிப்படையாகக் கொண்டு

   (அ) மகாபாரதத்தின் காலப்பிண்ணனி

   (ஆ) விருந்தை விருந்தினருக்கு அளவோடு பரிமாறும் முறை

   (இ) விருந்தின் சிறப்பு

   ஆகியன பற்றி விளக்குக.

5. பழந்தழிழக மக்களிடம் காணப்பட்ட விருந்தோம்பல் செல்நெறிகளை

   (அ) தொல்காப்பியம்

   (ஆ) ஆசாரக் கோவை

   (இ) திருக்குறள்

   ஆகிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

6. காவிய நூல்களான

   (அ) சிலப்பதிகாரம்

   (ஆ) மணிமேகலை

   ஆகியவற்றில் வெளிப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளை மதிப்பிடுக.

**உசாத்துணைகள்**

1. அழகுகிருஸ்ணன்.போ., (1988), சிலப்பதிகாரம், குரு பதிப்பகம்
2. கிருபானந்தவாரியர்., (2003), மகாபாரதம், குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை.
3. கோபாலகிருஷ்ணமாச்சாரியார்.வை.மு., (2006), கம்பராமாயணம், குவை பப்ளிகேஷன், சென்னை
4. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி, (2003), மகாபாரதம், வானதி பதிப்பகம், சென்னை.
5. சுப்பரெட்டியார்.ந., (2007), திருக்குறள் தெளிவு, சுறா பதிப்பகம்.

6. சிவலிங்கனர்.அ., (1982), தொல்க்காப்பியம் எழுத்ததிகாரம், உலக தமிழ் ஆராய்ச்சி நிலையம்.
7. சுவாமி ஆசுதோனந்தர்., (2002), *தைத்திரீய உபநிடதம்*, ஸ்ரீராமகிருண மடம், சென்னை
8. ஞானசமபந்தன்.அ.ச.,(2002), கம்பராமாயணம், கங்கை புத்தக நிலையம்,சென்னை
9. துறைசாமிப்பிள்ளை.சு., (1965), முப்பெரும் காவியங்களில் ஒன்றான மணிமேகலையின் ஆராய்ச்சி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்.
10. லட்சுமி நாராயணன்.கே.சி., (2007), ஆனந்த வாழ்வுக்கு ஆசாரகோவை, எல்.மே.எம். பப்ளிகேஸன்.
11. ஜம்புநாதன்.ம.ரா.,(2005), *சாம வேதம்*, அலைகள் வெளியீட்டகம், சென்னை
12. ஜெகந்நாசாரியர், சீ., (1986), மகாபாரதச் சுருக்கம், உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,சென்னை.

# அத்தியாயம் - 04

# இந்துசமயத்தில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும்

4.1 சமூக நல்லுறவு – ஓர் அறிமுகம்

4.2 திருமந்திரத்தில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும்

4.3 சமயக்குரவர் திருப்பாடல்களில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும்

4.4 பெரிய புராணத்தில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும்

4.5 ஔவையார் பாடல்களில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும்

## அத்தியாயச் சுருக்கம்

திருமூலநாயனாரால் இயற்றப்பட்ட நூல் திருமந்திரமாகும். சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் அறியப்படும் திருமந்திரம் இந்துக்களின் வாழ்வியல் நெறிகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. சமயக்குரவர்கள் நால்வரில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி நாயனார் எனும் மூவரால் பல்வேறு திருத்தலங்களில் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பே தேவாரமாகும். மாணிக்கவாசகரால் பாடப்பட்டவை திருவாசகமும் திருக்கோவையாருமாகும். ' திருவாசகத்திற்கு உருகாதோர் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்வோம். தேவார திருவாசகத்தில் இறைவனை புகழந்து பாடுவதோடு மட்டுமன்றி பல விழுமிய கருத்துக்களையும் மக்களுக்கு கூறும் வகையில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அதாவது, இறை பக்தி, விருந்தோம்பல், அன்பு, விட்டுக்கொடுப்பு, சகோதரத்துவம் என பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு திருத்தொண்டர்களின் வரலாற்றினை எடுத்துரைக்கும் நூலான பெரிய புராணம் சேக்கிழாரினால் இயற்றப்பட்டது. இதில் இந்துக்களின் உயரிய பண்பாக விருந்தோம்பல் போற்றப்படுகின்றது. இப்பண்பு இனம், சாதி பேதம் கடந்து அனைவரையும் ஒருங்கிணைத்து சமூக நல்லுறவுக்கு வழிசமைப்பதை இவ்விலக்கியங்கள் ஊடாக அறிய முடிகின்றது.

## அத்தியாயத்தின் நோக்கம்

1. திருமந்திரம் வெளிப்படுத்தும் விருந்தோம்பல் சிந்தனைகளை அறிவதோடு, அவற்றினூடாக வெளிப்படும் சமூக நல்லுறவினை புரிந்து கொள்வர்.
2. தேவாரம் மற்றும் திருவாசகத்தில் காணப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளை அறிந்து கொள்வர்.

3. பெரியபராணத்தில் காட்டப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளையும் சமூக நல்லுறவிற்கான அடிப்படைகளையும் அறிந்து கொள்வர்.
4. ஔவையார் பாடல்களில் காணப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளை அறிந்து கொள்வர்.

**கற்றல் பெறுபேறுகள்**

1. திருமந்திரம் வெளிப்படுத்தும் விருந்தோம்பல் சிந்தனைகளை விளக்கி, அவற்றினூடாக வெளிப்படும் சமூக நல்லுறவினை தெளிவுபடுத்துவார்கள்.
2. தேவாரத்தில் காணப்படும் விருந்தோம்பல் பற்றிய கருத்துக்களை பட்டியற்படுத்துவார்.
3. திருவாசகத்தில் காணப்படும் விருந்தோம்பல் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துவார்.
4. பெரியபுராணத்தில் காட்டப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளையும் சமூக நல்லுறவிற்கான அடிப்படைகளையும் அட்டவணைப்படுத்துவார்.
5. ஔவையார் பாடல்களில் காணப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளை பட்டியற்படுத்துவார்.

## 4.1 சமூக நல்லுறவு – ஓர் அறிமுகம்

சமூகநல்லுறவு என்பது முரண்பட்டு நிற்பவர்களிடையே காணப்படும் வன்மம், மனக்கசப்பு, விரோதம் என்பவற்றிற்குப் பதிலாக நட்புறவு, தோழமை என்பவற்றை ஏற்படுத்துவதாகும். அதாவது பல்லின சமூகத்தில் வாழ்கின்ற ஒரு மனிதன் சமூகத்தோடு முரண்பாடுகள் இன்றி இணக்கப்பாட்டுடன் ஒற்றுமையாக வாழப்பழகிக் கொள்ளும் நிலையே சமூக நல்லுறவு எனப்படுகின்றது. காந்தி “ பிற சமயங்களைச் சகித்துக்கொள்ளக் கற்றுக்கொண்டால் மட்டும் போதாது நம் சமயம் போன்றே அவற்றையும் நாம் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இவ்வுலகில் நிலையான அமைதி நிலவும்” என்றார். இந்த மனநிலை ஒவ்வொருவருடைய மனதிலும் பிறக்கும் போதே சமூகநல்லுறவும் உருவாக ஆரம்பிக்கின்றது.

இன்றைய சமுதாயமானது யுத்தம், வறுமை போன்றவற்றால் தாக்கத்திற்குட்பட்டு இனம், மதம், மொழி, பால், கலாசாரம் என்ற பல்வேறு காரணிகளால் பிளவுபட்டிருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் மக்களிடத்தே உள்ள புரிந்துணர்வின்மையே ஆகும். அந்தவகையில் ஒரு நாட்டினது

சுபீட்சத்திற்கும் அபிவிருத்திக்கும் சமூகநல்லுறவு என்ற விடயம் இன்று அவசியம் வேண்டப்படுகின்ற ஒன்றாக அமைந்துள்ளது. சமூகநல்லுறவை சீர்குலைப்பதில் பங்குகொள்ளும் பிரதான காரணிகளாக வன்முறை, போதைவஸ்திற்கு அடிமையாதல், சமயரீதியான பிற்போக்குவாதம், பொருளாதர ஏற்றத்தாழ்வு போன்றவற்றைக் குறிப்பிடலாம். பல்வேறு கலாசாரப் பண்புகளைக் கொண்ட சமூகமே பல்பண்பாட்டுச் சமூகம் எனப்படும். அவ்வாறான சமூகத்தில் எல்லா இனத்தவரும் சமூகத்தவரும் எல்லா மொழி பேசுவோரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அதன் மூலமே முரண்பாடுகள் குறைவடையும். ஒற்றுமை வளரும்; நிலையான சமாதானம் உருவாகும்; நாடும் அபிவிருத்தியடையும்.

மனிதன் என்பவன் தனித்து வாழவே முடியாது. அவன் இணைந்துதான் வாழ வேண்டி இருக்கிறது. இணைந்து வாழும்பொழுது அங்கு சமூகம் என்பது உருவாகிறது. அந்தச் சமூகம் என்பது உலகளாவும் பொழுது உலக சமூகமாக விரிவடைகிறது. விரிவடைந்த சமூகங்கள் பிளவுபடாமல் இருப்பதற்கு சமூக நல்லுறவு அவசியமாக அமைகின்றது. இனமும் மதமும் மொழியும் சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாதனவாகும். இவற்றால் சாந்தியும், சமாதானமும், சகவாழ்வும், ஒற்றுமையும், விட்டுக் கொடுக்கும் பண்பும், அன்பும், அரவணைப்பும், போட்டியற்ற மனோபாவமும், அறம்பற்றிய எண்ணப்பாடும், ஒழுக்கமுடய அரசியலும், நற்பண்புகள் நிறைந்த தலைமைகளும், நல்ல குடிமக்களும் தோற்றுவிக்கப்படுமானால் அவைகள் நிச்சயம் சமூகத்துக்கு இன்றியமையாதாவையாகும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் இவையே சமூக நல்லுறவை பாதிக்கும் காரணிகளாக அமைந்து விடுகின்றன.

சமூக முரண்பாடுகள் ஏற்படாமல் மனிதர்களுக்கிடையே சமூக நல்லுறவு உருவாக ஒவ்வொரு சமயமும் கொண்டுள்ள விழுமியம் நிறைந்த பண்பாட்டு வழமைகளை இன்றைய கால கட்டத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். அந்தவகையில் இந்துமதம் விபரிக்கும் விருந்தோம்பல் பண்பாடு இதற்கு முக்கிய எடுத்துக்காட்டாக அமைகின்றது.

## 5.2 திருமந்திரத்தில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும்

### (அ) திருமந்திரம் ஓர் அறிமுகம்

திருமூலர் இயற்றிய திருமந்திரம் என்னும் தமிழ் மூவாயிரம் சைவத்திருமுறைகள் பன்னிரண்டுள் பத்தாவது திருமுறையாக விளங்கி வருகின்றது. “ தென்தமிழ் பயன்” என்று சேக்கிழார் பெருமானாற் பாராட்டப்பட்ட திருத்தொண்டத் தொகையில்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமூல முனிவரை நினைத்து " நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று நாவார இசைத்து மனமுருகிப் பாடியிருக்கின்றார் திருமூலர் ஒரு ஞானகுரவா். திருமந்திரம் மிகவும் பழமை வாய்ந்த நூல்.

திருமூலரைப் பற்றிப் புராணவரலாற்றில் ஐதீகங்களிலுமிருந்து நாம் உணரக்கூடிய உண்மை என்னவென்றால் மோனத்திலிருந்து எழுந்து வந்த தவமொழிகளே திருமந்திரப் பாடல்கள். பேரின்பத்தைக் கண்ட முனிவர் அந்த இன்பத்தை வையகமும் பெறவேண்டும் என்ற கருணையில் தோய்த்து ஞானத்தை வழங்குகின்றார். இறையுணர்வைத் தமிழகத்திற் பரப்புவதற்காகவே தாம் பிறந்ததாக அவர் பறைசான்றுகின்றார்.

" என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

தவத்தின் பெருமையையெல்லாம் உணர்ந்த தவச்சக்கரவா்த்தி அவர். சிவபெருமானே அவருக்கும் தவபெருமான் என்ற பட்டத்தை அளித்துள்ளார். திருமூலருடைய அருளை நாம் குருவழியாகப் பெறலாம். திருமூலர் ஒன்பது ஆகமங்களின் சாரங்களை ஒன்பது தந்திரங்களாகப் பாடியிருக்கிறார். இதனை,

" நந்தி திருவடி நான்தலை மேற்கொண்டு
புந்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிச் செய்து
அந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தை செய்தாமஞ்செப்ப லுற்றேனே"

என்ற பாயிரச் செய்யுளால் அறியலாம். திருமந்திரம் அனுபவ ஞானத்திருநூல். அருளாளர்களைக் கவரும் பெருநூல். செந்தமிழ் சிறக்க எழுந்த ஒரு நூல். மூவாயிரம் பாடல்கள் கொண்ட மக்களை நல்வழிப்படுத்துகின்ற யோகநூல். தமிழ் மக்கள் அனைவருமே உணர்ந்தொழுக வேண்டிய நூல். உயர்வளிக்கும் ஒரு தனி நூல்.

திருமந்திரத்தில் அடங்காத வேதப் பொருளில்லை. ஆகம இரகசியம் இல்லை. சமயப் பெரியார் உள்ளம், ஞானியர் கருத்து, யோகியர் அனுபவம், சீவன் முத்தர் இயல்பு, அருட்புலவா் கண்ட தத்துவங்கள், அறிஞர் அறிந்த அறிவு இவையனைத்தும் திருமந்திரத்தில் அடங்கியுள்ளன.

திருமந்திரம் பொதுப் பாயிரம், தற்சிறப்பு பாயிரம் என்னும் இரு கூறுகொண்ட பாயிரப் பகுதியும், அதனை அடுத்து ஒன்பது தந்திரப் பகுதிகளின் உட்கருத்துக்களையும் விளக்கும் ஒன்பது தந்திரப் பகுதிகளும் வாய்ந்து அவற்றை மூவாயிரம் மந்திரப் பாடல்களால் பல பல தலைப்புக்களில் விளக்கும் அருமைப் பாடுடையதாய் விளங்குகின்றது.

## (ஆ) திருமந்திரத்தில் விருந்தோம்பல்

அறம் செய்தலில் விருப்பம் உடையவர்களே அறம் வேண்டுமாயின் இரப்பாரை அவர் நல்லர் இவர் தீயர் என அவரது தகுதி வேறுபாடுகளை ஆராயாது யாவர்க்கும் இடுங்கள். உண்ணும் காலத்தில் விரையச் சென்று உண்ணாது விருந்தினர் வருகையை எதிர் நோக்கியிருந்து பின்பு உண்ணவேண்டும். காக்கைகள் தமக்கு கிடைத்த உணவை உண்ணும் போது தம் இனத்தையும் அழைத்துக் கொண்டு உண்ணுதலை காண்பீராக இருந்தால் முன்னோர் தேடிவைத்தனவையையும், நீங்கள் தேடிவைத்தவை ஆகிய பொருளை பொன்காக்கும் பூதம் போல காத்திராது சுற்றத்தார் பலர்க்கும் உதவுங்கள் என்கிறார் திருமூலர். இதனை,

“ ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழும்பொருள் போற்றின்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

ஈக்கள் தேனீனைச் சேர்ப்பதற்குப் பூக்களின் மணங்களை அறிந்து அதன் வழியே பூக்களை அணுகித் தேனைச் சேர்த்துக் கொணர்ந்து ஒரு மரக்கிளையில் வைக்குமே அன்றி அத்தேனை தாமும் உண்ணாது பிறருக்கும் கொடுக்காது. வலிமையுடைய வேடர்கள் இவ் ஈக்களை அப்புறப்படுத்தி தேனினை எடுப்பது போல தாமும் உண்ணாது பிறருக்கும் கொடுக்காது செல்வந்தர்களுடைய செல்வம் களவாடப்படும் என்கிறார் திருமூலர். இதனை,

" ஈட்டிய தேன்பூ மணங்கண் பிரதமும்
கூட்டின் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரத்திட் டதுவலி யார்ளெக்
காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே"

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

உண்ணப் போகும் போது இறைவனுக்கு ஒரு பச்சிலை சூட்டி வணங்குதலும், பசுவிற்கு சிளறிது உணவு கொடுத்தலும், வறியவர்க்குச் சிறிது சோறிடுதலும், அவ்வாறிடும் பொழுது இன்சொல் சொல்லுதலும் எல்லார்க்கும் இயல்வனவே என்கிறார் திருமூலர். இதனை,

" யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் இன்னுரை தானே"

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

பொருள் இல்லாத வறியவர் பொருள் உடையவர் கொடுக்க உண்ணும் அதுவே பொருள் உடையவர்க்கு அறமாகிய நிலை பெறும் முறையை நூல்களால் அறிந்து அறிவு செயலில் மணக்கப் பெறுபவரே மக்களாக மதிக்கப் பெறுவார் என்கிறார் திருமூலர். இதனை,

" அற்றிநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்"

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

அறியாமை வழிப்பட்ட மனத்தை உடையவரே! நீவிர் செல்வத்துப் பயன் ஈதலே அறியும் அறிவை மறைத்து நிற்கின்ற அறியாமையை நல்லோர் இணக்கம் முதலியவற்றால் போக்கி அறிவை நிறைத்துக் கொள்ளமாட்டீர். ஆனால் செல்வ காலத்தில் செல்வத்தை குவித்துக் கொண்டு அதனை காத்து என்ன பயன் அடையப்போகின்றீர்? இறுதிக்காலத்தில் கூற்றுவன் வந்து கோபம் மிகுந்து கண்ணில்

தீப்பொறி பறக்க நம்மைக் கட்டி இழுக்கும் பொழுது என்ன செய்ய வல்லீர்? என்கிறார் திருமூலர். இதனை,

" அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர்? வெம்மை பரந்து
இழுக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே"

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

மெய்மையை ஆராய்ந்தறியும் அறிவுடையீரே! முற்றத் துறந்தவனுக்குச் சுற்றத் தொடர்பு இல்லை. அதனால் அவன் இறைவனை மறவான். மறவானாகவே அவனுக்குக் கெடுவது யாதும் இல்லை. அஞ்ஞானம் முற்றத் துறக்க மாட்டாதவன் சுற்றத்தோடு கூடிவாழும் பொழுது அறம் செய்யாத இறந்தொழிவனாயின், அதன் பின்னர் அவனுக்கு அறமேயன்றி அவன் விரும்பிய இன்பமும் இல்லையாம். இவன் வாழும் காலத்தில் மறந்தவனாக இருந்தால் மறுமையில் இறைவனும் துணைவரான். அதனால் நீவீர் இல்லறம், துறவறம் என்னும் இருவகை அறங்களின் தன்மையை அறிந்து அவற்றுள் இயன்றதொன்றில் நில்லுங்கள் என்கிறார் திருமூலர். இதனை,

" துறந்தான் வழிமுதற் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பம் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அயவறி வாரே"

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

அறம் செய்வதற்கு இல்வாழ்க்கை, துறவு நிலை என இரண்டு வழிகள் உண்டு. அவற்றுள் அழிதல் இல்லாது நின்று நிலவும் புகழை உடைய துறவோன், தனக்கும் தன் சுற்றத்திற்கும் பயன் விளைவு மாறு செய்யும் தவம், உயிர் கரை காணமட்டாது அழுந்திக் கிடக்கின்ற வினையாகிய கடலை நீந்துதற்கு அமைந்த தோணியாய், பிறந்தும், இறந்தும் உழலும் இளைப்பிள்ளை நீக்கும் இல்லறத்தில் நின்று செய்யும் விருந்தோம்பல் முதலிய அறம் மறுமையில் துணைவரும் என்கிறார் திருமூலர். இதனை,

“ திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கிளைகீகுந் தனக்கும் அக் கேடில் புகழோன்
விளைக்குந் தவம் அறம் மேற்றுணை யாமே”

உங்களால் மனம் பொருந்தி பிறருக்கு ஈந்து உண்டாயின் அதுவே உங்கட்குத் துணையாவது. இன்னும் அப்பொருமான் வகுத்த நன்னெறியை மேற்கொள்ளும் முறைமையும் அதுவேயாம் என்கிறார் திருமூலர். இதனை,

“ உற்றுங்க ளால் ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்றணணல் வைத்த வழிகொள்ளு மாறே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

எட்டிமரத்தில் பழுத்த பெரிய பழங்கள் ஒருவருக்கும் பயன்படாது வீழ்ந்து அழிந்து போவனவாகிய பொருந்திய நல்லறம் செய்யாத உலோபிகளது பொருள் வட்டி மிகப் பெறுதலாலே குவிந்து, மண்ணில் குழிபறித்துப் புதைக்கும் பட்டொழிவதேயாகும். பட்டிகளாகிய தீவிணையாளர் அறத்தின் பயனை அறியார் என்கிறார் திருமூலர். இதனை,

“ எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன்ன
ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டில் பதகர் பயன் அறியாரே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

பலவகை நோய்களும், இடைஇறப்பும் போல்வனவாகிய இம்மைத் துன்பங்கள் பலவும் அறம் செய்யாதவரிடத்தே செல்வன் அறஞ்செய்வார் இருக்கும் திசையையும் அவை நோக்கா என்கிறார் திருமூலர். இதனை,

“ இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால வாகும்
உருமிடி நாக முரோணி கழலை

கருமஞ்செய் வார்பக்கல் சாரகி லாவே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

வாழ்நாள் வாழா குறையைப்பெற்ற மக்களே, நீவிர் யாவராலும் போற்றப்படுகின்ற சிவபெருமானைத் துதிக்கவும் இல்லை. இரப்பார்க்கு ஈதலும் இல்லை குடத்தால் நீர்முகந்து ஊற்றிச் சோலைகளை வளர்க்கவும் இல்லை ஆகவே இறந்த பின் நரகத்தில் நீங்காது இருக்கப் போகின்றீர்களோ? என்கிறார் திருமூலர். இதனை,

. “ பரவப் படுவான் பரமனை ஏத்தீர்
இரவலர்க் கீதலை யாயினும் ஈயீர்
கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கீர்
நரகத்தில் நிற்றிரோ நாள் எஞ்சி னீரே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

இன்பம் கெடுவதற்கு ஏதுவாகிய பாவத்தைச் செய்தல் விலங்கின் செயலேயாகி விடும் அதனை அறிந்து நீவிர் உயர்ந்தோர்க்குக் கொடுதலையும், தாழ்ந்தோர்க்கு ஈதலையும் செய்ய நினையுங்கள் என்கிறார் திருமூலர். இதனை,

“ இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவதும் செய்யிற் பசுவது வாமே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

இறைவன் உயிர்கட்கு இன்பம், துன்பம் என்ற இரண்டை வகுத்து வைத்து அவை முற்பிறப்பில் செய்தவினை அறமும், மறமும் என இரண்டாய் இருத்தல் பற்றியேயாம். அதனால் முற்பிறப்பில் அறம் செய்தவர்கள் இப்பிறவியில் இன்பம் நுகர்தலைக் கண்டுவைத்தும் இரப்பவர்க்கு ஈதலைச் செய்யாத அறிவிலிகள் உள்ளத்தில் அன்பு என்னும் பண்பு இல்லாதவரேயாவர். அவர் அறம் என்பதையும் அறியார் என்கிறார் திருமூலர். இதனை,

“ இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் இதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம் அறியாரே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

அறிவுடையீர் சிலவிடத்தும் சிலராகவும் சில விடத்துப் பலராகவும் வாழ்வரது பெருவாழ்வாகிய செல்வத்தைக் கண்டு. அதனாலே அவர் ஈவர் என்று கருதி அற்பராயிருப்பவரைப் புகழ்ந்து, பயன் கிடையாமையால் பின் வருத்தப்படாமல் வீடு கருதி இறைவனைத் துதியுங்கள் அதுவே வில் வல்லோன் எய்த அம்புக் குறிபோலத் தப்பாது பயன் தருவதாகும் என்கிறார் திருமூலர். இதனை,

“ செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்
இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கெய்த விற்குறி யாமே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

அந்தணர் வாழும் வீதிகள் பலவற்றை அவர்கட்குத் தானம் செய்தலும், அவ்வீதிகளில் அவர்கட்கு உயர்ந்த மாட மாளிகைகள் பல கட்டித் தடுத்தலும் ஆகிய இவற்றால் விளையும் பயன்கள் யாவும் மாகேசுரன் ஒருவனை வழிபட அவன் உண்டதனால் விளையும் பயனளவிற்கு ஒவ்வாது குறைவனவே என்பது உறுதி என்கிறார் திருமூலர். இதனை,

“ அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்தே முடிக்கில்லென்
பகரு ஞானி பகலுண்பலத் துக்கு
நிகரிலை யென்பது நிச்சயந் தானே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

ஆறு அங்கங்களால் தெளிய உணர்த்தப்படும் வேள்விகளைச் செய்கின்றவரும், வேதமாகிய நூலை ஓதுகின்றவரும், முப்புரிநூல் அணிபவரும் ஆகிய அந்தணர்கள்

உண்டு மகிழ்வதனால் உண்டாகின்ற பயனோடு திருநீற்றை அணிகின்ற சிவனடியார் சிலர் உண்டு மகிழும் மகிழ்ச்சியால் விளைந்து நிலைக்கின்ற பயனை வைத்து எண்ணிப் பார்க்குமிடத்து, முன்னர் கூறிய பயன் பின்னர் கூறிய உணவில் ஒரு பிடியினால் விளையும் பயனேயாகும் என்கிறார் திருமூலர். இதனை,

" ஆறிடு வேள்வி அருமறை சாலவர்
கூறிடு மந்தணர் கோடிபேர் உண்பதில்
நீறீடுத் தொண்டர் நினைவின் பயன் ருலை
பேறெனில் ஓர்பிடி போறது வாகுமே"

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

ஒரு வயலையே தங்களுடையதாகக் கொண்டிருப்பவர் அது தரிசாக கிடைத்தால் விளைவு ஒன்றையும் பெறமாட்டார். அது போல சிவனடியார்கள் அடியவர்களுக்கு என்று நினைத்துச் சமைத்த உணவையே இ∴து எட்டுத் திக்கினையும் நிறைவு செய்யும் அமுதமாகும் என விரும்பி உண்பதன்றி தமக்கும் தம் கேளிர் கிளைஞர் கட்குமே என்று நினைத்துச் சமைத்த உணவை உண்ணமாட்டார்கள் என்கிறார் திருமூலர். இதனை,

" எட்டுத் திசையும் இறைவன் அடியவர்க்கு
அட்ட அடிசில் அமுதென் நெறிதிர் கொள்வர
ஓட்டி ஒருநிலம் ஆள்பவர் அந்நிலம்
விட்டுத் கிடக்கில் விருப்பில்லை தானே"

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

சிவபெருமான் பிரமனது தலை ஓட்டினையே கலமாகக் கொண்டு எங்கும் சென்று பிச்சையேற்றான். ஏன்? இயல்பாக அறம் செய்யாதவரும் உயிர்ந்தோர்க்குக் கொடுத்தலாகிய செயல் வாய்த்து அறம் பெறுதற் பொருட்டு இன்னும் அ∴தேயன்றி, தானே பரம் பொருள் என்பதை விளக்குகின்றது என்கிறார் திருமூலர். இதனை,

“ பிச்சைய தேற்றான் பிரமன் தலையினில்
பிச்சைய தேற்றான் பிரியா தறஞ்செய்யப்
பிச்சைய தேற்றான் பிரமன் சிரங்காட்டிப்
பிச்சைய தோற்றான் பிரான்பர மாகவே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

சிவபெருமானை உலக முதல்வனாக உணராதவர்கள் அவன் இரத்தலை மட்டுமே நோக்க அது பற்றி இகழ்ந்தொழிவர் அவர்களை போலன்றி அவனை உலக முதல்வனாக உணர்பவர் சிவன் ஏன் இரக்க வேண்டும் என ஆழ்ந்து நோக்குவர். அங்கனம் நோக்குவார்க்கு அவன் அடியவர் உலகியலில் ஈடுபடாது பசி நீக்குதல் மாத்திரைக்குத்தன் செயலைப் போலவே இரத்து உண்டு முடிவில் தனது திருவடியடையும் நோக்குத் தப்பாது நிறைசெய்துதற் பொருட்டாம் என்கிறார் திருமூலர். இதனை,

“ பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பர் ஏற்றுக் கிரக்கும்
நிரந்தர மாக நினையும் அடியார
இரந்துண்டு தன்கழல் எட்டுச் செய்தானே”

எனும் பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டுகின்றார்.

திருமூலர் உலகமக்களின் நலன் கருதி ஒருசில வாழ்வியல் தத்துவங்களை மக்கள் கடைபிடிக்க வேண்டும் என்று கூறுகின்றார். அவ்வாறான அறநெறிக்கருத்துக்களையும் தத்துவங்களையும் கடைப்பிடிக்கும் போது வீடு, நாடு, சமூதாயம், உலகம் என அனைத்து உயிர்களும் உலக மக்களும் பயனடைவார்கள் எனக்கூறி இளமை, யாக்கை, செல்வம் இதெல்லாம் நிரந்தரமற்றது என்றும் செல்வத்தின் பயன் அடுத்தவா்க்கு கொடுத்து உதவுவதேயாகும். ஒவ்வொரு மனிதனும் ஆசையை அகற்றி அற வாழ்வில் செல்ல வேண்டும் என்றும் கூறுகின்றார்.

### 4.3 சமயக்குரவரின் திருப்பாடல்களில் விருந்தோம்பல்

சமயக்குரவர்கள் என்ற வரையறைக்குள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகர் ஆகிய நாயன்மார்களையும் குறித்துக்காட்டுவது பொதுவழக்காகும்.

வீடு தேடி வருகின்ற விருந்தாளிகளை, நண்பர்களை, உறவினர்களை மகிழ்வோடு இருகரம் கூப்பி வரவேற்று உபசரிப்பதே விருந்தோம்பலாகும். விருந்தோம்பல் இல்லாதோரை மடமையுடையோர் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அந்த வகையில் சங்க காலம் தொட்டு தற்காலம் வரை வேர்விட்ட விருட்சமாக வளர்ந்திருக்கிறது விருந்தோம்பல் பண்பு.

அந்த வகையில் " பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்..." என்று உலகுக்கு சொன்னதில் இந்து சமயம் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்து சமய இலக்கியங்கள் விருந்தோம்பலைப் பற்றி பெரிதும் பேசுகின்றன. தேவாரங்கள் தொடக்கம் பெரிய புராணம் வரை விருந்தோம்பல் பற்றிய கருத்துக்கள் பொதிந்துள்ளமையை அவதானிக்கலாம்.

## (அ) திருஞானசம்பந்தரின் பாடல்களில் விருந்தோம்பல்.

- முதல் மூன்று திருமுறைகளான சம்பந்தர் பாடல்களில் விருந்தோம்பல் பற்றிய பலவிதமான கருத்துக்கள் காணப்படுகின்றன.

- பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி அன்பர்கள் இடும் உணவைப் பெற்று உமையம்மையை இடப்பாகமாகக் கொண்டவர் சிவபெருமான் எனக் கூறுவதன் வாயிலாக மக்கள் சிவனுக்கு அன்போடு உணவளிக்கும் விருந்தோம்பல் பண்பை அவதானிக்க முடிகின்றது.

" ...கையிற்பலி வாங்காக் கூறேறிய மடவாளொரு...."

- மேலும் சம்பந்தர் சிவபெருமானை ஊர்கள் தோறும் உலாவுவதால் கிடைக்கும் உணவைப் பெற்று, கங்கை நீரைத் தன் திருமுடியில் ஏற்றவர் என்கிறார். இவ்வாறாக இந்து மக்கள் தம் விருந்தோம்பும் பண்பினை பரமன் உணவு பெற்று உண்டதன் மூலமாக அறிய முடிகின்றது.

" ஊரு லாவு பலிகொண்டுலகேத்த..."

- காட்டின்கண் முனிவர் குடில்களிலும் நாட்டின்கண் இல்லறத்தார் வீடுகளிலும் விரும்பிப் பலியேற்று முத்திப் பேற்றை அடைய விரும்பும் அந்தணர் வாழும் நறையூர் என்பதனூடாக இந்து மக்கள் அந்தணர்களுக்கு வழங்கும் விருந்துபசாரம் பற்றிப் பேசப்படுகின்றது.

“ காடு நாடுங் கலக்கப் பலிநண்ணி...”

- மேலும் அயலார் இல்லங்களில் பலி கொண்டருளும் அழகனாகிய சிவபிரான் என்பதனூடாக, பக்தர்களின் இல்லங்களில் விருந்தை ஏற்கும் பண்பும் மக்கள் சிவபிரானுக்கு விருந்து வழங்கும் விருந்தோம்பல் பண்பும் குறிப்பிடப்படுகிறது.

“ .....அயலார் கடையிற் பலிகொண்டவழகன்..

## (ஆ) திருநாவுக்கரசர் பாடலில் விருந்தோம்பல்.

- “ ...இல்லம் இட்டமாக இரந்துண்டு உழித்தரும் அட்டமூர்த்தி அண்ணாமலை..”

அதாவது, இறைவன் மனைகள் தோறும் சென்று அவர்கள் கொடுக்கும் உணவை விரும்பி உண்பர். இவ்வரிகளின் ஊடாக விருந்தோம்பல் பண்பு வெளிப்படுவதைக் காணலாம். மனை தேடி வருவோர்க்கு இல்லையென்னாது உணவளிக்கும் பாங்கே விருந்தோம்பல் ஆகும். இங்கு மனை தேடிச் செல்லும் இறைவனுக்கு உணவளிப்பதாகவும் அதனை அவர் விரும்பி உண்பதாகவும் நாவுக்கரசர் கூறுகிறார்.

- தேன் மணம் வீசும் திருவொற்றியூரில் உறையும் பெருமான் இல்லங்கள் தோறும் எழுந்தருளி உணவு பெற்று உண்பர். என்றவாறாக விருந்தோம்பல் பற்றி பின்வரும் பாடலடியில் நாவுக்கரசர் எடுத்தியம்பியுள்ளார்.

“ தானகம் காடரங் காக உடையது.....”

- சிவபெருமான் மறுமைக்கு உணவை சேமித்து வைக்காது பிச்சை ஏற்று உண்பவன் என்கிறார் நாவுக்கரசர். இங்கு பிச்சை என்பதன் வாயிலாக மக்களிடத்தே விருந்தோம்பல் பங்கினை வளர்க்கும் முகமாக இந்துசமயம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

“ ......கம்பன்காண் பிச்சையல்லால் மற்றூணொன் றில்லாத மாசது....”

- திருநாவுக்கரசு நாயனாரின் பாடல்களில் மக்களிடம் மாத்திரமன்றி இறைவனிடமும் விருந்தோம்பல் பண்பு உண்டென்பதை “ அடியவர்களுக்கு அமுதொப்பவர்...” என்றும் “ அமுத யோகத்தை வழங்கும் திருநீற்று மேனியர்...” என்றும் கூறுவதன் வாயிலாக முன்வைக்கிறார்.

இதனை பின்வரும் பாடல்களில் காணலாம்.

" ...சாந்தார்க் கமுதா னான்காண்...."

" ....சாந்தார்க்கின் னமுதா னான்காண்..."

" .....அடியார்க் கமுதா னான்காண்..."

" அடியர் ஏந்தும் அமுதனை அமுத யோக நீற்றனை..."

## (இ) சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரப் பாடல்களில் விருந்தோம்பல் பண்புகள்.

• சுந்தரரின் பாடல்களில் இறைவன் கடும் பகலில் உணவுப்பிச்சை கேட்டு மக்களின் இல்லந்தோறும் செல்வதாக கூறப்படுகிறது. இல்லம் தேடிச் செல்லும் இறைவனுக்கு உணவு வழங்கும் பண்பினூடாக இங்கு விருந்தோம்பலை அவதானிக்க முடிகின்றது.

" ...இடுபிச்சைக்கு எச்ச உச்சம் போது..."

• அடியார்கள் பஞ்ச காலத்தில் பசிக்கு உணவின்றி வருந்தாமல் இருக்க, திருவீழிமலையில் உறையும் இறைவன் நாள்தோறும் பொற்காசு அளித்து அவர்கள் பசியால் வாடாமல் காத்தருளுகிறான். இதன் மூலமும் விருந்தோம்பல் பண்பு வெளிப்படுவதைக் காணலாம்.

" ...அடியவர்கள் வருந்தாமை அருந்த நிறைமறையோர்..."

• இறைவனுக்கு சுவையான பல்வேறு உணவை ஊட்டி உண்ணச் செய்ய ஊரில் பலர் இருக்கின்றார்கள். என தன் பாடலில் சுந்தரர் கூறியுள்ளார். இதனூடாக விருந்தோம்பலின் உச்ச கட்டத்தை சுந்தரரின் பாடலில் அவதானிக்க முடிகின்றது.

" ஊட்டிக் கொண்டு உண்பதோர் ஊணிலர் ஊரிடு இச்சையல்லால்..."

• அந்தணர்கள் வட்டவடிவமாக அமைக்கும் ஓம குண்டத்தில் தூய்மையான நெய்யால் எரி வளர்த்து போற்றி அதன்கண் சமைக்கப்பட்ட உணவை இறைவன் ஏற்று உண்பதாக சுந்தரர் தன் பாடலில் கூறியுள்ளார்.

" ....வட்டக் குண்டத்தில் எரிய வளர்த்து ஓம்பி மறை பயில்வார் அட்டக்கொண் உண்பது..."

- “ எல்லா இடங்களிலும பிச்சை ககேட்டுத் திரிந்தால் பிறர் உம்மை வெறுப்பர் அன்றோ..? எனவே அன்போடு பிச்சை இடுவார் இல்லம் மட்டும் சென்று பிச்சை பெறுமின்” என சுந்தரர் பரமனை நோக்கி கூறுகிறார். இதன் வாயிலாக விருந்தோம்பலாக இருந்தாலும் அன்போடு அதை உவந்து செய்வதே சாலச் சிறந்தது எனும் கருத்து வெளிப்படுகின்றது. அன்போடு செய்யும் விருந்துபசாரமே என்றும் சிறந்தது.

“ ...பக்தியினால் இடுவார் இடைப்பலி கொள்மினோ...”

- திருமுதுகுன்ற மக்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள் என்பதனை பின்வரும் பாடலில் அவதானிக்கலாம்.

“ செட்டி நின் காதலி ஊர்கள் தோறும் அறஞ்செய அட்டுமின்....”

அதாவது இறைவன் இல்லங்கள் தோறும் சென்று கடைவாயிலில் இனிமையாக சமைத்த உணவை ஏற்று உண்பர் எனப்படுகிறது.

### (ஈ) திருவாசகத்தில் விருந்தோம்பல் பண்புகள்.

- மாணிக்கவாசகர் தன்னுடைய பாடலில் பன்றிக்குட்டிகளுக்கு பாலூட்டி அருள் புரிந்தவனே என இறைவனைப் போற்றி எனப் பாடியுள்ளார். இதனூடாக பசியில் இருந்த பன்றிக்குட்டிகளுக்கு தாய்ப் பன்றியாக மாறி பாலூட்டியதும் விருந்தோம்பல் எனும் பண்பினுள்ளேயே அடங்கும். இதனை,

“ ஏனங் குருளைக் கருளினை போற்றி....”

பாடலடியில் காணலாம்.

## 4.4 பெரிய புராணத்தில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும்

### (அ) பெரியபுராணம் ஓர் அறிமுகம்

திருத்தொண்டர் புராணம் எனும் இந்நூல் பெரியபுராணம். திருத்தொண்டர் புராணம், திருத்தொண்டர் மாக்கதை எனும் பெயர்களில் வழங்கப்படுகிறது. சேக்கிழார் இந்நூலுக்கு இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம். ஒருவர் தன்னலம் கருதாது மற்றவற்கு செய்யும் செயலைக் குறிக்கும். இறைவனுக்கு செய்கின்ற தொண்டும் இறைவனோடு தொடர்புடைய அடியார்க்குச் செய்யும் தொண்டையும் குறிக்கும்.

இத்தகைய திருத்தொண்டு செய்யும் அடியார்களின் வரலாறு இந்நூலில் பாடப்பட்டுள்ளது.

சேக்கிழார் திருத்தொண்டர் தொகையையும், திருத்தொண்டர் திருவந்தாதியையும் தொகை வகை நூல்களாக கொண்டு திருத்தொண்டர் புராணத்தைப் பாடியுள்ளார். தொகை நூல் பதினொருபாடல்களையும் வகைநூல் எண்பத்தொன்பது பாடல்களையும் கொண்டது. பெரியபுராணம் இரண்டு காண்டங்களையும் 4286 பாடல்களையும் கொண்டது. சுந்தரர் விண்ணுலகின்றும் மண்ணுலகிற்கும் வந்ததைக் கூறும் முதல் தருக்கம் திருமலை தருக்கம் என்னும் பெயர் பெற்றது. சுந்தரர் மீண்டும் விண்ணுலகைச் சென்று சேர்வதைக் கூறும் இறுதிச் தருக்கம் வெள்ளானைச் தருக்கம் எனப் பெயர் பெற்றது. சேக்கிழார் என்பது குடிப்பெயராகும். இப்பெயரில் பன்னிருவர் உள்ளனர். இவர்களுள் பெரியபுராணம் பாடியவர்உத்தமசோழப்பல்லவராயன் என்னும் சிறப்பு பெயராகும். உத்தம சோழபல்லவராஜன் என்பது அறபாய மன்னன் அளித்த சிறப்பு பெயர். அருண்மொழிதேவர் என்ற சிறப்பு பெயரும் இவருக்குண்டு.

### (ஆ) இளையான் குடிமாறன் நாயனார் புராணத்தில் விருந்தோம்பல்

பெரியபுராணத்தில் விருந்தோம்பல் பண்பினை தன் வாழ்வியல் கடைமையாக கொண்டு வாழ்ந்தவர் இளையான் குடிமாறன் நாயனார். நாயன்மார்கள் அவர்களின் தலையாய முன்னிடத்தில் இருந்தவர் இளையான் குடிமாறன் நாயனார். தன்னிடத்தில் உள்ள செல்வங்கள் அனைத்தையும் கொண்டு அன்பர்களுக்கு அன்னமளிக்கும் அருந்தொண்டினை ஆற்றிய பெருமைக்குரியவர். இவரது விருந்தோம்பும் பண்பினை,

“ ஏரின் மல்கு வளத்தினால் வரும்
எல்லை இல்லது ஓர் செல்வம்
நீரின் மல்கிய வேனியர் அடி
யாத்திரத்தின் நிறைந்தது ஓர்
சீரின் மல்கிய அன்பின் மேன்மை
திருந்த மண்ணியம் சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை
பெற்றவை நீடு பயன் கொள்வார்…”

என்ற பாடலில் ஏர்த்தொழிலினால் நிறைந்து பெருகும் உழவு வளங்களினால் வரும் உணவும் அவை எமக்கு அளிக்கும் செல்வமும், கங்கையை தாங்கிய இறைவனின்

அடியார்களின் மத்தியில் நாம் அன்பினை செலுத்துவோமெனின் எமக்கு நிலைத்த மனமும் (திருப்திமிக்க மனமும்) உலகிலே வளர்ச்சியும் தரவல்ல நீண்ட பயனையும் பெறுவோம் என்று விருந்தோம்பலுக்கு அடிப்படையான உழவின் வளம் பற்றி தெளிவு படுத்துகின்றது.

" ஆரம் எண்பு புனைந்த ஐயர் தம்
அன்பர் என்பது ஓர் தன்மையாள்..."

தம்மிடத்தில் எதிர்ப்படும் அடியார்கள் எக்குலத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும். எந்நெறி கொண்டவர்களையும் எலும்பினை ஆயுதமாக பூண்ட இறைவனின் அடியார் என்று கருதி ஒப்பிட்ட அடியார் பக்தியால் அவர்களிடம் சென்று அழைத்து கைகுவித்து அவர்களின் திருச்செவியில் நுழையும் படி (எப்போதும் கேட்போர் மகிழும் படி பேசுதல்) என்பினால் ஆன மொழிகளை பேசுதல் வேண்டும் என்று விருந்தினரை அடியார்களாக மதித்து போற்றும் பண்பு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

" கொண்டு வந்து மனை புகுந்து
குலாவி பாதம் விளக்கியே..."

என்ற பாடலில் தம்முடைய இல்லத்திற்கு வரும் அடியவர்களை அழைத்து வந்து அவர்களின் திருவடிகளை நீரால் கழுவி அதன் பின்னர் உள்ளத்தால் நிறைந்த ஆசையினால் அரிய ஆசனத்தில் எழுந்தருளச் செய்து மலர்களை கொண்டு அர்ச்சனை செய்த பின்னர் உண்பதற்கு ஏற்ற நால்வகை உணவுகளையும், அறுசுவை உணவுகளான கசப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு போன்ற உணவுகளைப் படைத்து அவற்றை ஈசன் அடியவர்கள் மகிழும் படி அளிப்பார் என்று விருந்தினருக்கு விருந்து படைக்கும் முறையினை கூறியுள்ளார்.

" ஆளும் நாயகர் அன்பரானவி
அளவிலார் உளம் மகிழவே.."

இறைவனின் அன்பர்களை மனம் மகிழ்ந்து ஒவ்வொரு நாளும் அழைத்து திருவமுது செய்து இவர்களின் அன்பினை அனுபவித்த தன்மையின் பயன் நீண்டபெரும் செல்வத்தினை நீடித்து பெருகிட எனது தோழராகிய அழகாபுரியினை ஆளும் தம்தோழராகிய குருபரனே இவர் என கூறும்படி வாழ்ந்து வந்தார்.

" செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வது அன்றியும் மெய்வியல்
அல்லல் நல்குறவு ஆனபோதிலும்
வல்லம் என அறிவிக்கவே.."

செல்வம் மிகுந்து இருக்கிற காலத்தில் இத்தகைய விருந்தோம்பலை செய்தது மட்டுமின்றி மெய்யினால் துன்பம் விளைவிக்கும் வறுமை வந்த காலத்திலும் விருந்தோம்பலை செய்வதில் வல்லவர். செழிப்பாக இருந்த செல்லம் மெல்ல மெல்ல குறைந்து நித்தமும் மாறி பின்னர் வறுமை நிலை உற்ற போதும் தில்லையில் இருக்கும் இறைவனின் திருவருளை சிந்தித்தார் என்று வறுமையிலும் விருந்தோம்பும் செயல் இங்கு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

" இன்ன ஆறுவளம் சுருங்கவும்
எம்பிரான் இளையான் குடி
மன்னன் மாறன் மனம் சுருங்குதல்.."

என்ற பாடலில் செல்வங்களும் செல்வத்தால் உண்டான வளங்களும் நாளுக்கு நாள் குறைந்து வருகின்ற போதும் இளையான் குடிமாறனாரின் மனம் மட்டும் சுருங்க வில்லை. அன்று தொடங்கி இன்று வரை பசி தீர்க்கும் பணிதனீல் ஈடுபட்டார். பொருள்களை விற்றும் கடன்களை பெற்றும் அடியார் பூசையை நிறுத்தி விடாது வழக்கம் போல் நடத்தி வந்தார் என்று கூறப்படுகின்றது.

" மாரி காலத்து இரவினில் வைகை ஓர்
தளிப்பு இன்றி பசி தலை கொள்ளாது
பாடுத்து இல்லம் அடைந்த பின் பண்பு உர
வேரித்து தாராண் விருந்து எதிர் கொண்டனர்..."

மழைக்காலத்தில் ஒருநாள் இரவுப் பொழுதில் பொறுத்து இருக்க முடியாத பசியானது வருத்த இதனை அடக்க முடியாமல் தவிர்த்த படி வீட்டுக்குள் புகுந்த தேன் பொருந்திய குவளை மலர்களாகிய மாலையணிந்த நாயனாரை (சிவன்) வரவேற்று அவரது பசியினை தீர்க்க முயல்கின்றமையை நோக்கக் கூடியதாக உள்ளது.

" ஈரமேனிய நீக்கி இடம் கொடுத்து
ஆயிரம் அமுது ஊட்டுவதற்கு ஆசையால்
தார மாதரை நோக்கி தபோதனர்
தீரவே பசித்தார் என் என்று..."

விருந்தே புதுமை என்பதற்கு ஏற்ப புதியவராய் வந்தவரை வீட்டிற்குள் அழைத்து சென்று அவர் திருமேனியை துணியால் துடைத்து குளிரால் நடுக்கமுறாத ஓர் நல்ல இடத்தினை கொடுத்து அவரைத் துன்பப்படுத்துகின்ற அந்த தீராத பசியினை போக்குவதற்கு என்ன செய்வேன் என எண்ணி அவருக்கு நல்ல அமுது படைக்க வேண்டும் என்ற பேராசையினால் தமது இனிய மனைவியை நோக்கி இதற்கு நாம் என்ன செய்வோம் என கேட்டு தமக்கே உணவு இல்லாத போதும் அடியவர்க்கு உணவு அளிக்க முயல்வதில் வறுமையிலும் விருந்தோம்ப வேண்டும் என்ற எண்ணம் புலனாகின்றது.

அடியார் வீட்டுக்கு விருந்தினராக வந்திருந்த வேளையில் வறுமையின் மிகுதியால் வீட்டில் உணவுப்பொருட்கள் எதுவும் இல்லாத காரணத்தால் வயலில் விதைத்த நெல்லினை மழையில் நனைந்த படி இருள் சூழ்ந்த நள்ளிரவுப் பகுதியில் வயலுக்குச் சென்று கூடையில் முழுமையாகச் சேர்த்து அதனை சுமந்து விரைவாக வீட்டுக்கு வந்து மனைவியிடம் கொடுத்து அதனை சமைத்து அடியார்க்கு விருந்து படைத்தார் என்பதில் இருந்து விருந்தோம்பல் பண்பு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

### (இ) அப்பூதியடிகள் நாயனார் புராணத்தில் விருந்தோம்பல்

அப்பூதியடிகள் திங்கள் ஊரில் மறைவயவர் குலத்தில் தோன்றியவர். திருநாவுக்கரசு நாயனாரைப் போற்றி பேரன்பு உடையவராக வாழ்ந்தவர். இவர் திருநாவுக்கரசு நாயனார் மேல் கொண்ட பேரன்பால் தன் குழந்தைகளுக்கும் மற்றும் மனையிலுள்ள பசு முதலியவற்றுக்கும் திருநாவுக்கரசு என்ற பெயரைச் சூட்டியவர். இவர் அமைத்த தர்மசாலை முதலியவற்றுக்கும் திருநாவுக்கரசர் என்ற பெயரைச் சூட்டி நல் அறங்களை பேணி வாழ்ந்தவர். இதனை கீழ்வறுமாறு நேக்கலாம்,

" தாண்டவம் புரிய வல்ல தம்பிரானருக்கு அன்பர்
ஈன்டிய புகழின் பாலார் எல்லையின் தவத்தில் மிக்கார்
ஆண்ட சீர் அரசின் பாதம் அடைந்து அவர் அறியா முன்னே
காந்தரு காதல் கலந்த அன்பினராய் உள்ளார்"

சிதம்பரததில் நடனம் புரிகின்ற இறைவனுக்கு அன்பரும் சிவனின் அருளால் புகழ் பெற்று விளங்குபவரும் எல்லையில்லாத சிறந்த தவத்தின் மேன்மையானவராகவுள்ள திருநாவுக்கரசர் நேரில்காண முன்னே அனைவராலும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் அன்பு கொண்டவராக அப்பூதியடிகள் காணப்படுகிறார்.

" வடிவுதான் காணார் ஆயும் பண்ணசீர் வாக்கீன் வேந்தர்
அடிமையும் தம்பிரானார் அருளும் கேட்டு நாமாத்தாள்
படிநிகர் மடங்கல் தண்ணீர் பந்தல்கள் முதலாய் உள்ள
முடிவில்லா அறங்கள் செய்து முறைமையல்லார் வாழும்நாளில்"

திருநாவுக்கரசரை நேரில் காணவில்லையாயின் அவர் சிவன்பால் கொண்ட அடிமை இறைவன் அவனுக்கு செய்த கருணையை கேட்டு ஆருராரின் திருநாமப்படியே உலகில் உள்ள மடங்கள், தண்ணீர் பந்தல்கள் முதலான அறச்செயல்களை செய்து வாழ்ந்தவராக காணப்படுகின்றார்.

" தேசம் உய்யவந்தவார திருவமுது செய்விக்கும் நேசம் உரு
லிண்ணம் செய அவரும் அது நேர்ந்தர்..."

திருநாவுக்கரசரை தனியான ஓர் ஆசனத்தில் அமரச் செய்து தூப தீபம் முதலிய ஆசனங்களைச் செய்து அர்ச்சித்து திருநீற்றினை அணிந்து கொண்டு தம் மனம் மகிழும் படி பெரும் முனிவராய் அவருக்கு அமுது செய்வதற்கு எண்ணி அனுமதி கேட்டார். இப்படி வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தினர் மனம் மகிழும் படி அவரை வரவேற்க வேண்டும் என்ற உயரிய சிந்தனை விருந்தோம்பலில் எடுத்துக் காட்டப்படுகிறது.

" அருந்தவர் அமுது செய்ய தாள்க்கையாள் அரேயால் கை
திருந்திய கருத்திய செழுத்திய தோடு செழுமிய சென்று புக்கல்"

வந்திருந்த விருந்தினருக்கு உணவு அளிக்க எண்ணி வாழையிலையினை பறித்து வர தன் மகனை அனுப்பினார். அப்போது மகனுக்கு நாகம் கையில் தீண்டி விட்டது. பாம்பின் விடம் உடலில் பரவி வேகமாக மயக்க நிலை உருவாகுவதற்கு முன் மிக விரைவாக மனம் வருந்தி வீட்டிற்கு விரைந்து சென்றார். தனக்கு பாம்பு தீண்டியதை

தெரிவித்தால் தவமுனிவர்க்கு விருந்து செய்வதில் இடையூறு ஏற்பட்டு விடும் என்று எண்ணி அவ்விடயத்தினை யாரிடமும் கூறாது மறைந்து வீட்டுக்குள் சென்று தன் தாயாரிடம் வாழையிலையினை கொடுத்து விட்டு நிலத்தில் சாய்ந்தார். இதனூடாக பெற்றோரின் விருந்தோம்பல் தன்மை தன்னால் கெட்டுவிடக்கூடாது என்ற எண்ணமும் வந்திருக்கும் விருந்தினரின் மனம் மகிழும் படி விருந்தளிக்க வேண்டும் என்ற எண்ணமும் இச்சிறுவனின் வருந்தோம்பலினை எடுத்துக்காட்டுகின்றது.

" உளம் பதைத்து உற்று நோக்கி உதிரம் சேற் வடிவம் பேணி
விளக்கிய குறியும் கண்டு விடத்தினால் விழ்ந்தான் என்று
துலங்குதல் இன்றி தொண்டர் அமுது செய்வதற்கு சூழ்வார்"

மகனின் உடலில் உண்டான மாற்றத்தைக் கண்டு நஞ்சினால் தான் என்பதையும் அறிந்து அதனால் சிறிதும் நடுக்கம் இல்லாதவர்களாக நாயனாரும் அவரது மனைவியும் திருநாவுக்கரசுக்கு அமுது வழங்குவதற்கு உரிய செயலில் ஈடுபட்டனர். இப்பாடலின் ஊடாக தனது மகனின் உயிரினும் மேலாக வந்துள்ள சிவனடியாருக்கு உணவு வழங்குவதையே தலையாய கடமையாக எண்ணி விருந்து படைப்பதில் ஈடுபட்டமை விருந்தோம்பலின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

" பெரளரும் புதல்வன் தன்னை பாய்யுனள் செய்து மூடி
புறம்மனை முன்றில் பாங்குர் புடையினுள் மறைந்து வைத்தோன்"

பெறுவதற்கு அரிதான தனது புதல்வனை பாய் ஒன்றில் வைத்து மூடி முற்றத்தின் பக்கத்தில் மறைத்து வெளியே தெரியாத படி பாதுகாத்து வந்துள்ள நாவுக்கரசருக்கு நிச்சயம் அமுது செய்விப்போம் என்ற மனவுறுதியோடு நாவுக்கரசருக்கு விருந்து செய்தனர்.

" படியி சீர் தொண்டனர் முன் பணிந்து எழுந்து
அழுது செய்து எம்குடி முழுதும் உய்ய கொள்வீர் என்று
அவர் கூறக் கேட்டு"

நாயனாரும் அவர் மனைவியாரும் காலம் தாழ்த்தப்படுகிறது. எனவே நீங்கள் உணவினை அருந்த வர வேண்டும் என்று பணிவுடன் கேட்டு அமுது செய்து எம்குலம் முழுவதும் உய்யுமாறு எமக்கு அருள் செய்வீராக என்று கேட்டனர். இவர்களின்

விருந்தோம்பலின் சிறப்பால் இறந்த பிள்ளையை உயிர்ப்பித்துக் கொடுத்தார் நாவுக்கரசர். இவ்வாறு அப்பூதியடிகள் நாயனார் புராணத்தில் விருந்தோம்பலின் சிறப்பு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

**(ஈ) காரைக்கால் அம்மையார் புராணத்தில் விருந்தோம்பல்**

புனிதவதியார் சிறுமியாக இருக்கும் காலத்தில் மணல் விளையாட்டில் ஈடுபடும் போது கூட திருத்தொண்டர்கள் வந்தால் தனது வளர்ப்புத் தாயார் போற்றும் படி அவர்களை வரவேற்று விருந்தோம்பல் செய்தாள். இதனை,

" வன்றல் பயில் வன எல்லாம்
வளர்மதியம் புனைந்த சடை
அன்றர் பிறான் திருவார்த்தை
அணைய வருவன வயின்று
தொண்டர் வரில் தொழுது தா.."

என்ற பாடலினூடாக அறிந்து கொள்ளலாம்.

காரைக்காலம்மையார், சிவனடியார்கள் வரப்பெற்றால் அவர்களுக்கு சிறப்பான உணவுகளை அளித்தும், உயர்ந்த பொன்னும், நவரத்தின மணிகளும், உயர்ந்த ஆடைகளும் மற்றும் பெறுமதியான பொருட்களையும் அன்பு பெருக்கத்தினால் அவர்களுக்கு தேவையானவற்றை தகுதி அறிந்து கொடுத்து வந்தார். இதனை,

" நம்பர் அடியார் அணைத்தாள்
நல்ல திரு அமுது அளித்தும்
செம்பொன்னும் நவமணியும்
செழுந்துகிழும் முதவான
தம்பிரிவினால் அவர்க்கு
தகுதியின் வேண்டுவ கொடுத்தும்
உம்பர் பிரான் திருவடிக்கீழ்
உணர்வு மிக் ஒழுகும் நாள்"

என்ற பாடலினூடாக அறிந்து கொள்ளலாம்.

ஒருநாள் திருத்தொண்டர் ஒருவர் பசியால் வருந்தி அம்மையாரின் மனையில் புகுந்தார். அவர் வேதங்களை அருளிச் செய்த சிவபிரானுக்கு அடிமை பூண்ட மெய் தொண்டர் வந்த நிலை கண்டு சிவனடியாரின் பசியை விரைவில் தீர்ப்பேன் என கருதி அடியாருடைய திருவடிகளை தூய்மை செய்து நீர் முகந்து கொடுத்து அமுது படைக்க ஆயத்தமானார். இதனை,

“ மெய் தொண்டர் நிலை கண்டு
நாதன் தன் அடியாரை
பசி தீர்ப்பேன் என நன்னின்
பாதங்கள் விளக்க நீர்
முன்னளித்தும் பரிகளம் வைத்து
ஏதம் தீர் நல் விருந்தினராய்
இன்னடிசில் ஊட்டுவார்”

என்ற பாடலினூடாக அறிந்து கொள்ளலாம்.

ஒருமுறை சிவனடியார் வந்திருந்த சமயத்தில் வீட்டில் கறியமுது சமைத்து முடிக்கவில்லை. திருவமுது ஆகிய சோறு மட்டும் சமைத்திருந்த நிலையில் அம்மையார் சிவபிரானின் திருவடியார் விருந்திற்கு வருவது நமக்க கிடைத்த பேறு என நினைத்துக் கொண்டே தன்னுடைய கணவன் கொடுத்து அனுப்பிய இரு மாங்கனிகளில் ஒன்றினை எடுத்துக் கொண்டு வந்து அம்மையார் மனமகிழ்ச்சியுடன் அடியார்க்கு அமுது செய்வித்தார். வயதில் மூப்புற்று உடல் தளர்ச்சியும் மிகவும் பசித்திருந்த நிலையில் வருத்தம் அடைந்த திருத்தொண்டராகிய சிவனடியார் இனிய அறுசுவை மிக்க மாங்கனியை உண்டதால் பெரிதும் களைப்பு தீர்ந்து அமுது செய்வித்த அம்மையாரின் செயலை எண்ணி மகிழ்ந்து சென்றார்.

இவ்வாறு காரைக்கால் அம்மையார் புராணத்தில் விருந்தோம்பல் பண்பு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

## 4.5 ஔவையார் பாடல்களில் விருந்தோம்பலும் சமூக நல்லுறவும்

### (அ) ஔவையார் பாடல்கள் அறிமுகம்

அறிவில் சிறந்தவர் எனப் போற்றப்படும் ஔவையார் பல பாடல்களை பாடியுள்ளார். இவர் மக்களை நல்வழிப்படுத்த பாடும் பாடல்களில் நாயன்மார்களையும் நம்மாழ்வார்களையும் குறிப்பிடுகின்றார். ஆத்திச்சூடியை மாணவர்கள் மனப்பாடம் செய்யும் வகையில் சிறு சொற்றொடர்களை கொண்டு 108 பாடல்களாக அமைத்துள்ளார்.

கொன்றைவேந்தன் என்ற நூலை படிப்படியாக மனவளர்ச்சிப் பெற்ற மாணவர்கள் கற்கும் முறையில் 91 பாடல்களை கொண்டு அமைத்துள்ளார். இவரின் பாடல்கள் எளிமையும் இனிமையும் கொண்டு விளங்குகின்றன. இவரின் நூலில் பல அரிய கருத்துக்களையும் நீதிகளையும் காணலாம். மேலும் சமயங்கள் பற்றியும் சில தத்துவங்கள் பற்றியும் தெரிவித்துள்ளார்.

நல்வழி எனும் நூலில் சிவபெருமானின் ஐந்தெழுத்தும் திருநீறும் சிறப்பிக்கப்படுகிறது. கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்கள் இவர் காலத்தில் வாழ்ந்ததாக கூறுவர். விநாயகர் அகவல், ஞானக்குறள் ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார். மேலும் இவருடைய மூதுரை என்ற நூல் வாக்குண்டாம் என்ற கடவுள் வணக்கத்துடன் 30 பாடல்களாக காணப்படுகின்றது. மக்கள் தங்களுடைய வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல வழிகளை நல்வழி என்ற நூலில் 40 பாடல்களில் தெளிவுபட கூறியுள்ளார்.

இவருடைய பாடல்கள் பல நன்னெறி கருத்துக்களுடன் விருந்தோம்பல் பண்பினை பற்றியும் சிறப்பாக எடுத்துரைக்கின்றன.

### (ஆ) ஔவையார் பாடல்களில் விருந்தோம்பல்

#### பசியின் கொடுமை – விருந்தோம்பலின் முக்கியத்துவம்

பசி மிகக் கொடுமையானது. மனிதனுக்கு பசிக்கும் போதுதான் உணவின் அருமை விளங்கும். ஒருவருக்கு பசிக்கும் போது அவருக்கு கொடுக்கும் சிறு பருக்கையும் அமுதமாக இருக்கும். பசியின் கொடுமை பற்றி ஔவையார் தனது வயிறை நோக்கி கூறும் கூற்றுக்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். என் வயிறே! இன்று உணவு கிடைக்கவில்லை. இன்று ஒரு நாளைக்கு மட்டும் சாப்பிடாமல் இரு என்று சொன்னால்

இருக்கமாட்டேன் என்கிறாய். வயிற்றுப் பசி கிள்ளுகிறது. இன்று நிறைய உணவு கிடைத்திருக்கிறது. இரண்டு நாளைக்குச் சாப்பிட்டுகொள் என்று சொன்னாலும் சாப்பிடமாட்டேன் என்கிறாய். உணவுக்காக நான் போராடும் துன்பம் உணவுக்குத் தெரியவில்லை. உடம்புத் துன்பத்தை அதிகமாக்கிக்கொண்டே இருக்கிறாய். அதனால் வயிறே! எப்படியும் உன்னோடு நிம்மதியாக வாழமுடியவில்லை என்கிறார். இதனை,

" ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய்-ஒரு நாளும்
என் நோவு அறியாய் இடும்பை கூர் என் வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது"

எனும் பாடலில் காணலாம்.

மானம் உயிரை விட மேலானது என்பர். இருப்பினும் அந்த மானத்தை விட பசியின் தாக்கம் அதிகமானது என்கிறார் ஔவையார். பசி வந்தால் மானம் உட்பட பத்து முக்கிய விடயங்கள் மனிதனை விட்டகலும் என்கிறார். அவை மானம் - தன்மான உணர்வு, குலம் - குலப்பெருமை பற்றிய சிந்தனை, கல்வி - கற்ற கல்வியின் திறமை, வண்மை - உடல் வளம், அறிவுடைமை - எண்ணிப் பார்க்கும் அறிவு, தானம் - கொடை வழங்கும் வள்ளல் தன்மை, தவம் - தவம் செய்யும் அறநெறி, உயர்ச்சி - உயர்வு பற்றிய எண்ணம், தாளாண்மை - செயலாற்ற முயலுதல், தேனின் கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் - தேனைப் போல் பேசும் பெண்மீது ஆசைப்படுதல் ஆகிய பத்தும் பசி வந்திடப் பறந்து போம் என்கிறார். இதனை,

" மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்."

எனும் பாடலில் காணலாம்.

**வாழ்க்கை நிலையில்லாததால் பகுத்துண்டு வாழுங்கள்**

இறந்தவரை எண்ணி ஆண்டுக்கணக்கில் அழுது புரண்டாலும், இறந்தவரின் நினைவுநாள் ஆண்டாண்டு தோறும் வரும்போதெல்லாம் இறந்தவரை

நினைத்துக்கொண்டு அழுது அழுது புரண்டாலும், மாண்டுபோனவர் திரும்பி வருவது இல்லை. மாநிலத்தில் உள்ளவர்களே! அழவேண்டா. நமக்கும் அவர் போன அதே வழிதான். எனவே, எனக்கு இவை எதற்கு என்று எண்ணி மற்றவர்களுக்கு உணவிட்டுத் தானும் உண்டு வாழ்ந்துகொண்டிருங்கள். நாம் போகும் வரை இட்டும் உண்டும் வாழ்ந்துகொண்டிருங்கள் என்கிறார் ஔவையார். இதனை,

" ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர் - வேண்டாம்
நமக்கும் அது வழியே நாம் போம் அளவும்
எமக்கு என்" என்று இட்டு உண்டு இரும்"

எனும் பாடலில் காணலாம்.

இதுபோல் மக்கள் பணத்துக்காகப் பாடுபடுகின்றனர். பணத்தைத் தேடிக்கொள்கின்றனர். தேடிய பணத்தை யாருக்கும் தெரியாமல் புதைத்து வைக்கின்றனர். அனுபவிக்காமல் மறைத்து வைக்கின்றனர். இவர்கள் கேடு கெட்ட மனிதர்கள். இப்படிக் கேடுகெட்ட மனிதரே! ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். உங்கள் உடம்புக் கூட்டை விட்டுவிட்டு உங்கள் ஆவி போன பின்பு அந்தப் பணத்தை யார்தான் அனுபவிக்கப் போகிறார்கள்? பாவிகளே! சொல்லுங்கள் என விருந்தோம்பல் பண்பற்ற மானிடர்களைப் பார்த்து வினவுகின்றார் ஔவையார். இதனை,

" பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்-கூடுவிட்டு இங்கு
ஆவிதான் போயின பின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்?"

எனும் பாடலில் காணலாம்.

### (03) நன்மக்கள் விருந்தோம்பலைச் செய்வர்

விருந்தோம்பலைச் செய்பவர்கள் மேன்மக்கள் என்கிறார் ஔவையார். ஆற்றில் வரும் மழைவெள்ளத்தின் வரத்து அற்றுப்போயிற்று. ஆற்று மணல் நடப்பவரின் காலடியைச் சுடுகிறது. அப்படிப்பட்ட காலத்திலும் ஊற்று வெள்ளம் வந்து உலகுக்கு நீரை ஊட்டும். நல்ல குடியில் பிறந்த மேன்மக்களும் அப்படித்தான். தம் செல்வத்தை இழந்து

வறுமையில் வாடினாலும் மனம் ஒப்பி இல்லை என்று சொல்லமாட்டார் என்கிறார். இதனை,

“ ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு
ஊற்றுப் பெருக்காம்உலகு ஊட்டும்-ஏற்றவர்க்கு
நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து.”

### (04) விருந்தோம்பலுக்கு ஈடான பண்பாடு வேறில்லை

மற்றவருக்கு விருந்தோம்பி வாழ்வதே மேலான வாழ்க்கை என்கிறார் ஔவையார். இதனை சிறந்த எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குகின்றார். ஆற்றங்கரையில் ஆற்றுநீரை உண்டுகொண்டு வளமோடு இருந்த மரமும் ஒருநாள் விழுந்துவிடும். அரசனே எண்ணிப் பார்க்கும்படி பெருமிதத்தோடு வாழ்ந்த வாழ்வும் ஒருநாள் விழுந்துவிடும். பின் எதுதான் விழாது என்கிறீர்களா? உழுது, அதன் விளைச்சலை உண்டு வாழ்தலே ஏற்றம். பெருமை. இதற்கு ஒப்பான வாழ்வு வேறு எதுவும் இல்லை. வேறு எந்தப் பணியாக இருந்தாலும் அதற்குப் பழுது உண்டு என்கிறார் ஔவையார். இதனை,

“ ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும் வீழும் அன்றே - ஏற்றம்
உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்
பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு”

எனும் பாடலில் காணலாம்.

### (05) விருந்தோம்பலை வன்முறையாலும் பெறலாம்

தாய், தந்தையர், உடன்பிறந்தவர், உறவினர்கள், இந்த உலகில் பெருமை மிக்க நாட்டில் வாழ்பவர் என எவராயினும், நச்சரித்து வற்புறுத்தினால்தான் கொடுப்பார்கள். வணங்கிக் கேட்டால் தரமாட்டார்கள். உதைத்தால் கிடைக்கும். கெஞ்சினால் கிடைக்காது. கொடை வன்முறையால் பெறலாம் என்பது ஒரு கோட்பாடு. இதனை ஔவையார்,

“ பெற்றார் பிறந்தார் பெரு நாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் என வேண்டார்-மற்றோர்

இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம்."

எனும் பாடலில் எடுத்துக்காட்டுகின்றார்.

**(06) விருந்தோம்பலினால் இம்மைப் பயன் ஏற்படும்**

மரம் பழுத்தவுடன் வௌவாலை " வா" என்று கெஞ்சிக் கேட்டு அழைப்பார் யாரும் அந்த மரத்தடியில் இருப்பதில்லை. (வௌவால் தானே தேடிக்கொண்டு வந்துவிடும்). கன்றை உடைய பசு தன் கன்றுக்கும் கறப்பவர்க்கும் பால் அமுதத்தைச் சுரந்து வழங்கும். அதுபோல ஒருவர் தன்னிடம் உள்ள பொருளை தனக்கென்று ஒளித்து வைத்துக்கொள்ளாமல் வழங்குவாரேயானால் உலகத்தில் உள்ளவர்களெல்லாம் அவருக்கு உறவினர் ஆகிவிடுவர். இதனை ஔவையார்,

" மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை - சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்.

எனும் பாடலில் எடுத்துக்காட்டுகின்றார்.

**(07) விருந்தோம்பலினால் மறுமைப் பயன் ஏற்படும்**

(உலையில் அரிசி போட்டு அடுப்பு எரித்தால்தானே சோறு பொங்கும்.) அதுபோல, முன்பு கொடுத்து வைத்திருந்தால்தானே இன்று செல்வம் நமக்குத் திரும்ப வந்து சேரும். பாவம் செய்துவிட்டு, முயன்று ஈட்டியும் பணம் சேரவில்லையே என்று தெய்வத்தை நொந்துகொள்வதால் என்ன பயன். இதனை ஔவையார்,

" செய் தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இரு நிதியம்?-வையத்து
அறும் பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று
வெறும் பானை பொங்குமோ மேல்!"

எனும் பாடலில் எடுத்துக்காட்டுகின்றார்.

ஆற்றில் வெள்ளம் வரும்போதெல்லாம் ஆற்றில் இருக்கும் மணல் மேடும், நீர் தேங்கி நிற்கும் மடுவும் இடம் மாறுவது உண்டு. அதுபோல, தருமத்தைச் செய்திருந்தால் அந்தத் தருமச் செயல் நமக்குச் சோறு போடும். தருமம் செய்யாவிட்டால் சோறு இல்லாமல் தண்ணீரைத் தான் உண்ணவேண்டி வரும். தருமம் செய்வதால் உள்ளத்து நீர்மை பெருமை கொண்டு உயரும். இதனை ஔவையார்,

" ஆறிடும் மேடும் மடுவும்போ லாம்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீரமை வீறும் உயர்ந்து.

எனும் பாடலில் எடுத்துக்காட்டுகின்றார்.

**பயிற்சி வினாக்கள்**

1. திருமந்திரம் வெளிப்படுத்தும் விருந்தோம்பல் சிந்தனைகளை விளக்கி, அவற்றினூடாக வெளிப்படும் சமூக நல்லுறவினை தெளிவுபடுத்துக?
2. தேவாரத்தின் பொருள் மரபை விளக்குக?
3. திருவாசகத்தின் காலப்பிண்ணனியை தருக?
4. தேவாரம் மற்றும் திருவாசகத்தில் காணப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளை விளக்குக?
5. பெரியபராணத்தில்

   (அ) காரைக்காலம்மையார்

   (ஆ) இளையான்குடிமாறநாயனார்

   ஆகியோரின் சரித்திரங்களில் காட்டப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளையும் சமூக நல்லுறவிற்கான அடிப்படைகளையும் எடுத்துக்காட்டுக.
6. ஔவையார் பாடல்களில் வெளிப்படும் விருந்தோம்பல் சிந்தனைகளை விபரிக்குக?

**உசாத்துணைநூல்கள்**


1. இராசுப்பிரமணியம்.எம்.ஏ., (2002), பெரியபுராணம் மூலமும் தெளிவுரையும் தொகுதி 01, திருமகள் நிலையம், சென்னை.
2. துரைசிங்கம்.த., (2003), அமுதத் தமிழ் தந்த ஔையார், உமா பதிப்பகம், கொழும்பு.
3. நடராசன்.பி.ரா., (2003), திருநாவுக்கரசர் சுவாமிகள் தேவாரம், உமா பதிப்பகம், சென்னை.
4. நடராசன்.பி.ரா., (2000), சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், உமா பதிப்பகம், சென்னை
5. நடராசா.ஆ., (2006), திருமந்திரத்தில் வாழ்வியல், டெக்னோ பிரிண்டர், கொழும்பு.
6. மகாலட்சுமி.தி., (2014), திருமந்திரம் காட்டும் வாழிவயல் நெறிகள், உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.
7. முத்தப்பன்.பழ., (2006), திருக்கோவையார், உமா பதிப்பகம், சென்னை
8. ரேனுகா சுப்ரமணியம்., (2008), ஔவையார் பாடல்கள் உணர்த்தும் நன்நெறி பண்புகள், மலேசியா பல்கலைக்கழகம்.
9. ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்., (1953), திருமந்திர விளக்கம், சுத்தானந்த பதிப்பகம், கொழும்பு.
10. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்., திருவாசகம், ஸ்ரீ ராமகிருஸ்ண தபோவனம், திருநெல்வேலி